# தமிழ்ப்பெரு வள்ளல்

UNIVERSITY EXTENSION LIBRARY
16 DEC 1957
MADURAI

இயற்றியவர் :
அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர்
த்துவான் திரு. மு. அருணாசலம் பிள்ளை அவர்கள்

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

"தமிழ் மனை"
அண்ணாமலைநகர்

[...ப்புரிமை] [விலை ரூ. 1–12–0

முதற் பதிப்பு—பிப்ரவரி 1951
இரண்டாம் பதிப்பு—ஜூன் 1953

Kabeer Printing Works, Madras (2248)

# முன்னுரை

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தை நிறுவிய தமிழ்ப்பெரு வள்ளல் டாக்டர். இராசா. சர். மு. அண்ணுமலைச் செட்டியார் அவர்களை உலகம் நன்கு அறியும். தம் முயற்சியாற் பெரும்பொருள் ஈட்டி, அப்பொருளைக் கல்விவளர்ச்சி முதலான பொதுநலப் பணிகளுக்குப் பெரிதும் பயன்படுத்திய அவர் வரலாற்றினைப் பொதுவாகத் தமிழ்மக்களும், சிறப்பாகத் தமிழ்மாணவரும் அறிந்து கொள்ளுதல் வேண்டற்பாலதொன்றாகும். அவ்வரலாறு நம் நாட்டு இளைஞர்களுக்கு ஒரு வழிகாட்டியாய் நின்று வாழ்க்கையினை வளமுறச் செய்யும் என எண்ணுகிறேன்.

இந்நூல் எழுதுதற்குப் பல்லாற்ருனும் உதவி புரிந்த அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர், பேரறிஞர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்களுக்கும், பொருட்காட்சிச் சாலைகள் பற்றிய விளக்கங்களைக் குறித்து உதவிய விலங்குநூற் பேராசிரியர் திரு. ஆர். வி. சேஷையா (எம். ஏ.) அவர்களுக்கும், தாவரநூற் பகுதி விரிவுரையாளர் திரு. சி. சீநிவாசன் (பி. எஸ். சி.) அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியறிதல் உரியதாகும்.

அண்ணுமலைநகர்
6—2—1951.

மு. அருணுசலம் பிள்ளை

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| | முன்னுரை | ... | 3 |
| 1. | தோற்றமும் இளமையும் | ... | 7 |
| 2. | ஈட்டலும் காத்தலும் | ... | 16 |
| 3. | பொதுநலப் பணிகள் | ... | 22 |
| 4. | வெளிநாட்டு யாத்திரை | ... | 33 |
| 5. | கல்வித் தொண்டு | ... | 40 |
| 6. | பல்கலைக் கழகச் சட்டம் | ... | 47 |
| 7. | அண்ணாமலைப் பல்கலைக் கழக அமைப்பு | ... | 56 |
| 8. | பல்கலைக் கழக வளர்ச்சியும் ஆட்சி முறையும் | ... | 66 |
| 9. | தமிழிசைத் தொண்டு | ... | 87 |
| 10. | தமிழ்ப் பற்று | ... | 98 |
| 11. | பட்டம் பதவி பாராட்டு | ... | 108 |
| 12. | பெரும்பிரிவும் அருங்குணங்களும் | ... | 128 |
| | பிற்சேர்க்கை | ... | 143-144 |

UNIVERSITY LIBRARY MADURAI

# தமிழ்ப்பெரு வள்ளல்

## 1. தோற்றமும் இளமையும்

பாண்டிவள நாட்டில் செட்டிமார் நாடு என்றதொரு பகுதியுள்ளது. அஃது இராமநாதபுரம் மாவட்டத்திலும் புதுக்கோட்டையை அடுத்தும் இருக்கின்றது. அதன்கண், நாட்டுக்கோட்டை நகரத்தாரென்னும் தனவணிக மரபினர் நெடுங்காலமாக வாழ்ந்துவருகின்றனர். உள்நாட்டிலும் இலங்கை பர்மா முதலான வெளி நாடுகளிலும் வாணிகஞ் செய்து பொருளீட்டுதல் அவர்கள் தொழிலாகும். அவ்வாறு ஈட்டப் பெற்ற பொருளின் பயனைத் தாமும் தம்மைச் சார்ந்தவருமே துய்த்தல் அமையும் என அவர்கள் கருதுவதில்லை. 'செல்வத்துப் பயனேயீதல்' என்ற அறிவுரையைக் குறிக்கோளாகக் கொண்டு, கோயில் கட்டுதல், குளந்தொட்டல், பூங்கா வளர்த்தல், தண்ணீர்ப் பந்தர் வைத்தல், அன்னசத்திரம் பசுமடம் அமைத்தல் முதலான அறங்களைச் செய்வர். மேலும், தொடக்கநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், தேவார திருவாசக பாடசாலை, வேதாகம பாடசாலை, மருத்துவ நிலையம் ஆகிய இவற்றையும் அவர்கள் நிறுவுவர். இங்ஙனம், தமக்கும் பிறர்க்கும், இம்மை மறுமை இரண்டற்கும் பயன் தரும் நற்செயல்களை விருப்பத்துடன் செய்வது அத்தன வணிக மரபினர்க்கு இயல்பாகும். முன்பு தொண்ணூற்ருறு ஊர்களில் இருந்த அவர்கள் இப்போது

எழுபத்தாறு ஊர்களில் இனிது வாழ்கின்றனர். சைவ சமய குரவர்களாலும் வைணவ சமய ஆழ்வார்களாலும் பாடப்பெற்று, பிற்காலத்துச் சோழ பாண்டியர்களால் பேணப்பட்டு வந்த பழங்கோயில்களைச் செப்பனிட்டுத் திருப்பணிகள் செய்து நிலைநாட்டிய பெருமை அத் தனவணிக மரபினர்க்கே சிறப்பாக உரியதாகும்.

அச்செட்டிமார் நாட்டில், காரைக்குடி காத்தான் என்பது கவின் மிக்கதொரு நகரமாகும். அது, திருமகள் நடமிடும் செல்வச் செழிப்பு வாய்ந்தது; வானளாவிய மாட மாளிகைகளையுடையது; மக்கள் வாழ்க்கைக்கு வேண்டுவன அனைத்தும் நிறைந்திருப்பது; புதுமையெழிலும் பழமை நலமும் பொருந்தித் திகழ்வது. அந்நகரத்தில், சிறிதேறக் குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன், வெ. சா. குடும்பம் என ஒரு குடும்பம் மேன்மையுற்றிருந்தது. அக்குடும்பத்தின் வழித்தோன்றலாகப் பிறந்த முத்தைய செட்டியார் என்பவர், இளமைப் பருவத்திலே எண்ணும் எழுத்தும் கண்ணெனப் போற்றிக் கற்றார்; கற்றதனாலாய பயன் வாலறிவன் நற்றாள் தொழுதலே என்பதைக் கடைப்பிடித்தார்; தம் முன்னோர்களைப் போலவே தாமும், தில்லைக் கூத்தப் பெருமானிடம் பேரன்பு பூண்டொழுகினார். அவர், தக்க வயது வந்தபின் மீனாட்சியம்மை என்னும் கற்பரசியை மணந்து இல்லற மென்னும் நல்லறம் நடாத்தினார்; வாணிகத் தொழிலையும் வளம்பெறச் செய்தார். நல்லூழும் நன் முயற்சியும் உள்ள ஒருவர்க்கு ஆக்கம் உண்டாவதற்குத் தடையேது! அசைவிலா ஊக்கம் உடைய முத்தைய செட்டியார்பால் ஆக்கம் அதர்வினாய்ச் சென்றது. அவர், வாணிகம் செய்து பொருளீட்டத்

தொடங்கியது முதல் தமக்குக் கிடைக்கும் ஊதியத்தில் ஒரு பகுதியை அறஞ் செய்தற்கென்றே தொகுத்துவந்தார். அவ்வாறு ஈண்டிய தொகை நாளுளும் வளர்ந்து வரலாயிற்று.

அப் பெரும்பொருளைக் கொண்டு முத்தைய செட்டியார் சிவத் திருப்பணிகள் செய்ய முற்பட்டார். சிதம்பரம் என வழங்கும் தில்லைப் பதியில், எல்லையிலா இன்ப நடம் புரியும் அம்பலவாணரிடத்து அவர் உள்ளம் ஈடுபட்டது. கூத்தப் பெருமான் திருக் கோயிலைப் பழுது பார்த்துச் செப்பஞ் செய்து புதிய திருப்பணிகளும் முடித்துக் குடமுழுக்கும் நிகழ்த்து வித்தார்; அம்பலவாணருக்கு நாடோறும் காலையிற் பால்முழுக்காட்டும் இரவு இரண்டாங் காலத்தில் அன்னப் பாவாடையும் நடைபெறத் திட்டம் வகுத்தார்; இறைவனுக்குத் தமது பூங்காவிலிருந்தே நறு மண மலர் கொய்து மாலைகள் தொடுத்துச் சாத்தப் பெறுதல் வேண்டுமெனத் திருநந்தனவனம் அமைத்தார்; சைவ சமய குரவர்கள் அருளிச் செய்த தேவாரம், திருவாசகம் முதலான திருமுறைகளை நன் மாணக்கர் வரன்முறையாகக் கற்கவும், ஆண்டவன் திருமுன்னர் அவற்றை ஓதி உய்தி பெறவும் வேண்டு மெனக் கருதித் தேவார பாடசாலை நிறுவினர்; தலயாத்திரை செய்யும் அன்பர்களும் ஏழைகளும் உண்டுகளித்தற்கு அன்ன சத்திரம் அமைத்தார். இவ்வாறே திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த கருவூரிலும் பசுபதீசுரர் திருக்கோயிலைப் புதுப்பித்து நந்தவனமும் பாடசாலையும் உண்டாக்கினர்.

கன்னி நாட்டிற் பிறந்த இச்சைவ சீலர், காவிரி நாட்டிற் செய்த அறங்களோடு நின்றாரல்லர்; கங்கை வளங் கொழிக்குங் காசிப்பதியிலும் கருத்தைச்

செலுத்தினர். அந்நாளில், நெடுந் தொலைவு தொடர்ந்து செல்லுதற்கேற்ற ஊர்திகள் இல்லாமையால், திருநாவுக்கரசர் கைலைகாணச் சென்றதுபோல் இவரும் காலாலே நடந்து சென்று காசியையடைந்தார்; விசுவநாதரையும் விசாலாட்சியையும் மனமொழி மெய்களால் வழிபட்டார்; அதன் பின், அங்கும் நிலையானதோர் அறஞ்செய விரும்பித் தன வணிகப் பெருமக்கள் பலரைத் துணையாகக் கொண்டு சத்திரம் ஒன்று கட்டுவித்தார். அது நாட்டுக் கோட்டை நகரத்தார் சத்திரம் என இன்றும் நிலை பெற்றுப் பலர்க்கும் பயன் விளைத்து வருகின்றது. மேலும், கேதார கட்டத்தில், அண்ணமலையார் கோயிலொன்று கட்டி முடித்து, அதனைத் திருப்பனந்தாள் காசிமடத்துத் தலைவர் அவர்களே மேற்பார்த்து வரும்படி அன்னர் பொறுப்பில் விட்டார். மேலே கூறிய அறங்களெல்லாம் எஞ்ஞான்றும் முட்டுப்பாடின்றி நடைபெறுவதற்கு வேண்டிய மூலப் பொருளுந் தொகுத்து வைத்தார். இங்ஙனம், அறத்தாற்றிற் பொருளீட்டி, அப்பொருளை ஆண்டவன் திருக்கோயில் திருப்பணிக்கும், அரனடியாரும் ஏழைகளும் அறுசுவை யமுதருந்தி அகமகிழ்தற்கும், சைவத்திருமுறைகள் தழைத்தோங்குதற்கும், இன்ன பிற அறங்களுக்கும் பயன்படுத்தித் தாமும் இன்புற்று உலகையும் உவகையுறச் செய்தார். இத்தகைய உத்தமப் பண்புகள் வாய்ந்த முத்தைய செட்டியாருக்குத் திருவருளால் மூன்று பெண்மக்களும் நான்கு ஆண் மக்களும் பிறந்தனர். ஆண்மக்கள் சிதம்பரஞ் செட்டியார், இராமசாமி செட்டியார், அருணசலம் செட்டியார், அண்ணமலைச் செட்டியார் என்பவராவர். இந்நால்வருள் அருணசலஞ் செட்டியார்

இளமையிலேயே இவ்வுலக வாழ்வை நீத்தார். மற்றைய மூன்று ஆண்மக்களும் மூன்று மாணிக்கங்கள் போல்வர். இம்மூவரால் தந்தையார் புகழ் மேலும் மேலும் பரவுவதாயிற்று.

முத்தைய செட்டியாரின் மூத்த புதல்வராகிய சிதம்பரஞ் செட்டியார் குலத்தொழிலைச் சிறப்பாகச் செய்து செல்வம் செழிக்கப் பெற்ருர். இவர், செல்வத்திற்கேற்ற செல்வாக்கும் நல்ல தோற்றமும் உடையவர் ; தஞ்சைக்கும் காரைக்குடிகாத்தானுக்கும் அஞ்சல்கள் வரச்செய்து, தம் ஊரில் அஞ்சல் நிலையம் உண்டாக்க முயன்று நிறுவினுர் ; செட்டி நாட்டு ஊர்களுக்குப் போய்வர ஒழுங்கான சாலைகள் அமைத்தார்.

இரண்டாம் புதல்வராகிய இராமசாமி செட்டியார் கல்வி கேள்விகளிற் சிறந்தவர் ; தில்லையம்பலவாணரிடம் பேரன்பு பூண்டவர் ; சைவ சமயச் சொற்பொழிவு செய்யுந் திறமை படைத்தவர். இவர், தம் தந்தையார் செய்த அறங்களைப் பேணி வளர்க்கவும், தாமும் பல நன்மைகள் செய்யவும் வேண்டிச் சிதம்பரத்திலே பல ஆண்டுகளிருந்து வாழ்க்கை நடத்தினுர் ; எட்டு ஆண்டுகள் (1908–1916) சிதம்பரம் நகராண்மைக் கழகத் தலைவராகவும், சில ஆண்டுகள் தாலூகாப் போர்டு தலைவராகவும் இருந்து சிறந்த பணியாற்றினுர் ; "நீரின் றமையா துலகு", "கல்வியழகே அழகு" என்னும் இரண்டு நீதிகளையும் நினைவிற் கொண்டு, நகராண்மைக் கழகப் பொதுப் பொருளுடன் இலட்சக் கணக்கான தமது பொருளையும் செலவு செய்து நகரமுழுதுங் குழாய்கள் பதித்து மக்கள் யாவரும் காவிரி நன்னீர் பருகிக் களிப்புறச் செய்தார் ; சிறுவர் சிறுமியர் கல்வி பயிலுதற்கு ஓர்

உயர்நிலைப்பள்ளி நிறுவி அதற்கு வேண்டும் மூலப் பொருளுந் தொகுத்து வைத்தார். ஆயிரக் கணக் கான மாணவ மாணவியர் இன்றும் அப்பள்ளியில் கல்வி பயின்றுவருகின்றனர். அஃது இராமசாமி செட்டியார் உயர்நிலைப் பள்ளியென மேன்மையுற்று விளங்குகின்றது. நகராண்மைக் கழகத்தார் முதன் மையாகக் கருத்துச் செலுத்த வேண்டிய கல்வி சுகா தாரம் என்னும் இரண்டற்கும் இவர் நிலையாகச் செய் திருக்கும் செயல்கள் அறிந்து பாராட்டுதற்கு உரியன. இவருடைய பொதுநலப் பணிகளைக் கண்டு மகிழ்ந்த அரசாங்கத்தார் "திவான் பகதூர்" என்னும் பட்டம் வழங்கி இவரைப் பெருமைப்படுத் தினர். தனவணிகர் மரபிலிருந்து சென்னைச் சட்ட சபையில் உறுப்பினர் பதவி பெற்ற முதல்வரும் இவரேயாவர்.

இத்தகைய நாடும் மரபும் குடியும் விளங்க, விஷு ஆண்டு புரட்டாசித் திங்கள் 16-ஆம் நாள் (30-9-1881) வெள்ளிக்கிழமை மூலநன்னாளில், நாளுங் கோளும் நலனுற அமைந்த நல்லோரையில், நம் அண்ணாமலை யார் பிறந்தார். 'ஆண்மூலம் அரசாளும்' என்பது ஆன்றோர் அநுபவ மொழியாகும். அஃது இவர் திறத்தில் முற்றும் உண்மையாயிற்று. இவர் பிறந்த மூலநாள், உலகத்து மக்கள் பலரும் பலவகையான நலங்கள் பெறுதற்கு மூலமாயிருந்தமையால், அச் சிறப்பைப் பாராட்டி,

"கல்விக்கு மூலம் கமழ்வெண் கமலத்துச்
செல்விக் குவகை செயுமூலம்—வெல்விக்குந்
தென்னாடு வாழ்மூலம் தெள்ளியன் அண்ணாமலையாம்
நன்னா யகன்மூல நாள்"

என்று சேது சமஸ்தான மகாவித்துவான், பாஷாகவி

சேகரர், ரா. இராகவையங்காரவர்கள் பாடியிருத்தல் அறிந்து இன்புறற்பாலதாம். நம்நாட்டுச் சிறுர்கள் கற்றற்குரிய தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக் கழகம் ஈருய பல கலைக்கோயில்கள் நிறுவிக் கலைகள் பல வற்றையும் வளர்த்தற்கு, இவர் பிறந்த மூலநாள் ஏது வாயினமையின் அது கல்விக்கு மூலமாயிற்று. திரு மகள் அருளாற் கிடைத்த செல்வம் நல்வழியிற் பயன் படுத்தப்பட்டமையால் அச் செல்வி உவகை யுறு தற்கும் இந்நாள் மூலமாயிற்று. பிறநாட்டவரும் வியந்து பாராட்டும் பெருங்கொடை வள்ளலைப் பெற்றேமென்று தென்னுடு செம்மாந்து வாழ்தற்கும் இந்நாள் மூலமாயிருந்தது. ஆதலின், அவ்வாறு கூறியது மிகவும் பொருத்த முடையதேயாகும்.

பெற்ருேர் இருவரும் இக்கடைசிப் பிள்ளையைப் பேரன்புடன் வளர்த்தனர். செல்வக் குடியிற் பிறந்த இக்குழந்தை யாதுங் குறையின்றி இளம்பிறைபோல் வளர்ந்து வந்தது. "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்பார்கள். அதுபோலவே, இவர் எதிர் காலத்தில் எய்தும் அழியாப் புகழுக்கேற்ற அரும் பெரும் பண்புகள் இளமையிலே இவர்பால் அமைந் திருந்தன. அவை கூரிய அறிவும், கொடுக்குந் தன்மையும், அஞ்சாநெஞ்சமும், ஆள்வினைத் திறமும் முதலியனவாம். ஒருவர், தாம் பிறந்த குடியை உயரச் செய்வதே அருமை. நம் அண்ணுமலையார் தாம் பிறந்த குடியையும் குலத்தையும் நகரத்தையும் நாட்டையும் உலகறிய உயர்த்திஞர். இவரது பிறப் பால் முத்தைய செட்டியார் குடும்பம் முதன்மை யுற்றது; காஞுடுகாத்தான் கவின் மிகப் பெற்றது; நகரத்தார் மரபு நன்கு செழித்தது; தமிழர் தலை நிமிர்ந்தார்; தமிழ் நாடு தனிப்பெரு நாடாயிற்று;

திசையனைத்தின் பெருமை யெல்லாந் தென்றிசையே வென்றேறியது. வள்ளல் அண்ணாமலையாரின் மாண்புகள் வகுத்துரைக்குந் தரத்தனவல்ல. "விரிப்பின் அகலும் தொகுப்பின் எஞ்சும்" எனச் சங்கத்துச் சான்றோர் கூறியவாறு, விரித்துக் கூறப்புகின் விரிந்துகொண்டே செல்லும்; தொகுத்துக் கூறப்புகின் அவருடைய புகழ் முழுதுங் கூறியதாகாது. அவர் வாழ்க்கையில் மேற்கொண்டு வெற்றி பெற்ற செயல்களில் ஒவ்வொன்றையும் உற்று நோக்கின் இவ்வுண்மை புலனாகும். குலம், மதம், கொள்கை என்பவை பற்றிய வேறுபாடுகள் இவர்பால் என்றுங் காணப்படாதன. "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்ற விரிந்த நோக்கமே இவரிடம் மிக்கு விளங்கியது. இவை யனைத்தும் உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை யென்பதை மேலே காண்போம்.

'இளமையிற் கல்' என்ற ஔவைப் பிராட்டியார் அறிவுரைப்படி, அண்ணாமலையார் கற்றற்குரிய பருவத்தில் தம் ஊரிலுள்ள ஆரம்பப் பள்ளியிற் கல்வி பயின்றார்; சில ஆண்டுகளில் தமிழ் மொழியில் எழுதவும் படிக்கவுங் கற்றுக்கொண்டு எண்சுவடிக் கணக்கில் நல்ல தேர்ச்சி பெற்றார்; கருவூரில் தம் தந்தையார் சிவன் கோயில் திருப்பணி செய்த காலத்தில், தாமும் உடன்சென்று ஆங்கு உள்ள பள்ளியிற் சேர்ந்து ஆங்கிலம் பயின்றார்; சிறந்த ஆசிரியர்களிடம் தனியே ஆங்கில மொழிப் பயிற்சியும் தமிழ்ப் பயிற்சியும் பெற்றமையால், பின்னாளில், அரசியல் தலைவர்களும் பெரும்புலவர்களும் வியந்து பாராட்டும் வண்ணம், ஆங்கிலத்திலும் தமிழிலும் அழகாகப் பேசவும் எழுதவும் திறமையெய்தினர். இவரது பேச்சிலும் எழுத்திலும் சிறிதும் முட்டுப்பாடு இராது;

சொற்சுருக்கமும் பொருட்பொலிவும் கருத்துத் தெளிவும் அமைந்திருக்கும். இயற்கையான நுண்ணறிவும் இடையருத முயற்சியுமே இவருடைய பேரறிவுக்குக் காரணமாயிருந்தன. பள்ளிப் படிப்பைக் காட்டிலும் குலத்தொழிற் பயிற்சியே இவருக்குப் பெரும்பயன் விளைப்பதாயிற்று.

இவ்வாறு, தமிழிலும் ஆங்கிலத்திலும் அறிவு பெற்றபின், தம் தந்தையாரிடமிருந்தே தொழிற் பயிற்சி பெற்ருர். கணக்குக்களை நுட்பமாகவும் விரைவாகவும் கண்டுகொள்வார். தொழில் துறைகளுக்கு நாள்தோறும் பல கடிதங்கள் எழுதுவது தவிர்க்கப்படாத செயலாகும். அவற்றை யெல்லாம் தம் தந்தையார்க்கு உதவியாயிருந்து இவர் தாமே யெழுதுவார். இவருடைய எழுத்துக்கள் தெளிவாக இருக்கும். பொருளீட்டுந் துறையில் பேரறிவு படைத்த தந்தையாரிடமிருந்து பயிற்சி பெற்றமையால் அண்ணுமலையாரும் அத்துறையில் சிறந்த அறிவும் ஆற்றலும் பெற்ருர்.

இவ்வாறு, அறிவாற்றலும் பிற குணநலங்களும் பெற்று விளங்கிய அண்ணுமலையார் மணப்பருவம் எய்தியபோது (1895), தந்தை முத்தைய செட்டியார் இவருக்குத் திருமணஞ் செய்து பார்க்க விரும்பினர்; பள்ளத்தூர் என்னும் நகரத்தில் செல்வத்திற் சிறந்தவரும் பெருந்தகையாளரும் ஆகிய பழநியப்ப செட்டியாருடைய அருமை மகள், திருவளர் செல்வி, சீதை ஆச்சி என்னும் மாதரசியைத் தேர்ந்தெடுத்தார். அண்ணுமலையார்க்குப் பள்ளத்தூர் நகரத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. “குலமகட்குத் தெய்வம் கொழுநனே” என்ற கொள்கையிற் பிறழாத இப் பெண்ணரசி, தம் கணவருக்கு உவப்பான பணி

புரிதலே ஆண்டவனுக்குச் செய்யும் வழிபாடென மதித்து நடந்தார். இருவரும் மலரும் மணமும்போல் மனவொற்றுமை பெற்றனர். இல்வாழ்க்கையின் பண்பும் பயனுமாகிய அன்பும் அறனும் உடைய நல்வாழ்வு நடந்தேறியது.

தந்தை முத்தைய செட்டியார், மக்களெல்லோர்க்கும் மணமுடித்துக் குடும்பத்தையும் மேன்மேலுயர்த்தி மகிழ்ந்தார். இம்மை வாழ்வில் எய்தும் பேறுகளெல்லாம் நிரம்பப் பெற்ற அவர், தமது 62-ஆம் வயதில், (1901-ஜனவரி) இறைவனடி சேர்ந்தார். ஓராண்டு சென்றபின் மக்கள் மூவரும் மன ஒற்றுமையுடன் குடும்பப் பிரிவு செய்து கொண்டனர். அண்ணாமலையார்க்கு அப்போது வயது இருபத்தொன்றாயிற்று.

## 2. ஈட்டலும் காத்தலும்

இவ்வுலகில் நல்வாழ்வு வாழ்தற்கு இன்றியமையாது வேண்டப்படுவது பொருளாகும். பொருளின் உதவியின்றி அறனும் இன்பமுமாகிய இரண்டினையும் எய்துதல் இயலாது ; அங்ஙனமே ஏனைய செயல்களும் இனிது நடைபெறுவாம். “பொருளில்லார்க்கிவ்வுலகமில்லை” “முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்” என்னும் நீதிகள் இதனை வலியுறுத்தற்கே யெழுந்தன. இத்துணைச் சிறந்ததான பொருளைப்பெறுதற்கு ஒவ்வொருவரும் இயன்றதொரு வினையை மேற்கோடல் வேண்டும். ‘வினையே ஆடவர்க்கு உயிர்’ என்பர் பெரியோர். வினைசெய்து பொருளீட்டுதற்கு மனத்திட்பமாகிய ஊக்கம் ஒருதலை

யாக வேண்டும். ஊக்கமில்லையேல் முயற்சியில்லை; முயற்சியில்லையேல் பொருளில்லை; பொருளில்லையேல், ஈதலும் இசைபட வாழ்தலும், இவற்றனெய்தும் பெருமிதமும் இல்லையென்பது சொல்லாமலே விளங்கும். இருபத்தோராட்டைப் பருவத்தாராய அண்ணமலையார் ஊக்கத்துடன் தொழிற்றுறையில் ஈடுபட்டார். தம் பாகத்திற்குக் கிடைத்த கடைகள் எல்லாவற்றையும் மேற்பார்க்கும் பொறுப்பைத் தாமே ஏற்றுக் கொண்டார். அக்கடைகள் தென் இந்தியா, வட இந்தியா, இலங்கை, பர்மா, மலேயா, சையாம், செய்கோன், கிழக்கிந்தியத் தீவுகள் முதலிய பல இடங்களிற் சிறியனவும் பெரியனவுமாகப் பரவியிருந்தன. ஒவ்வொரு கடையிலிருந்து வரும் கணக்குக்களை இவரே ஒத்துப் பார்ப்பார்; கடைகளுக் கெல்லாம் காலந்தவருமற் கடிதங்கள் எழுதுவார். "இதனையிதனல் இவன்முடிக்கும் என்றய்ந்து, அதனை அவன்கண் விடல்" என்ற திருவள்ளுவர் ஆணையை மேற்கொண்டு, அவ்வவ் விடங்களிற் பழக்கமும் நம்பிக்கையும் வாய்ந்த தலைவர்களையும் துணையாட்களையும் தெரிந்தெடுத்து அனுப்பி, அவரவர்க்குரிய அதிகாரங்களை வரம்பு செய்து, கருத்தூன்றி உழைக்கச் செய்தார்; உழைப்பிற்கேற்ற ஊதியந் தந்து ஊக்கம் ஊட்டினர். இவரிடம் சில பல ஆண்டுகள் உண்மையாக உழைத்து வேலை செய்தவர் பின்பு வேறு செல்வரை அணுகி வேலை செய்ய விரும்பார்; அங்ஙனம் வேலை செய்யும் நிலையில் அவர் இராமல், தாமே முதலாளியாகுந் தகுதியைப் பெற்றிருப்பார்.

அண்ணமலையார் தொழிற்றுறையில் மிகவுங் கண்டிப்பாகவே யிருப்பார். கடைகளெல்லாம் செவ்வனே நடைபெற்றன. இவர் பிற செல்வர்களைப்

போல் உண்டாட்டிலும் களியாட்டிலும் காலத்தைப் போக்கிஞரல்லர் ; சோம்பல் என்பது இவர் அறியாத தொன்று ; ஒரு நொடிப் பொழுதும் இவர் வாழ்க்கை யில் வீணுகக் கழிந்ததில்லை. எல்லாவகையாலுந் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டவராயினும், வினை வகையால் வேறுபடும் மாந்தரும் இருத்தல் கூடு மாதலின், ஒவ்வொரு கடையையும் நேரிற் சென்று பார்வையிட்டு நடைமுறைகளைக் கவனிப்பார் ; குற்றங் குறைகள் இருப்பின் அவற்றைத் திருத்திக் கடை களின் வளர்ச்சிக்கு ஆவன செய்வார் ; ஒரு மாதத் தில் ஆயிரக்கணக்கான நாழிகை வழிகள் உள்நாட் டிலும் வெளிநாட்டிலும் சுற்றி வருவார்.

இவர், நாள்தோறும் வைகறையில் துயி லுணர்ந்து காலைக் கடன்களை முடித்து நீராடித் தூய நீறணிந்து அம்பலவாணரை வழிபடுவார் ; அப்பால் வேலைசெய்யத் தொடங்குவார் ; எழுதவேண்டுங் கடிதங்களெல்லாம் அவ்வப்போதே எழுதி முடிப்பார். காலையில் தோட்டத்தில் உலாவுதலை ஒழுங்கான உடற்பயிற்சி முறையாகக்கொண்டு அதனைத் தவருது செய்வது இவர் வழக்கம். உலாவிவந்து காலைச் சிற்றுண்டி யருந்துவார். உணவு நேரந் தவிர இரவு படுக்கைக்குச் செல்லும் வரை கருமமே கண்ணுயிருந்து கடமைகளைச் செவ்வையாகச் செய்துமுடிப்பார். வேலை மிகுதியாயிருந்தால், உண்ணும்போதுங்கூட எழுத்தாளர் ஒருவரை அருகில் இருக்கச் செய்து அவருக்குச் செய்தி அறிவித்துக்கொண்டே உண்ணுவார். இரவு படுக்கைக் குச் செல்லும்போதும் குறிப்பேடும் எழுதுகோலும் பக்கலில் இருக்கும். அடுத்த நாளிற் பார்க்கவேண்டு மவர்களையும் கவனிக்க வேண்டும் செயல்களையும்

அக்குறிப்பேட்டில் குறித்து வைத்துக் கொள்ளுதல் தவறுர்.

நண்பர்களை வரவேற்று உபசரிப்பதில் அண்ணுமலையார்க்கு மிக்க விருப்பம் உண்டு. இவர், தம்மைப் பார்க்க வரும் நண்பர்களை நன்கு உபசரித்து அளவளாவி மகிழ்வார்; குறித்த நேரத்திற் குறித்த செய்தியைப் பேசி முடித்துக்கொள்வார்; பயனில பேசவும் கேட்கவும் விரும்பார். பேசும்போதே கடிகாரத்தைப் பார்ப்பார். எதிரிலிருப்பவர் அக்குறிப் பறிந்து "நேரம் ஆகிறது; செய்தி இவ்வளவுதான்; சென்று வருகிறேன்" என்று தாமாகவே விடை பெற்றுக்கொள்ளும்படி செய்வார். இவ்வாறு காலத்தைப் பொன்னேபோற் போற்றிப் பயன்படுத்தியமையாலன்றே, சில இலட்சக்கணக்கில் தம் பாகத்துக்குக் கிடைத்த பொருளைப் பல கோடிக் கணக்காக வளர்த்துத் தொகுத்துவைத்தல் இயல்வதாயிற்று. "ஞாலங் கருதினுங் கைகூடும் காலம், கருதி யிடத்தாற் செயின்" என்னும் பொய்யா மொழியைக் கடைப்பிடித்தொழுகினுர்.

வள்ளல் அண்ணுமலையார் பின்பு ஒருமுறை நீலகிரி சென்று தம்மாளிகையில் தங்கி யிருந்தார். அப்போது சென்னைக் கவர்னராயிருந்த கோஷன் அவர்களும் கோடை விடுமுறையில் அங்கு வந்திருந்தார். இருவரும் நட்பு முறையில் அடிக்கடி கண்டு உரையாடுவது உண்டு. ஒருநாள் அவர் அண்ணுமலையாரைப் பார்த்து "தாங்கள் உறங்குவதே இல்லையோ?" என்று வினவினுர். இவர் புன்னகை புரிந்துகொண்டு "ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?" என்றுர். கவர்னர் "எனது மாளிகையிலிருந்து தங்கள் அலுவல் அறையைக் கவனிக்கின்றேன்;

பத்து மணிக்கு மேலும் விளக்கொளி தெரிகிறது; ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறீர்கள்; அதிகாலையில் எழுந்து பார்த்தாலும் அறையில் வெளிச்சம் தெரிகிறதே'' என்ருர். இங்ஙனம், நாடோறும் பதினேழு மணிநேரம் அயராது உழைக்கும் இத்தொழிற் செல்வரைக் கவர்னரும் உலகமும் பாராட்டியதில் வியப்பொன்றுமில்லை.

இவ்வாறு, காலத்தின் அருமையை யுணர்ந்த அண்ணுமலையார் காலத்திற்கேற்ற வினைசெய்தலையும் மேற்கொண்டார். "யாவரிடத்தும் நில்லாது நீங்குஞ் செல்வம் தம்மிடம் நிலைத்திருக்கும்படி செய்ய விரும்புவோர், காலத்தோடு பொருந்த வினை செய்தல் வேண்டும்'' என்பது திருவள்ளுவர் கருத்து. நம் அண்ணுமலையார் எவ்வாறு காலத்திற் கேற்பத் தொழிலைப் பெருக்கினுர் என்பதை இனிக் காண்போம். இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் இருந்த கடைகளை யெல்லாம் சா. ராம. மு. அ. என்ற விலாசமிட்டுக் கூட்டுக் கிளைகளாக்கினுர்; ஆங்காங்குள்ள முதன்மையான நகரங்களில் அவற்றை விரிவுபடுத்தினுர்; அதுவரை செய்துவந்த வட்டித் தொழிலோடு புதிய புதிய தொழில்களையுந் தொடங்கினுர்; தொழிற்சாலைகள் பல நிறுவினுர்; தென்னந் தோப்புக்கள், தேயிலை இரப்பர்த் தோட்டங்கள் பல வாங்கினுர். பர்மாவில் இலட்சம் ஏக்கருக்கு மேற்பட்ட நன்செய் நிலங்கள் இருக்கின்றன. சித்தூர் மாவட்டத்தில் நூற்றுப் பதினைந்து சிற்றூர்கள் "செட்டிநாடு எஸ்டேட்'' என்ற பெயருடன் இவர் ஆட்சியில் அமைக்கப்பட்டன. மேலும், தென் இந்தியாவில் பல மாவட்டங்களில் பல ஊர்கள் இவருக்கு உரிமையாயிருக்கின்றன. செட்டி நாட்டுப்

பாங்கு, செட்டி நாட்டுக் கார்ப்பரேஷன், தென்னிந்திய கார்ப்பரேஷன், பர்மா கம்மர்ஸியல் கார்ப்பரேஷன், திருச்சி தஞ்சாவூர் ஸ்டோர்ஸ், சென்னைத் தென்னிந்திய கார்ப்பரேஷன் என்று கூட்டுக் கிளைகளாக அண்ணாமலையாருடைய தொழில் பல இடங்களில் முறையாக நடைபெறலாயிற்று.

1901-முதல் 1910-வரை பத்து ஆண்டுகள் இவர் மேற்கொண்ட உழைப்பாலும் ஊக்கத்தாலும் தென்னாட்டுக் குபேரர் என்று கூறும்படி கோடிக்கணக்கான பொருளை யீட்டினார்; ஈட்டப்பெற்ற பொருளை நன்கு பேணி வளர்த்தார். "மடியிலான் தாளுளாள் தாமரையினாள்" என்ற பொய்யாமொழியைத் தம் ஆள்வினைத் திறத்தால் மெய்ம்மை யாக்கிக் காட்டிய பெருமை நம் அண்ணாமலையார்க்கே உரியதாகும். தமது முப்பதாம் ஆண்டு வரையில் ஈட்டலும் காத்தலுமே இவருடைய தொழில்களாயிருந்தன. அதன்பின்னர்ப் பொதுநலப் பணியிலீடுபட்டார். தம்மையும் தமது குடும்பத்தையும் உயர்த்துந் திறமையுடையவரே பிறர்க்கு நலஞ்செய்ய முடியும் என்பது உலகியலிற் காணப்படுவதாம். அதுவரை மு. அண்ணாமலைச் செட்டியார் பொருளீட்டும் ஆற்றல் மிக்கவர் என்றே அறிந்திருந்த பொது மக்கள், இவர் பிறர்நலம் பேணும் பெருந்தகையாளர் என்று உணரும்படி செய்தற்கு உரிய காலம் வந்தது.

# 3. பொதுநலப் பணிகள்

பொருட் செல்வமும் அருட் செல்வமும் நிரம்பப் பெற்ற பெருந்தவச் செல்வராகிய பட்டினத்து அடிகள் மரபிற் பிறந்து, அயரா உழைப்பினுற் குபேர செல்வம் படைத்த அண்ணுமலைச் செட்டியார், அச் செல்வத்தைக்கொண்டு தாமும் தம்மைச் சார்ந் தவருமே இன்ப வாழ்வு நடாத்துதல் அமையுமெனக் கருதினரல்லர்; பொதுமக்களுக்குப் பல்லாற்ருனும் இயன்ற உதவிகள் செய்ய வேண்டுமென எதிர்பார்த் திருந்தார். காரைக்குடி நகராண்மைக் கழகத் தலைமைப் பதவி இவரை நாடி வந்தது. காரைக்குடி யென்பது செட்டிமார் நாட்டில் செல்வமுங் கல்வியுஞ் சிறந்தோங்கியதோர் நகரம்; கானுடு காத்தானுக்கு அணிமையில் இருப்பது. இவரும், பொதுநலப் பணிபுரிதற்கு இஃதோர் வாய்ப்பாகுமென எண்ணி அப்பதவியை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். அக்காலத்தில் கார் முதலான ஊர்திகள் இல்லாமை யால், இவர் நாள்தோறும் அதிகாலையிலெழுந்து தம் கடமைகளை முடித்துக்கொண்டு, இரட்டைக் குதிரை கள் பூட்டப்பெற்ற வண்டியிலேறிக் காலை ஐந்தரை மணிக்கே காரைக்குடி வந்து சேர்வார். தாமே நேரிற் பார்க்க வேண்டும் அலுவல்களைப் பார்த்து முடிப்பார்; வேலையாட்களில் ஒவ்வொருவரையுங் கண்டு பேசுவார்; அவர்கள் செய்யவேண்டும் வேலை களைத் தவருமற் செய்து முடிக்குமாறு கட்டளை யிடுவார்; எட்டு மணி யளவில் தம் ஊர்க்குத் திரும்புவார். இவர், 1910-முதல் 1913-வரை மூன்று ஆண்டுகள் தலைவராயிருந்து காரைக்குடி நகரத்தில், கல்வி, சுகாதாரம், குடிதண்ணீர், விளக்கு, நடைவழி

கள் முதலியவற்றிற் செய்த திருத்தங்கள் பலவாகும். பொதுமக்கள் இவரைத் தலைவராகவே கருதினர்; இவர் தம்மைப் பொதுநலத் தொண்டராகவே கருதிப் பணிபுரிந்தார்.

இவர், இங்ஙனம் காரை நகராட்சி செய்துவருங் காலத்தில், அங்கு நிகழ்ந்ததொரு தீரச் செயலைக் காண்போம். திருமெய்யந் தாலுகாவிலிருந்து காரைக்குடிக்கு நாள்தோறும் தபால்கள் வருவது வழக்கம். அந்நாளிற் கள்வர்களால் விளையுந் துன்பம் மிகவுண்டு. ஒருநாள் இரவில் கள்வர் சிலர் தபால் வண்டியை இடைவழியில் தடுத்து நிறுத்தி அதிலிருந்த தபாற் பைகளைக் கவர்ந்துகொண்டு போயினர். இச் செய்தி அண்ணாமலைச்செட்டியாருக்குத் தெரிந்தது. இவர், நள்ளிரவென்றும் பாராமல் உடனே சிலரைத் துணையாக அழைத்துக்கொண்டு அவ்விடத்திற்குச் சென்று பலவிடங்களிலுந் தேடி, ஒரு மறைவிடத்திற் கள்வர்கள் பதுங்கியிருத்தலைக் கண்டார்; அவர்களைக் கையுங் களவுமாகப் பிடித்து, அவர்களிடம் அகப்பட்டிருந்த விலையுயர்ந்த பார்சல்கள் அனைத்தையும் மீட்டுக்கொடுத்தார். அப்போது இராமநாதபுரம் மாவட்டத்துத் தலைமையதிகாரியாயிருந்த சர். அலெக்சாண்டர் டாட்டன்ஹாம் என்பவர் இச் செய்தியைக் கேள்வியுற்று இவருடைய தீரச்செயலைப் பாராட்டினர். மாகாண அஞ்சல் நிலையத் தலைமை அதிகாரி இவரது அரிய செயலைப் புகழ்ந்து அரசியலாருக்கு அறிவித்தார். அரசாங்கத்தார் "ராவ் பகதூர்" என்னும் பட்டம் அளித்து இவரைப் பெருமைப்படுத்தினர். 1911-இல் இப்பட்டம் இவருக்குக் கிடைத்தது. இவ்வாறு அரசியலாருடைய பாராட்டுதலைப்பெற்ற அமயங்கள் பலவாகும்.

சுடர்விட்டெரியும் விளக்கைத் தூண்டியது போலப் பொதுநலப் பணியில் ஆர்வமுடைய இவருக்கு அரசாங்கத்தார் அளித்த பெருமை மேலும் அப்பணியில் ஊக்கம் ஊட்டுவதாயிற்று. அதன் பின்பு, இவர் செய்த அறங்கள் யாவையென அறியலாம். ஒரு நாட்டின் வளர்ச்சி அந்நாட்டிற் பிறக்கும் பிள்ளைகளைப் பொறுத்திருக்கிறதென்பதும், தாய்மார்கள் உடல்வளமும் உள்ளக் களிப்பும் உடையவர்களாயிருந்தாலன்றி அவர்களிடம் நல்ல பிள்ளைகளை எதிர்பார்த்தல் இயலாதென்பதும், ஆகவே, பிள்ளைப் பேற்றின்போதும், ஏனைய காலங்களிலும் பெண்டிர்களுக்கு வருத்தமுங் கவலையுந் தோன்ருதவாறு மருத்துவம் முதலான வசதிகள் செய்துகொடுத்தல் அந்நாடு நலம்பெறச் செய்யும் சிறந்ததோர் அறமாகுமென்பதும் யாவரும் ஏற்றுக்கோடற்கு உரியனவே. இவற்றை நன்குணர்ந்த அண்ணுமலைச்செட்டியார் தம் ஊரில் மூன்றுலட்சம் ரூபாய் செலவுசெய்து ஓர் அறப்பணி புரியும் மருத்துவசாலை அமைத்தார். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஆயிரக்கணக்கான தாய்மார்கள் அம்மருத்துவசாலையில் அழகிய நன்மக்களைப் பெற்றெடுத்திருக்கின்ருர்கள். பல்லாயிரக்கணக்கான குழந்தைகளும் தாய்மார்களும் அம்மருத்துவசாலையை வாயார வாழ்த்துகின்றனர். சென்னைக் கவர்னராயிருந்த பெண்ட்லண்டு துரையவர்கள் தம் மனைவியாருடன் அண்ணுமலைச்செட்டியார் மாளிகைக்கு விருந்தினராக வந்திருந்தபோது அவரால் அம் மருத்துவசாலைக்கு அடிப்படைக்கல் நாட்டப்பெற்றது. அதனுல், அது "செட்டிநாடு லேடி பெண்ட்லண்டு அறமருத்துவசாலை" என வழங்கப்பெறுகிறது. பெண்டிரும் பிள்ளைகளும்

நோயற்ற வாழ்வு வாழ்வதற்கு அம் மாவட்டத்தில் அதனினும் மேம்பட்ட மருத்துவசாலை இல்லை; சென்னை மாகாணத்திலேயே அது சிறந்து விளங்குகிறது.

பிறநாடுகளிற் பெண்டிரும் ஆடவரும் எல்லாத் துறைகளிலும் சமமாக வாழ்க்கை நடத்துகின்றனர். பெண்டிர் நாட்டுப் பணிகளிலும் பங்கு கொள்கின்றனர்; வீட்டரசிகளாகவும் விளங்குகின்றனர். இம்முறை நம்நாட்டில் சில நூற்றுண்டுகளாகவே தடைப்படுத்தப்பட்டது. அடுக்களையென்னும் புகைச் சிறையே அவர்களுக்குப் புகலிடமாயிற்று. பல மூடக் கொள்கைகளுக்கு அவர்கள் உறைவிடமாயினர். இத்தவருன நெறியை ஒழித்து, மாதரும் மைந்தரைப்போலவே உடற்பயிற்சிக்கான விளையாட்டுக்களைப் பயிலவும், உலகியலறிவு பெறவும், நாகரிக மக்களுடன் நன்கு கலந்து பழகவும் வேண்டுமென அண்ணுமலையார் எண்ணினுர்; எண்ணியவாறே தமிழ்நாட்டின் தலைநகரான சென்னைமாநகரில் இரண்டு லட்சம் ரூபாய் செலவுசெய்து "வெல்லிங்டன் கிளப்" என மகளிர் மன்றம் ஒன்று நிறுவினுர். அது தக்க இடத்தில் அமைந்திருப்பதனுல் மகளிர் இனத்திற்கு நலம்பயக்கும் பல பணியாற்றி வருகின்றது.

சிதம்பர நகரமக்கள் பொதுக்கூட்டம் முதலியன நடத்துவதற்குப் போதிய இடமும் கட்டிடமும் இல்லாமல் தயக்கமுற்றனர். அக்குறையையும் அண்ணுமலைச்செட்டியார் நீக்கினுர். நகரத்திற்கும் புகைவண்டி நிலையத்திற்கும் இடையில், பாலமாறுற்றங்கரையில் விரிந்ததோர் இடம்வாங்கி, அதன்கண், பூங்காவும் பொதுமன்றமும் ஆக்கித்

தந்தார். அரசியல், சமூகமுன்னேற்றம், கடவுட் கொள்கை முதலான பலதிறப்பட்ட சொற்பொழிவுகள் அங்கு நடைபெறுகின்றன. அது, நகரமக்கள் பல வகையான விளையாட்டின்மூலம் உடல் உரம் பெறு தற்கும் உதவியாயுள்ளது. அது "அண்ணுமலை டவுன் ஹால்" என வழங்கப்பெறுகிறது.

இவர், காரைக்குடி நகராண்மைக் கழகத்தலைவ ராயிருந்து பணியாற்றிய திறமை பொதுமக்கள் உள்ளத்தில் நன்கு பதிந்திருந்தது. மற்றும், இவர் செய்த பெரிய அறச்செயல்கள் எங்கும் புகழ்ந்து பேசப்பட்டன. இங்ஙனம் நாடறிந்த பெருமை பெற்ற "ராவ்பகதூர்" அண்ணுமலைச்செட்டியார் 1916-இல் சென்னைச் சட்டசபையில் ஓர் உறுப்பினராஞர். 1921-இல், இந்திய அரசாங்கசபைத் தேர்தலுக்கு இவர் ஓர் அபேட்சகராக நின்று முதல்வராகத் தேர்ந் தெடுக்கப்பெற்ருர். பின்னர், இரண்டுமுறை நடந்த தேர்தல்களிலும் முதன்மையாக வெற்றிபெற்ருர். இத்தேர்தல்களில் அடைந்த வெற்றி, நாட்டுப் பெரு மக்கள் இவர்பால் வைத்த நன்மதிப்பிற்கும் பேரன் பிற்கும் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்தது. 1921 முதல் 1935 வரை 15 ஆண்டுகள் தொடர்ச்சியாக அரசாங்க சபையிலிருந்து நாட்டுமக்களுக்கு இவர் செய்த நன்மைகள் பலவாகும். இதனுல், நாட்டு மக்களும் அரசாங்கத்தாரும் இவர்பால் நன்மதிப்பு வைத்தனர்.

அரசாங்க சபையில் இவர் உறுப்பினராயிருந்த காலத்தில், இவ்விந்தியப் பெருநாட்டிலுள்ள அறிஞர் பலர் இவருக்கு அறிமுகமாஞர்கள்; பின்பு நெருங்கிய நண்பருமாயினர். இவருடன் பழகி இவருடைய அரிய குணங்களையறிந்த பெரியார் பலர் பல அமயங்

களில் இவரைப் பாராட்டிப் பேசியும் எழுதியும் இருக்கிறார்கள். அத்தகைய நண்பர்களில் ஒருவரான மானெக்ஜி தாதாபாய் என்பவர் ஒருமுறை, இவரைக் குறித்துப் பேசிய பேச்சுக்களைக் காண்போம். “டாக்டர் ராசா சர். அண்ணாமலைச்செட்டியார் என் அரிய நண்பர். அவருடன் யான் நெருங்கிப் பழகியிருக்கிறேன். நெடுங்காலம் இருவரும் அரசாங்க சபையில் உறுப்பினராயிருந்தோம். அவருடைய தொழிற்றிறமை நேர்மை ஒழுக்கம் முதலியவற்றை யான் நன்கறிவேன். அரசாங்கசபை உறுப்பினர் அனைவருக்கும் அவரிடம் நன்மதிப்பு உண்டு. அவரது பேச்சிற் பொருள் பொதிந்திருக்கும். அவர் எடுத்துரைக்கும் வழக்குரைகள், நடுநிலை திறம்பாமலும் அழுத்தமாகவும் ஆழ்ந்த கருத்துடையனவாகவும் இருக்கும். அவர் தமது குலத்தாரின் முதல் மணி யாவர். அவர் நாட்டிற்கு நிலையான தொண்டுகள் செய்திருக்கிறார்” என்பது அவர் பேச்சின் சுருக்கமாகும்.

இந்தியாவின் விதியைத் திட்டஞ்செய்வது, டில்லியிலும் சிம்லாவிலுங் கூடும் சட்டசபையாகும். அது, அரசப்பிரதிநிதி திறந்துவைக்கும் பெற்றிமையுடையது. அச்சபையில் எந்தத் தீர்மானம் வந்தாலும் எதிர்ப்புக்கள் மிகுதியாயிருக்கும். வரவுசெலவு பற்றிய திட்டம் வரும்போது பெரிய சொற்போர் நிகழும். அவ்வேளைகளில் அண்ணாமலையார் அஞ்சாது நின்று பேசுவார். அவர் கருத்தை யாரும் மறுக்கமுடியாது. 1922-ஆம் ஆண்டில், அரசாங்கச் செலவைக் குறைக்கவேண்டுமென்று அண்ணாமலையார் அங்கே பேசிய பேச்சிற் சிலபகுதிகளைப் பார்ப்போம்.

"அரசாங்கத்தின் ஒவ்வொரு துறையிலும் அதிகமான பொருட்செலவாகின்றது. செலவைக் குறைக்க வேண்டுமென்று பேச்சு நடக்கிறது; செயலைக் காணும். ஊழியர்கள் சம்பளத்தை உயர்த்தவேண்டுமென்று ஒருபுறம் முறையிடுகிறார்கள். இவ்வகையில் யான் சொல்வதைத் தயை செய்து கேளுங்கள். இக்காலத்தில் வாழ்க்கைச் செலவுகள் மிகுதியா யிருக்கின்றன. குறைந்த சம்பளக்காரருக்குச் சம்பளத்தைக் கூட்டிக் கொடுங்கள். கூடுதலான சம்பளக்காரருக்கு மேலும் சம்பளத்தை உயர்த்துவது நீதியாகாது. தகுதிக்குத் தக்கவாறு செலவாகும் என்பதைச் சொல்லாதீர்கள். ஆயிரக்கணக்கான ஏழைச் சம்பளக்காரர் வயிற்றிற்கு உணவின்றித் திண்டாடும்போது தகுதியைக் குறித்துப் பேசுவது பொருத்தமன்று" என்பது ஒரு பகுதி.

இந்தியரை உயர்ந்த பதவிகளில் மிகுதியாக நியமிக்க வேண்டுமென்று ஒருமுறை இவர் பேசியதன் சுருக்கம் :—"எல்லா உத்தியோகங்களிலும் இந்தியரை அதிகம் நியமிக்க விரும்புவதாக அரசாங்கத்தார் அடிக்கடி சொல்வதுண்டு. சில துறைகளில் அவ்வாறு சிறிது நடந்திருப்பது உண்மைதான். ஆனால், துறைமுகப் பகுதியில் இந்தப் பேச்சேயில்லை. அதில் 500-ரூபாய் சம்பளம் பெறும் 439 பேர்களில் 27 பேர்களே இந்தியர்கள். ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கும் 168 பேர்களில் ஒருவர்கூட இந்தியர் இல்லை. பொது ஊழியங்கள் எல்லாவற்றிலும் இந்தியரே பெரும்பாலும் இருக்க வேண்டுமென்று நாடு மன்றாடும்போது, இப்படி இவ்வளவு குறையிருப்பது ஏன்? துறைமுகப் பகுதி வேலையை அனைவருக்கும்

பொதுவாக்கி அதிகமான இந்தியரை நியமிக்க வேண்டும்.'' என்பதாம்.

இலங்கை செல்லும் இந்தியரை மண்டபத்திற் சோதனை செய்வது பொருத்தமற்றது என இவர் ஒரு முறை பேசியதிற் சில பகுதிகள் :—''இந்தக் கேள்விகள் அடிக்கடி வந்தும் தொல்லை தீர்ந்தபாடில்லை. முன்னே இவ்வைத்திய சோதனைக்கு அவசியம் இருந்திருக்கலாம். இப்போது இப்படிச் செய்ய அவசியமில்லை. மண்டபத்திற் சோதனைப் பட்டியிருப்பதே ''இந்தியா நோய்பிடித்த நாடு, அதன் நோய் இலங்கைக்கும் ஒட்டிக்கொள்ளும்' என்று விளம்பரம் செய்வதுபோல் இருக்கிறது. இந்தியர்களுக்கு அங்கிருக்கும் கொடுமை சொல்ல முடியாது. ஏழைகள் நிலை இரங்கத்தக்கதாயுள்ளது. இக் கொடுமை இந்தியரைக் கேவலப்படுத்துகிறது; சினமூட்டுகிறது. இந்திய அரசாங்கம் இலங்கையர் வந்து போகத் தடை செய்யவில்லை. இலங்கையரசியலார் மாத்திரம் ஏன் இந்தியரை இவ்வாறு இழிவுபடுத்தவேண்டும்? இலங்கையரசினர் விரைவில் இவ்வருந்தத்தக்க தடைகளை யெடுத்துவிடும்படி இந்திய அரசாங்கம் முயலவேண்டும்.'' இவை இவர் பேசியவற்றிற்குச் சில எடுத்துக்காட்டுக்களேயாகும். வரியை உயர்த்தவேண்டா, சவுக்கடி ஒழிய வேண்டும் என்பன போன்ற கருத்துக்களைத் தெரிவித்து இவர் மிகத் திட்பமாகப் பேசியுள்ளார். இவர் பேச்சு ஒருவரையும் புண்படுத்தாது. சபை உறுப்பினரும் பொதுமக்களும் இவர் பேச்சுக்களை நன்கு மதிப்பர். அரசாங்கமும் இவருடைய கருத்துக்களைப் பலமுறை ஏற்றுக்கொண்டது.

ஒருவர், கல்வி செல்வம் ஆள்வினைத்திறம் ஈகைத்

தன்மை முதலியவற்றிற் சிறந்து விளங்கினுலும், அவரிடம் கடவுட் கொள்கை இல்லையாளுல் அவர் வாழ்க்கை நிரம்பிய பயனுடையதாகாது ; நெய்யிலாப் பாற்சோற்றுக்கு நிகராகும். நம் அண்ணுமலையா ரிடம் எல்லா நலங்களும் நிறைந்திருப்பதுபோல் கடவுட் பத்தியும் நிரம்பியிருந்தது. தம்மைப்போற் பிறரும் கடவுளை வழிபடல் வேண்டும் என்று கருதிக் கோயில் திருப்பணிகளிலுங் கருத்தூன்றினுர். "மகனறிவு தந்தையறிவு" என்பது முதுமொழி யன்ருே? சிதம்பரத்தில் தம் தந்தையார் திருப் பணிகள் செய்த நடராசர் திருக்கோயிலையடுத்துக் கோவிந்தராசப் பெருமாள் கோயில் இருக்கின்றது. அது சிதைந்து இடிந்து விழும் நிலையிலிருந்தும், சைவர்களுக்கும் வைணவர்களுக்கும் உண்டான வேற்றுமை காரணமாகப் பழுது பார்க்கப்படாமல் இருந்தது. நம் அண்ணுமலையார் அமைதியான தம் சொல்லினிமையால் அவ்விரு திறத்தாரையும் உடன் படச் செய்து கோவிந்தராசர் கோயிலைப் பிரித்துப் புதிதாகக் கட்டி முடித்து 25-5-1934-இல் குடமுழுக் காட்டும் நடத்தி வைத்தார். இதனுல், கடவுட் கொள்கையில் இவர்க்கு உள்ள நடுநிலைமை புலனு கின்றது.

இளையாற்றங்குடி என்னும் சிற்றூரில், நித்திய கலியாணி அம்மையுடன் கோயில் கொண்டிருக்கும் கைலாயநாதரே நம் அண்ணுமலையார்க்குக் குல தெய்வமாவர். அங்கு நித்திய கலியாணி அம்மையின் கோயில், பாண்டியர் காலத்துக் கட்டப்பெற்ற பழமை யானதாகும். அது மிகவும் பழுதுபட்டிருந்தது. திருக்குளமும் செம்மையாக இல்லை. அக்கோயிலை மீண்டும் புதிதாகக் கட்டி 28-5-1939-இல் குடமுழுக்கு

நடைபெறச் செய்தார். மேலும், கருவூர் பசுபதீசுரர் கோயில், கொழும்பு இந்துக்கோயில், திருவேட்களம் பாசுபதநாதர் கோயில், திருவண்ணுமலை அருணை சலேசுரர் கோயில் முதலான பல கோயில்களுக்கு இவர் செய்திருக்கும் பணிகளும் உதவிகளும் மிகப் பலவாகும்.

அறிவு திரு ஆற்றல்களிற் சிறந்தார் சிலர் தம் இனத்தாரின் நலங்களைப் பெரும்பாலும் பொருட் படுத்துவதில்லை. அறிவுத் துறையில் மேம்பட்டவர் தம் குலத்தாரையும் அத் துறையில் உயர்த்துதல் வேண்டும். செல்வத்திற் சிறந்தவர் தம்மவரையும் செல்வச் செழிப்புடையவராகச் செய்தல் வேண்டும். ஆள்வினைத் திறமுடையாரும் அவ்வாறு செய்வதே நல்லது. அதுவே உண்மையான அறிவு திரு முதலியன பெற்றதன் பயனுகும். நம் அண்ணுமலை யரசர் தாம் பெற்ற இன்பம் தம் குலத்தாரும் பெறுதல் வேண்டும் என்ற பொதுநோக்கத்தால் தம் மரபினருக்குச் செய்த நலங்கள் யாவை என இனி நோக்குவோம்.

இவர், 1917-ஆம் ஆண்டில், சென்னையில் நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம் நிறுவி, தம் மரபினர் அனைவரும் அச்சங்கத்தில் உறுப்பினராகச் சேரும்படி செய்தார்; அவர்களுக்கு நேரும் இடர் களையும் குறைகளையும் அச்சங்கத்தின் வாயிலாகவே தீர்த்துக் கொள்ளுதற்கு வழி வகுத்தார்; காலத்திற்கு ஏற்ற தொழில்முறைப் பயிற்சியுங் கொடுத்தார். அதனுல் தனவணிக மரபினருக்கு உண்டாகிய புதிய உணர்ச்சிகளும் எழுச்சிகளும் பலவாகும்.

சென்னைச் சட்டசபையில், தனவணிக மரபினருக்கு ஓரிடங் கொடுத்தல் வேண்டுமென

முயன்று வாங்கித் தந்தார். பர்மா சட்டசபையிலும் தம் இனத்தவர் ஓர் உறுப்பினர் பதவிபெற ஏற்பாடு செய்தார். பர்மாப் பிரிவினையின் போதும், செய் கோனில் தனவணிகர் சிலர் நாடு கடத்தப்பட்ட போதும் ஐரோப்பிய நாட்டிற்குச் சென்று தம் இன நலங்கருதிச் செய்த உதவிகள் எளிதில் மறக்கத் தக்கனவல்ல. இவை மேலே விளக்கிக் கூறப்படும். பர்மாப் பிரிவினையின்போது உண்டாய துன்பத்தைக் காட்டிலும் கொடுமையான துன்பம் இரண்டாவது உலகப் பெரும்போர் நடைபெற்ற காலத்தில் உண்டா யிற்று. பர்மா, மலேயா, சையாம் முதலிய வெளி நாடுகள் சப்பானியர் வசமாயின. அதனால், அந் நாடுகளில் தொழில் செய்துவந்த தனவணிகர்கள் அடைந்த அல்லல்களுக்கு அளவேயில்லை. உடைமை உரிமைகளெல்லாம் இழந்துவிட்டுத் தம் மனைவி மக்களுடன் உயிர் பிழைத்துத் தாய்நாடு வந்து சேர்வதே மிக்க இடர்ப்பாடாயிற்று. இந்நிலையில் இந்திய அரசாங்கத்தார், வெளிநாடுகளில் உள்ள தொழிற்றுறைகளுக்கும் விளைநிலங்களுக்கும் வழக் கப்படி வரிசெலுத்துமாறு வற்புறுத்தினர். நகரத் தார் மரபினர் செய்வதின்னதெனத் தெரியாமல் திகைத்தனர். அப்பொழுது அண்ணாமலையரசர், நகரத்தார் சிலருடன் டில்லிக்குச் சென்று அரசாங்க சபையில் பின்வருமாறு பேசினார் :—

" பர்மா முதலிய வெளிநாடுகள், சப்பான் படையெடுப்பாலும் அதனையெதிர்த்துப் போராடிய ஆங்கிலேயர் குண்டுமாரிகளாலும் சீர்குலைந்து கிடக்கின்றன. எங்கள் இனத்தாருடைய உடைமை கள் உரிமைகள் எல்லாம் என்னவாயின என்பதே தெரியவில்லை. மீண்டும் அவற்றைப் பெறமுடியுமா

என்பதே பெருங் கவலையாக உள்ளது. எம் இனத்தவர்கள் உயிரோடு திரும்பி வந்ததே அருமை. இந்நிலையில், அவ் வெளிநாடுகளிலுள்ள விளைபுலங்களுக்கும் தொழில் நிலையங்களுக்கும் வரி செலுத்தும்படி துன்புறுத்துவது நீதியாகாது''.

இவ்வாறு எல்லாருடைய உள்ளத்திலும் பதியும்படி எடுத்துரைத்தமையால், அதனை அரசாங்கத்தார் மதித்து ''போர் முடியும்வரை வரி செலுத்த வேண்டா'' என்று விதி வகுத்தனர். அதனால், தன்வணிகர் அனைவரும் கவலை நீங்கியதோடு மிகுந்த களிப்பும் அடைந்தார்கள். இது தம் இனத்தார்க்குச் செய்த, என்றும் மறக்கமுடியாத பேருதவியாகும். உண்டிகொடுத்தல், உடைகள்வழங்குதல், வீடுகள் கட்டி உதவுதல், மணமுடித்துவைத்தல், பள்ளிகளுக்கும் கழகங்களுக்கும் பொருளுதவிபுரிதல் முதலாக, ஏனைய பொதுமக்கள்பால் இரக்கங்கொண்டு இவர் செய்திருக்கும் உதவிகள் எண்ணிறந்தனவாகும்.

## 4. வெளிநாட்டு யாத்திரை

மக்கள் வாழ்க்கை தனித்த நிலையில் திருத்தமுறுதல் இல்லை; பலர் ஒருங்குகூடி வாழும் வாழ்க்கையே சிறந்த பயன் விளைவிப்பதாகும்; அறிஞர் பலருடன் அடுத்தடுத்துப் பழகுதலும், அயலிடங்களுக்குச் சென்று ஆங்காங்குள்ள அருமை பெருமைகளைக் காண்டலும் அறிவு வளர்ச்சிக்கு உறுதுணையாவனவாம்; கூவலாமைபோல் குறித்த இடம்விட்டுப் பெயராதிருத்தல் தருக்கும் தாழ்நிலையும் அடைதற்கே

ஏதுவாகும்; ஒன்றனைப்பற்றிப் பிறர் வாயிலாகக் கேட்டலினும் அதனை நேரிற் சென்று காண்டலால் உண்டாம் நலங்கள் பலவாகும் என்ற பொதுநெறியை உணர்ந்த "ராவ்பகதூர்" அண்ணாமலையார், கல்வி வாணிகம் ஆட்சித்திறன் முதலியவற்றில், ஆங்கிலேயர் பிற நாட்டாரினும் மேன்மையுற்று விளங்குகின்ற நுட்பங்களை அறிதல் வேண்டுமென அவாக் கொண்டார். அதனால், காரைக்குடி நகராண்மைக் கழகத் தலைவராயிருக்கும் அக்காலத்தில் இங்கிலாந்திற்குப் புறப்படலானார். பசுமலையிலுள்ள அமெரிக்கக் கிறித்தவ மிஷன் காலனித் தலைவர் ரெவரண்ட் ஜான் மில்லர் என்பவரும் அவர் மனைவியாரும் உடன் சென்றனர். இவ் யாத்திரையில் இவருக்கு மில்லர் மிக்க உதவியாயிருந்தார். இலண்டன் மாநகரம் சென்று அண்ணாமலையார் ஒரு வசதியான இடத்தில் தங்கினார். இவர் அங்கே தங்கியிருந்த காலத்தில் (1911-இல்) ஐந்தாம் ஜார்ஜ் மன்னர்பிரானுக்கு முடி சூட்டுவிழா நடைபெற்றது. வெஸ்ட்மின்ஸ்டர் என்னும் முடிசூட்டுவிழா மண்டபத்தில் பலநாட்டு அரசர்கள் அமைச்சர்கள் படைத்தலைவர்கள் அறிஞர்கள் பெருஞ்செல்வர்கள் முதலானோர் குழுமியிருந்தனர். அவ்விழாவிற்கு அண்ணாமலையாரும் அழைக்கப்பெற் றிருந்தமையால், இவரும் அங்குச் சென்று விழாவின் பலவகையான சிறப்புக்களையும் கண்டு களிப்புற்றார்.

இவர், இங்கிலாந்தில் இருந்த காலத்தில் ஆங்கிலேயர் ஒழுக்க வழக்கங்களைக் கூர்ந்து நோக்கினார். ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களுக்குச் சென்று அவற்றின் அமைப்புக்களையும் நடைமுறைகளையும் நன்கு கவனித்தார். அப் பல்கலைக்

கழகங்கள் இவர் உள்ளத்தைக் கவர்ந்தன. ஐரோப்பியருடைய வாழ்க்கைமுறை, நேர்மை, பரந்த உலகியலறிவு, காலத்தைப் பொன்போலப் பயன்படுத்தல் முதலியவற்றை மில்லர் இவருக்கு விளக்கிக் காட்டினர். மேலும், பல திங்கள் அங்கே தங்கியிருந்து பல நுணுக்கங்களை யறிந்துகொண்டு இந்தியாவுக்குத் திரும்பினர். அதன்பின் இவர் காரைக்குடி நகரத்திற் பலவகையான திருத்தங்கள் செய்தார். ஐரோப்பாவிற் கண்ட கட்டிடங்களின் அமைப்பை நினைவிற் கொண்டு 1915-ல் கானாடுகாத்தான் மாளிகை சிறந்த முறையில் அமைக்கப் பெற்றது.

பின்னர் 1935-இல், இவர், இரண்டாம் முறையாக இங்கிலாந்து சென்றார். இந்தியாவும் பர்மாவும், தாயும் சேயும்போலப் பண்டைக் காலந்தொட்டு இணைந்திருந்தன. ஆங்கில அரசாங்கத்தார் அரசியற் சூழ்ச்சியால் இவ்விரு நாடுகளையும் வேருகப் பிரித்தனர். பர்மாப் பிரிவுச்சட்டம் அச்சாகி வெளிவந்தது. அச் சட்டத்தால், அங்கே தொழில் நடத்தும் இந்தியர்களுக்கு மிக்க இடர்ப்பாடு உண்டாயிற்று. வாணிகம் முதலான தொழில் நடத்துவோர் வழிமுறை யறியாமல் வருந்தினர். இச் சட்டத்தால் நேர்ந்துள்ள பெருந் தீங்குகளை ஆட்சியாளருக்குத் தகுந்த முறையில் எடுத்துக் கூறி நன்மை பெறுதல் வேண்டுமென ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழுவிற்குத் தலைவராக இராசா சர். அண்ணாமலைச் செட்டியார் தேர்ந்தெடுக்கப்பெற்றனர். இவரும் தலைமையேற்று இங்கிலாந்து சென்றார்; அப்போது தம் வாழ்க்கைத் துணைவியாராகிய அரசியாரையும் உடனழைத்துச் சென்றார்.

" கடனறிந்து காலங் கருதி யிடனறிந்து
எண்ணி யுரைப்பான் தலை "

என்று, தலைமைத் தூதுவன்பால் அமைய வேண்டிய இலக்கணங்களை வகுத்துரைத்தார் வள்ளுவனார். அரசர் தகுதிக்கேற்பத் தான்சென்று காணுதலும் பேசுதலும் ஆகிய முறைமையை அறிந்து, தன் சொல்லை அவர் ஏற்றுக்கொள்ளுதற்கு உரிய காலத்தையும் இடத்தையும் தெரிந்து, தான் சொல்லப் போகும் காரியமும் அதற்கு அவர் கூறும் மறுமொழியும் அதற்குப்பின் தான் கூறுவனவும் ஆகியவற்றை முன்பே ஆராய்ந்து பார்த்து, அவ்வாறு சொல்லுபவனே தூதுவருட் சிறந்தவனாவான் என்பது அதன் கருத்து. இத் தூதுக் குழாத்திற்குத் தலைவராகச் சென்ற செட்டிநாட்டரசரிடம் இப்பண்புகளெல்லாம் நிரம்பியிருந்தன.

இலண்டன் போய்ச் சேர்ந்தது முதல் அண்ணாமலையரசர் மிக்க சுறுசுறுப்புடன் காணப்பட்டார்; பர்மாப் பிரிவினைச் சட்டத்தைத் துருவித் துருவி ஆராய்ந்தார்; இந்தியா அமைச்சரையும் பிற அமைச்சர்களையுங் கண்டார்; பாராளுமன்ற உறுப்பினர்களையுந் தனித்தனியே பார்த்தார்; தம் கொள்கைகளைத் திறம்பட விளக்கிப் பேசினார். அப்பேச்சின் சுருக்கம் வருமாறு:—" பர்மாவை இந்தியர்களுக்கு அந்நிய நாடாக்கக் கூடாது; இந்தியர் உடைமை உரிமைகளெல்லாம் அங்கே கிடக்கின்றன; இந்தியரிற் பலர் அந்நாட்டையே தாய்நாடாகக் கருதி அங்கே வாழ்கின்றனர்; பர்மாவுக்கு இந்தியர் தடையின்றிச் சென்று தொழில் நடத்த உரிமைதரவேண்டும். இனி வேண்டுமானால், பயிர்த்தொழில் செய்வோர் தம் நிலங்களைப் பயிர்த்தொழில் செய்வோருக்கே விற்கலா

மெனச் சட்டம் இயற்றுங்கள். பர்மாவில் தொழில் செய்யும் செட்டியார்களுடைய செல்வமே அந் நாட்டைச் செழிப்பாக்கியது; ஆதலால், புதிய சட்டத்தின்கீழ்ப் பர்மா சட்டசபையில் தனவணிகர் சங்கத்திற்கு ஓர் உறுப்பினர்பதவி யளித்தல் வேண்டும்; பிரிட்டிஷ் இந்தியருக்குள்ள உரிமைக ளெல்லாம் சுதேச சமஸ்தான மக்களுக்கும் இருக்க வேண்டும்'' என்று இனிமையாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தார். செட்டிநாட்டரசர் வேண்டுகோள் பெரும்பாலும் நிறைவேறிற்று. இந்தியர் பர்மாவில் தொழில் செய்யலாம்; முன்பே தொழில் செய்து கொண்டிருப்போர்க்கு இடையூறு நேராது; சுதேச சமஸ்தான மக்களுக்கும் அவ்வுரிமைகள் உண்டு; தனவணிகர் சங்கத்தினர் சட்டசபையில் ஓரிடம் பெறலாம் எனச் சட்டத்தில் திருத்தம் செய்யப் பட்டது. இதனைப் பாராளும் மன்றம் பரிவுடன் ஏற்றுக்கொண்டது.

இங்கிலாந்தில் அண்ணமலையரசர் இருந்த காலத்தில் முதன்மையாகக் குறிப்பிடத்தக்கதொரு நிகழ்ச்சி நடந்தது. ஐந்தாம் ஜார்ஜ் மன்னர்பிரானை, அண்ணமலையரசர் தம் அரசியாருடன் சென்று கண்டு அள வளாவும் வாய்ப்புப் பெற்றனர். மன்னர்பிரான் அகமும் முகமும் மலர இருவரையும் வரவேற்று இன்னுரை பகர்ந்து உபசரித்தனர்.

> " சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
> பெற்றத்தாற் பெற்ற பயன் "

என்ற பொதுமறைப்படி, இச்செல்வத் தோன்றலாகிய செட்டிநாட்டரசர் சுற்றஞ்சூழ ஒழுகினர்; அவர்களுக்கு நேரும் இடர்களைத் தமக்கு நேர்ந்தனவாகக் கருதிக் களைய முற்பட்டார். இதற்கு மற்றொரு

நிகழ்ச்சியுங் காணலாம். "பிரஞ்சுக் குடியரசுடன் பேசி எங்களுக்கு நன்மை செய்யவேண்டும்; இது வரை யில்லாத இடையூறு நேர்ந்திருக்கிறது," என்று சைகோனிலிருந்த தனவணிகர் அண்ணுமலை யரசர்க்கு ஒரு வேண்டுகோள் அனுப்பினர். இவர், சிறிதுங் காலந்தாழ்க்காது இங்கிலாந்திலிருந்து புறப்பட்டு, இந்தியா அமைச்சரின் உதவிக் கடிதம் பெற்றுப் பாரிஸ் சென்ருர்; ஆங்குள்ள ஆங்கில தூதரைக் கண்டு, அவர் வாயிலாகப் பிரஞ்சுக் குடி யரசின் வெளிநாட்டு அமைச்சரோடு கலந்து ஆலோ சித்தார்; "நாடுகடத்தும் விதியை நீக்கவேண்டும்; வருவாய்க்குத் தக்க வரி வாங்கவேண்டும்" எனத் தெரிவித்தார்; நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் செய்யும் வாணிகமுறைகளையும் பொது நலங்களையும் உருக்கமாக எடுத்துக் கூறினர். இவர் சொற்கள் உண்மையாகவே அவர்களுடைய உள்ளங்களை நெகிழ்வித்தன. குடியரசின் அமைச்சர் இவர் கருத் திற்கு இணங்கிச் சட்டத்திருத்தத்திற்கு ஆவன செய்தார். அண்ணுமலையரசர்க்கு வெற்றிக்கு மேல் வெற்றி கிடைத்தது.

இங்கிலாந்திலும் பிரான்சிலும் குறித்த அலுவல் கள் நிறைவேறியபின், செட்டிநாட்டு அரசர் அரசி யாருடன் அமெரிக்காவுக்குச் சென்ருர்; அங்குப் பதினைந்து நாட்கள் தங்கியிருந்தார்; செல்வங் கொழிக்குஞ் சிறந்த நகரங்களையும் பல்வேறு தொழிற் சாலைகளையும் பார்த்தார்; உலகத்திலேயே மிகப் பெரியதான 'நயாகரா' நீர்வீழ்ச்சி போன்ற இயற்கைக் காட்சிகளைக் கண்டு இறும்பூது எய்தினர்; பின்னர், அமெரிக்காவிலிருந்து மீண்டும் ஐரோப்பாவிற்கு வந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரியா, ஸ்விட்ஜர்

லந்து, இத்தாலி முதலான நாடுகளுக்குச் சென்றார்; ஒவ்வொரு நாட்டிலும் உள்ள வெவ்வேறான தோற்றங் களையும் ஏற்றங்களையுங் கண்டு களிப்புற்று இந்தியா விற்குத்திரும்பினார். அந்நாளில், உலக நாடுகள் சுற்றிப்பார்க்கும் பேறுபெற்ற தனவணிகப் பெண்டிர் இல்லையென்றே கூறலாம். ஆதலால், செட்டிநாட்டு அரசருடன் சென்று பல்வேறு நாடுகளையும் பார்த்து வந்த பெருமை அவர் மனைவியாராகிய சீதை ஆச்சி என்னும் மாதரசியார்க்கே உரியதாகும்.

தனவணிக மரபினர் பண்டைக் காலந்தொட்டு வெளிநாடுகளுக்குச் சென்று வாணிகஞ்செய்து வரு கின்றனராயினும், கடல் கடந்து செல்லும் நாடுகளுக் குத் தம் மனைவியரை அழைத்துச் செல்லும் வழக்கம் இல்லை. பழந்தமிழ் மரபை வடித்தெடுத்துக் கூறும் தொல்காப்பியரும் "முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை" என வரையறுத்து விதி வகுத்தனர். இக் கொள்கை பல்லாயிரம் ஆண்டுகளாக நிலைத்திருந் தது. காலத்திற்கேற்றவாறு பிற மரபினரெல்லாம் பெண்டிருடன் வெளிநாடு சென்று வரும் இந்நாளில், இது பெருந்தாது; பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவாக மாட்டா என உணர்ந்த அண்ணா மலையரசர், பர்மா தூதுக் குழாத்திற்குத் தலைவராக இங்கிலாந்து சென்றபோது தம் வாழ்க்கைத் துணைவி யாரையும் அழைத்துச் சென்றதுபோல், தம் கடை களுக்கு அனுப்பும் தனவணிக இளைஞர்களையும் தத் தம் மனைவிமாருடன் செல்லும்படி கட்டளை யிட்டார். அதனால், தனவணிக மகளிர் பலர் தங்கள் கணவ ருடன் வெளிநாடுகள் சென்றனர்; ஆங்காங்குள்ள இயற்கைக் காட்சிகளையும் நாடு நகரங்களின் வனப் புக்களையும் கண்டு களித்தனர்; பலதிறப்பட்ட மக்

களுடைய வழக்க ஒழுக்கங்களையும் செயல் முறைகளையும் பார்த்தறிந்தனர். அறிவு வளர்ச்சிக்கும் நாகரிக முன்னேற்றத்திற்கும் அது துணை புரிந்தது. வெளிநாட்டுச் செலவு பற்றித் தனவணிக மகளிர்க்கு நெடுங்காலமாக இருந்து வந்த தடை இவரால் நீக்கப்பட்டது. இளம்பருவத்து ஆடவரும் மகளிரும் அண்ணாமலையரசரை வாயார வாழ்த்தினர். இது, உள்நாட்டு வாழ்க்கையிலும் வெளிநாட்டு வாழ்க்கையிலும் தம்மைப் போலவே தம் மரபினரும் இருத்தல் வேண்டுமென்ற உயரிய நோக்கத்துடன் இவர் செய்த பெரியதோர் சீர்திருத்தமாகும்.

## 5. கல்வித் தொண்டு

அண்ணாமலையார் 1911-ஆம் ஆண்டில் முதல் முறையாக இங்கிலாந்து சென்றாரென்பதும், ஆக்ஸ்போர்டு கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களைப் பார்வையிட்டாரென்பதும் மேலே கூறப்பட்டன. உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளும் இவர், இங்கிலாந்திலிருந்து திரும்பியது முதல் அத்தகைய சிறந்த பல்கலைக் கழகம் நம் நாட்டில் உண்டாதல் வேண்டும்; அதற்கு ஆவன சூழ்தல் வேண்டும் என்ற ஆர்வம் உடையவராயினர். இப்பெருந் தகையாளரின் உள்ளமாகிய நன்னிலத்தில் அழுந்திப் பதிந்த அவ்வுயரிய நோக்கமாகிய நல்வித்தானது, நாளடைவில் முளைத்துக் கிளைத்துச் செழித்து வளர்ந்து முழுமரமாகிப் பூத்துக் காய்த்துப் பயன் விளைக்கத் தொடங்கிற்று. அது தமிழகம் செய்த தவப்பயனென்றே கூறலாம்.

“ ஒருமைக்கட் டான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து ”

என்று திருவள்ளுவர் கூறினர். ஒருவன் ஒரு பிறப்பிற் கற்ற கல்வியானது, ஏழு பிறப்பிலுந் தொடர்ந்து சென்று அவனை நன்னெறிக்கட் செலுத்தும் என்பது அதன் கருத்து. இது பற்றியே “ அன்ன யாவினும் புண்ணியங் கோடி, ஆங்கொரேழைக் கெழுத்தறிவித்தல்” என்ருர் கவியரசர் பாரதியார். ஆதலால், அத்தகைய கல்விக் கொடையினுஞ் சிறந்த கொடை வேறில்லை. இவ்வுண்மையை உணர்ந்த அண்ணுமலையார் கல்வித்துறையிற் பெரும்பொருளை வாரி வழங்க முற்பட்டார்.

நம் நாட்டிற் கற்றவர் தொகை மிகக் குறைவு. அதனினும் மிகக் குறைவு உயர்தரப் பட்டம் பெற்றவர் தொகை. அரசாங்கத்தாரே மக்களெல்லோர்க்கும் கல்வியறிவு புகட்டுங் கடப்பாடுடையவராயினும், அம்முயற்சியில் அவர்கள் அதிகமாக ஈடுபட இயலவில்லை. செல்வம்படைத்தோர் அம்முயற்சியை மேற்கொள்வது காலத்திற்கேற்ற நற்செயலாயிற்று. அதனுல், இவர் முதற்றரமான கல்லூரி ஒன்று நிறுவுதற்கு முதலில் முனைந்தார். பாண்டிநாட்டின் தலைநகரமும் முத்தமிழ் வளர்ந்த முதலிடமுமாகிய மதுரை மாநகரமே கல்லூரி நிறுவுதற்குத் தகுந்த இடமென நினைந்து காலந்தாழ்க்காது அந்நகர்க்கண் விரிந்த நிலமும் வாங்கினுர். பின்னர், ஏதோ ஒரு காரணத்தால் அவ்வெண்ணம் மாற்றப்பட்டது. ஆனுல், தாம் வாங்கிய நிலத்தையும் கட்டிடங் கட்டுவதற்கு வேண்டும் பொருளையும் இவர் மதுரைக் கல்லூரிக்கு நன்கொடையாக வழங்கிவிட்டுச் சிதம்பரத்தை நோக்கினுர்.

தம் தந்தையாரும் தமையனாரும் சிவத்திருப் பணியும் பொதுநலத் தொண்டும் புரிந்த இடம் சிதம்பரமாகும். அந்நகரத்திலேயே தாமும் கல்லூரி அமைத்தல் சாலப் பொருத்தமுடையதென இவர் முடிவுசெய்தார். தமையனார் "திவான்பகதூர்" இராமசாமி செட்டியார் 1918-இல் இறையடி சேர்ந்தமையால், அவர் வகுத்த அறங்களைப் பாதுகாக்கும் பொறுப்பும் இவர்பாலதாயிற்று. ஆகவே, அவர் பெயரால் நடைபெற்று வரும் உயர்நிலைப்பள்ளியையே முதற்றரமான கல்லூரியாக்க முயன்றார். 1920-ஆம் ஆண்டில் அப்பள்ளியின்கண் கல்லூரி முதல் வகுப்புத் தொடங்கப் பெற்றது. முதலில் இக் கல்லூரியை மதுரை மாநகரில் நிறுவ முற்பட்டமையாலும், அங்கே கோயில் கொண்டிருக்கும் உலகப் பெருந்தாயின் பெயரும் தம் அருமை அன்னையாரின் பெயரும் ஒன்றாக இருத்தலாலும், அவ்விருவரின் நினைவுக்கும் அறிகுறியாக இவர், அக்கல்லூரிக்கு மீனாட்சி கல்லூரி எனப்பெயரிட்டார். தேர்ந்தெடுத்த ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் நூல் நிலையம் முதலிய அங்கங்களாலும் கல்லூரி செவ்வனே நடைபெறலாயிற்று. ஆயினும், அஃது ஊர் நடுவண் அமைந்திருத்தலால் பிற்காலத்தில் அதனை விரிவுபடுத்தற்குப் போதிய இடம் பெறுதல் அரிதென உணர்ந்தார். பரந்த நோக்கமுடைய அண்ணாமலையார்க்கு அச்சுருங்கிய இடம் அமைதி தருமா? விரிந்த இடந் தேடும் எண்ணம் மேன்மேல் வளர்ந்தது.

தில்லைப்பதியின் கீழ்பால் எல்லையில் ஒன்றரைக் கல் தொலைவில் திருவேட்களம் என்னும் சிற்றூர் உள்ளது. அது, திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர் என்னும் சைவ சமய 'குரவர் இருவராற் பாடப்

பெற்ற தலமாகும். இவர் ஒருநாள் சில நண்பர்களுடன் அங்கே சென்று அம்மையப்பரை வழிபாடு செய்து திரும்பினர். திரும்பும்போது, மணல்மேடுகளும் மரங்களும் புதர்களும் அடர்ந்து வெற்றிடமாய் விரிந்த நிலங் கிடப்பதைக் கண்டார். கல்லூரி அமைத்தற்கு இடங் கண்டுபிடித்தலிலே கருத்தூன்றி யிருந்த அண்ணமலையார்க்கு அப்பொழுது எதிர்பாராத ஓருணர்ச்சியுண்டாயிற்று. அங்குநின்று நாற்புறமும் பார்த்தார்; இக்காட்டைத் திருத்திக் கல்லூரி அமைக்கலாமேயென எண்ணினர்; அந்த எண்ணத்தை உடன்வந்த நண்பர்களிடம் உரைத்தார். அப்பொழுது இரட்டைக் கருடன்கள் இனிய குரல் முழக்கஞ் செய்துகொண்டு அவ்வெல்லையைச் சுற்றி வட்டமிட்டுப் பறந்தன; இதுவே நன்னிமித்தமாகுமென்றும் ஆண்டவனருளால் நம் எண்ணம் நிறைவேறியதென்றும் மகிழ்ந்தார்; அதுமுதல் சில காலத்திற்குள் அவ்விடத்தில் நூறு ஏக்கர் நிலம் வாங்கினர். கரிகால்வளவன் காடுகெடுத்து நாடாக்கினன்; அண்ணமலையார் காட்டைத் திருத்திக் கல்லூரி அமைக்கத் திட்டஞ் செய்தார். "எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார், திண்ணிய ராகப் பெறின்" என்ற தெய்வப் புலவர் திருவாக்கு இவரிடம் உண்மையாயிற்று. கல்லூரி நிறுவிக் கலை வளர்த்தற்கு இவர் எடுத்துக்கொண்ட கவலை சிறிதன்று. இவருடைய கலையார்வம் அறிந்து போற்றத் தக்கது.

கணித நூல் வல்லார் கூறிய நன்னளிற் கட்டிடத்திற்கு அடிப்படைக் கல் நாட்டப் பெற்றது. வேலைகள் தொடர்ந்து நடந்தன. அண்ணமலையார் அல்லும் பகலும் அயராது உடனிருந்து வேலைகளைக்

கவனித்துவந்தார். கட்டிட வேலைகள் முற்றுப்பெறு முன்பே, பி. ஏ. வகுப்புத் தொடங்க வேண்டிய தாயிற்று. 1920-இல், கல்லூரி முதல் வகுப்பிற் பயின்ற மாணவர்கள் 1922-இல் மேல் வகுப்பிற் சேர் தற்குரிய வசதிகள் செய்யப்பட்டன. 29-6-1922-இல், அப்புதிய கலைமாளிகையில் சர். சி. ஆர். ரெட்டி அவர்கள் பி. ஏ. வகுப்பைத் தொடங்கிவைத்து, அண்ணுமலையாருடைய கலைப் பணியைப் பாராட் டிஞர். கட்டிடவேலையும் கலைவகுப்புக்களும் தொடர்ந்து நடைபெற்றன. 1923-இல், அந்தக் கலை மாளிகை கவினுறப் பொலிந்து கண்ணுக்கினிய காட்சியளித்தது; அண்ணுமலையாருடைய திண் ணிய நெஞ்சம்போல் விரிந்து பரந்து மேல் நோக்கி விளங்கியது. இதுவே அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திற்கு அடிகோலிய முதன் மாளிகையாகும். நடுநாயகமாய்த் திகழ்வதும் இஃதேயாகும். கள்ளி யும் முள்ளியும் காடும் மேடும் அடர்ந்த திரு வேட்களம், அந்நாள்முதல் கலைவேட்களமாயிற்று. 1924-இல், ஆசிரியர் சிலரும் மாணவர் சிலரும் தங்கி யிருத்தற்கு வீடுகளும் விடுதிகளும் அமைக்கப் பெற் றன. 1925-இல் ஆங்கிலம், வரலாறு, பொருளா தாரம் ஆகியவற்றில் கலைச்சிறப்பு (பி. ஏ. ஹானர்ஸ்) வகுப்புக்களும் உண்டாயின.

இக்கால உலகம் விஞ்ஞானத்தால் நடைபெறு கிறது; ஆக்கல் காத்தல் அழித்தல் என்னும் முத் தொழிலும் விஞ்ஞானத்தால் மிளிர்கின்றன; விஞ் ஞான உணர்ச்சி மெய்ஞ்ஞானத்திற்கும் அடிப்படை யாயுள்ளது; விஞ்ஞானக் கலையை விடுத்து வேறு கலை கற்றலால் பெரும்பயன் விளைவதில்லை; வெளி நாட்டு மக்களைப்போல் நம் நாட்டு மக்களும் விஞ்

ஞானத் துறையில் மேம்படல் வேண்டும் என்ற நன்னோக்கத்தால் 1925-இல் விஞ்ஞான மாளிகையுங் கட்டிமுடிக்கப் பெற்றது. அப்போது சென்னைக் கவர்னராயிருந்த கோஷன் என்பார், அண்ணாமலையார் வேண்டுகோளுக்கு இணங்கி வந்து அம் மாளிகைத் திறப்புவிழா நடத்தி வள்ளல் அண்ணாமலையாருடைய மாண்புமிக்க கலையார்வத்தை வாயாரப் புகழ்ந்து வாழ்த்தினார். வரலாற்றுப் பேராசிரியர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார் மீனாட்சி கல்லூரிக்குத் தலைவரானார்.

"தொன்மை மறவேல்" என்பது கவியரசியின் அறிவுரை. தாய்மொழி யல்லாத பிற மொழிகள் எத்தனை வேண்டுமானாலும் அறிவுடையவர் கற்கலாம். புதிய புதிய கலைத்துறைகளில் திளைத்தும் இன்புறலாம். அவற்றைத் தடுப்பவரில்லை; தடை செய்தலுங் கூடாது. ஆயினும், ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த நாட்டின் தட்ப வெப்ப நிலைகளுக்கேற்பத் தொன்று தொட்டே சில வழக்க ஒழுக்கங்களும் நாகரிக முறைகளும் தனித்தனி அமைந்து கிடக்கின்றன. அவையே அந்தந்த நாட்டு மக்களின் உடலிலும், உள்ளத்திலும், உணர்ச்சியிலும் ஊறிநிற்பன.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே"

என்ற தேசியகவி பாரதியாரின் உணர்ச்சிப் பெருக்கைப் பாருங்கள். இவற்றை மறுக்கவும் மறைக்கவும் முடியுமா? ஆகவே, தமிழர் தம் தனிப் பண்புகளை அறிந்து வளர்ப்பதற்குத் தமிழ்மொழியிலுள்ள சிறந்த இலக்கிய இலக்கணங்களை வரன்

முறையாகவும் திட்பமாகவும் கற்றுத்தெளிதல்வேண்டு மெனக் கருதி சர். அண்ணுமலையார் 1927-இல் மீனுட்சி தமிழ்க்கல்லூரி நிறுவினர். அதில், சென்னைப் பல்கலைக்கழகப் பாடத் திட்டத்தின்படி வித்துவான் வகுப்புக்கள் நடந்தன. பெரும்பேரா சிரியர், தென்மொழிக் கலைச்செல்வர், அறிஞர், உ. வே. சாமிநாதையர் அக்கல்லூரிக்குத் தலைவ ராஞர்.

மேலும், பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் மொழியோடு நெருங்கிய தொடர்புடையது வட மொழி. அது சமயநூல்கள் பலவற்றைத் தன் னகத்தே கொண்டிருப்பது. ஆதலின், அதனைப் புறக்கணித்தலும் முறையன்று என எண்ணி, அவ் வாண்டிலேயே மீனுட்சி வடமொழிக் கல்லூரியும் அமைத்தார். அதற்கு மகாமகோபாத்தியாய தண்ட பாணி தீட்சிதர் தலைவராஞர். சிரோமணி வகுப்புக் கள் அதில் நடைபெற்றன. இவ்வாறு, தென்மொழி வடமொழிக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்துக் கற்பித்தல்மாத்திரம் அமையாது; அவர்களுக்கு ஆசிரியப் பயிற்சியும் அளித்து நாட்டில் மொழிப் பணி புரிய விடுத்தல்வேண்டுமென்ற கருத்துக் கொண்டு பண்டிதர் போதனுமுறைப்பயிற்சிக் கல்லூரியும் நம் அண்ணுமலையாரால் நிறுவப் பெற்றது.

ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன் னிருந்த பாண்டிய மன்னர்கள் இயல் இசை கூத்து என்னும் முத்தமிழையும் முச்சங்க வாயிலாகப் போற்றிவளர்த்தனர். இக்காலத்தில் அவர்கள் இல்லை; ஏனைத் தமிழரசர்களும் இல்லை. தமிழ் வளப்பவர் தண்பாண்டிநாட்டார் என்ற புகழ் என்றும் நிலை

பெறுதல்வேண்டும். ஆதலால், அப்பாண்டிநாட்டுப் பிறந்த நாம் முத்தமிழையும் வளர்த்தல் தக்கது. மீனாட்சி தமிழ்க்கல்லூரியால் இயற்றமிழ் வளர்கின்றது. மூன்று கல்லூரி மாணவர்களாலும் ஆசிரியர் சிலராலும் நாடகத்தமிழ் விருந்து நன்கு ஊட்டப் பெறுகின்றது. இசைத் தமிழ் வளர்தற்கு இடமில்லை. இக்குறை நீக்கப்படுதல் வேண்டுமென எண்ணிய அண்ணாமலை வள்ளல் 1929-இல், இசைக் கல்லூரியும் நிறுவினார். இவ்வாறாக, 1920-ஆம் ஆண்டு முதல் 1929-ஆம் ஆண்டுவரை பத்தாண்டுகளுக்குள் நான்கு கல்லூரிகள் அமைத்து நாட்டிற் கல்வியை வளர்க்கும் அரும்பெரும் பணியில் இவர் தலைசிறந்து விளங்கினார். அக்கல்லூரிகள் இளம் பிறைபோல் நாளுக்குநாளும் கலைநலம் பெற்றுச்செழித்து ஓங்கி வளர்ந்துவரலாயின. அக்காலத்தில் வேறு எந்தத் தமிழ்மகனும் இவ்வாறு கல்விப்பணியிற் பெரும்பாலும் ஈடுபடவில்லையென்றே கூறலாம். 19-ஆம் நூற்றாண்டிற் சிறந்துவிளங்கிய பெருந்தகையாளரான பச்சையப்ப முதலியாருக்குப் பின்பு, இவரே காலத்திற்கேற்ற கல்வி வளர்ச்சியிற் கருத்தூன்றினார் ஆவர்.

## 6. பல்கலைக் கழகச் சட்டம்

இந்தியாவில் சென்னை, பம்பாய், கல்கத்தா, டில்லி, ஆக்ரா, காசி, அலகாபாத், நாகபுரி, பாட்னா, டாக்கா, பஞ்சாப், அலிகார், லக்னௌ, ஹைதராபாத், மைசூர் ஆகிய இடங்களில் பல்கலைக் கழகங்கள் தோன்றிக் கல்வி பரப்பிவந்தன. 1926-இல் ஆந்திரர்களுக்குத் தனிப் பல்கலைக் கழகம் உண்டாயிற்று.

கன்னடருக்கு மைசூர்ப் பல்கலைக் கழகம் முன்பே யிருந்தது. தமிழர்களுக்கு ஒரு பல்கலைக் கழகமும் இல்லை. உலகிலேயே முன்மொழியென்றும், தொன் மொழியென்றும், என்றுந் தன் இளமைச் செவ்வி நலங்குன்றாத இன்மொழியென்றும் பேசப்படுகின்ற தென்மொழிக்கு, ஒரு பல்கலைக் கழகம் இல்லையென்ற குறை இருந்தது. பொருள் மிகப்படைத்த புண்ணியர் களுக்குப் பொதுநலத்தொண்டில் மனஞ்செல்லுவ தில்லை. பொதுநலப்பணி புரிய விரும்புவோர்க்குப் பொருள் கிடைப்பதில்லை. விதியின் திருவிளையாடல் இதுவாகும். வீரமிக்க தமிழர்கள் மேடைகளிலேறிச் சொன்மாரி பொழிந்தார்கள். "தமிழர் பண்பாடு தழைத்தோங்க வேண்டுமானால் தனிப்பல்கலைக் கழகம் வேண்டும் ; 'நிதிமிகுத்தவர் பொற்குவை தாரீர், நிதிகுறைந்தவர் காசுகள் நல்கீர்" என வீரமுழக்கஞ் செய்தனர். பணப்பெட்டியின் அருகே கைசெல்லும் போது பாம்புப்புற்றின் அருகே செல்வதுபோல் நடுங்கினால் பணம் வெளியில் வருமா ? யாரும் முன்வரவில்லை. ஞாலமுழுதும் தனிச்செங்கோல் செலுத்திய தமிழரசி தன் கோடிக்கணக்கான மக்க ளின் நிலையை எண்ணியெண்ணிச் சாம்பித் தேம்பிக் கிடந்தாள். தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவுதற்கு யாரும் முன்வராததுகண்டு எழுந்தார் ஒரு தனிப் பெருவள்ளல் ! அவரே தென்னாட்டுக் குபேரராகிய திவான்பகதூர் சர். அண்ணாமலைச்செட்டியார்.

" மீனாட்சி கல்லூரிகளும், நூல் நிலையங்களும், மாணவர் விடுதி முதலியனவும், இவற்றைச் சூழ்ந் துள்ள நிலப்பரப்பும் (அக்காலத்தில்) 20-லட்சம் ரூபாய் மதிப்புடையன ; மேலும் 20-லட்சம் ரூபாய் நன்கொடையாகத் தருகின்றேன் ; இக் கல்லூரிகளை

ஒன்று சேர்த்துப்பல்கலைக் கழகம் ஆக்குங்கள்" என்று வள்ளல் அண்ணாமலையார் மனமார அரசாங்கத்தார்க்கு அறிவித்தார். "செயற்கரிய செய்வார் பெரியர்" என்னும் சிறப்புப் பெயரை இவருக்குச் சூட்டுதல் பொருத்தமுடையதேயாகும். அரசியலாரும் இவ்வள்ளற் பெருமானுடைய வண்மைக் குணத்தையும் மனத்திண்மையையும் நினைந்து வியந்து பாராட்டினர். "நாங்களும் இருபது லட்சம் ரூபாய் வைப்புப் பொருளாக வழங்குகின்றோம்; கட்டிடங்கள் கட்டுதற்கு ஏழரை லட்சமும், ஆண்டுதோறும் உதவித் தொகையாக ஒன்றரை லட்சமும் உதவுவோம்; அப் பல்கலைக் கழகம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என்றும், அதன் சார்பாக உண்டாகும் நகரம் அண்ணாமலை நகரம் என்றும் எந்நாளும் வழங்கப் பெறும்" என அரசாங்கத்தார் உடன்பட்டு உறுதி கூறினர். இச்செய்தி செய்தித் தாள்களில் வெளி வந்தது. ஏங்கிக் கிடந்த தமிழர்கள் இறுமாந்து உடல் பூரித்தார்கள்; உள்ளங் குளிர்ந்தார்கள்; "வாழ்க அண்ணாமலை! வளர்க பல்கலைக் கழகம்!" என்று வாயார வாழ்த்தினர். தன்னுடைய மானங்காத்த தவமகன் செயலைக் கண்டு தமிழ்த்தாயும் பல்லாண்டு பாடினுள். மேலே கூறியவாறு பெருந்தொகை வழங்கியதோடு அமையாது பின்னும் பல கட்டிடங்கள் கட்டுதற்காகவும் பரிசுகள் வழங்குதற்காகவும் இத் தமிழ்ப் பெருவள்ளல் உதவிய தொகைகள் பலவாகும். சற்றேறக்குறைய ஐம்பது லட்சம் ரூபாய்க்கு மேலும் இப்பல்கலைக் கழகத்திற்கு இவ்வள்ளலார் கொடுத்துள்ளார் என்பது அறியத்தக்கது.

"ஈட்டிய தெல்லாம் இதன்பொருட் டென்பதே
காட்டிய கைவண்மை காட்டினர்—வேட்டொறுங்

காமருதார்ச் சென்னி கடல்சூழ் புகார் வணிகர்
தாமரையுஞ் சங்கும்போல் தந்து"

என, வணிகர் ஈகைக்கு மேற்கோளாகக் காட்டப் பெறும் பழம்பாடற்கு, வள்ளல் அண்ணுமலையார் சிறந்ததோர் எடுத்துக்காட்டாக அமைந்தது பாராட் டற்குரியது.

அப்போது, சென்னையில் "சுய ராச்சியா" பத்திரிகையின் ஆசிரியராயிருந்த யோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் அப்பத்திரிகையில் வெளியிட்ட வாழ்த்துரைகளையும் ஈண்டுக் காண்போம்.

"இப்பல்கலைக் கழகம் நமது தமிழகமே தகழியாக, தமிழர் அன்பே திரியாகக் கொண்டு பொலியும் அறிவுச்சுடர். இதற்கு நம் முயற்சியும் உழைப்புமே நெய். தமிழுக்கு ஒரு கலைக்கோயில் கிடைத்தது; ஆங்கிலக் கொடியின்கீழ் இத்துணை எளிதாக ஒரு புதிய பெருங்கழகம் எழுந்தது வியப்பே. அண்ணுமலைச் செட்டியாரின் வண்மையும் தன்மையுமே அதற்குக் காரணம். முழுஉரிமை பெற்ற இந்தியா உதயமாகப் போகின்றது. இக் கழகம் உரிமைத் தமிழகத்தின் அறிவு நிலைய மாகுக! இதிலிருந்து, இராமன் போன்ற விஞ்ஞானி கள், மெய்கண்டார் போன்ற மெய்ஞ்ஞானிகள், கம்பன் போன்ற கவிகள், நியூடன் எயின்ஸ்டன் போன்ற கணக்கர், எடிசன் மார்க்கோனி போன்ற ஆராய்ச்சிப் புலவர், மாதாம்கூரி போன்ற பெண் மணிகள் போந்து தமிழுலகைப் பெருமைப் படுத்துக." என்று தமது தமிழார்வமும் கலை யார்வமுந் தோன்ற வாழ்த்துக் கூறியது அறிந்து மகிழத்தக்கது.

சென்னைச் சட்டசபையில் இப்பல்கலைக் கழகம்

பற்றிய மசோதா வந்தது. சட்டங்கள் வகுக்கப் பட்டன. சட்டசபை உறுப்பினர்கள் தத்தம் கருத்துக்களை வெளியிட்டனர். முதல் அமைச்சர் டாக்டர் சுப்பராயன், எஸ். சத்தியமூர்த்தி, சர். ஏ. பி. பாத்ரோ, சர். கே. ராமுண்ணி மேனன், பனகால் அரசர், ஆர். சீநிவாச ஐயங்கார் முதலானவர்கள் மசோதாவை ஆதரித்துப் பாராட்டிப் பேசினர். அப்பேச்சுக்களில் சில பாராட்டுப் பகுதிகள் மாத்திரம் அடியில் தரப்படுகின்றன :—

டாக்டர் சுப்பராயன் கூறியதாவது :—“ சிதம்பரத்திற்கு அணிமையில் ஒரு பல்கலைக் கழகம் நிறுவுவது பற்றிய ஒரு மசோதாவை நான் கொண்டு வருகிறேன். மீனாட்சி கல்லூரி நிறுவியவரான சர். அண்ணாமலைச் செட்டியாரின் பெருங் கொடையால் இப்புதிய பல்கலைக் கழகம் நடைபெறுவதாகும். இம்மசோதாவை அறிஞர்கள் ஆராய்ந்து தீர்மானிக்கும்படி வைக்கிறேன் ” என்பதாகும்.

சர். ஏ. பி. பாத்ரோ —“ ஆந்திரர்க்குத் தங்கள் கலைப்பண்பை வளர்க்க ஆந்திர சர்வகலாசாலை உள்ளது. தனி நாகரிகப் பண்பும் கலைச் செல்வமும் உடைய தமிழர் பெருமிதங் கொள்ளத் தமிழகத்திற்கு இப்பல்கலைக் கழகம் உண்டாவது சிறந்தது ” என்று பேசினர்.

திரு. ஆர். சீநிவாச ஐயங்கார் “ நான் இந்த மசோதாவை ஆதரிக்கிறேன் ; மனமார வாழ்த்துகிறேன். சர். அண்ணாமலைச் செட்டியார் இருபதாம் நூற்றாண்டின் பச்சையப்பர் ; பரம்பரையாக அறம் புரிந்து வரும் பெருங்குடியிற் பிறந்தவர் ; உயர்ந்த நோக்கமும் உதாரகுணமும் உடையவர். இவர் இப்போது நாட்டுதற்கு முன்வந்திருக்கும் பல்கலைக்

கழகம் நாட்டிற்கே புதியது. இது சிறந்ததோர் செய லாகும். இந்தத் தென்னுட்டில் எந்தச் செல்வரும் மன்னரும் வணிகரும் இத்துணைப் பெரியதோர் அறத்தைச் செய்ததில்லை'' என்று பாராட்டினுர்.

டாக்டர் சுப்பராயன் ''இப் பல்கலைக் கழகம் உயர்ந்த நோக்கங் கொண்டது. பல்கலைக் கழகத் தின் குறிக்கோள் மாணவர்களைத் தேர்வு நடத்தி அனுப்புவது மாத்திரமன்று ; ஒழுக்கமும் நேர்மையும் வாய்ந்த மக்களை உலகிற்கு அளிப்பதேயாகும். அவ் வுயரிய நோக்கத்தை இப்பல்கலைக் கழகம் நிறைவேற் றும். இது, சாட்லர் அறிக்கையைத் தழுவியமைவது; ஆசிரியரும் மாணவரும் உடனிருந்து பயிலும் புது முறையை மேற்கொள்வது. இதன்கண், குலம், மதம், கொள்கை பற்றிய வேறுபாடின்றி எல்லோரும் ஒரு நிகராயிருந்து கற்பார்கள். நாம் தமிழைப் பற்றி வானளாவப் புகழ்கின்றேம். ஆனுல், தமிழ் இன்னும் முற்போக்கடையவில்லை. இப்புதிய பெருங் கழகம் தமிழ்க்கலை வளர்ச்சியிலேயே மிகுதியாகக் கருத்தைச் செலுத்தும். தமிழருக்குத் தனிப்பெருங் கழகம் ஒன்று வேண்டுமென்று முன்பே நாம் கருதி ஞேம். அக்கருத்து சர். அண்ணுமலைச் செட்டியார் கொடைத்திறத்தால் இப்போது நிறைவேறுகிறது. அவர் பிறர் நலத்திற்கே பொருளீட்டிய பெருந்தகை யாளர். அவருக்கு நமது நன்றி உரியது'' என்று நல்லுரை நவின்றுர்.

சர். கே. ராமுண்ணி மேனன் ''சென்னை யில், உடனுறை பெருங்கழகம் ஒன்று நிறுவுதற்கு நாம் எத்துணையோ முயன்றும் அம்முயற்சி பய னளிக்கவில்லை. சர். அண்ணுமலைச் செட்டியாரின் விரிந்த மனப்பாங்கால் தோன்றும் இப் புதுமுறைப்

பெருங்கழகத்தை விரைவிற் காண்போம்" என்று புகழ்ந்தார்.

திரு. எஸ். சத்திய மூர்த்தி "அரசாங்கத்தார் கொண்டுவரும் தீர்மானங்கள் எவற்றையும் எதிர்ப்பவன் என்று என்னைப்பற்றிப் பலர் குறைகூறுவர். ஆனால், இம்மசோதாவை நான் உண்மையாகவே ஆதரிக்கிறேன். சென்னைப் பல்கலைக் கழகத்தைப் பார்க்கிலும் இப் புதிய பல்கலைக் கழகம் நம் நாட்டுக்குப் பல நற்றொண்டுகள் செய்யுமென்று நம்புகிறேன். பட்டதாரிகளைப் பெருக்குவதால் நன்மையே தவிரத் தீமையில்லை. அவர்களைக் கொண்டு பொது மக்களுக்கு எளிதாகக் கல்வி தரலாம். நம் நாட்டிற் படித்தவர் தொகை மிகுதியாக வேண்டும். இந்த உடனுறை பெருங்கழகம் பண்டைநாட் குருகுலமும் இற்றைநாள் ஆக்ஸ்போர்டும் ஒன்று சேர்ந்தாற் போல்வது. நிதி அமைச்சர் மனங்கசிந்து கல்விக்காகப் பல லட்சம் உதவ முன் வந்திருப்பது பாராட்டற்குரியது. நம் நாட்டின் முதல் மொழிகளான தமிழும் வடமொழியும் இதனால் வளர்ச்சியுறும். இப் பெரு முயற்சியை மேற்கொண்ட சர். அண்ணாமலைச் செட்டியாருடைய பொதுநலப் பணியையும் வள்ளன்மையையும் மனமாரப் போற்றுகின்றேன்" என்று நயம் தோன்றப் பேசினார்.

இங்ஙனம், பலருடைய பாராட்டும் ஆதரவும் பெற்ற பல்கலைக் கழக மசோதா ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப் பெற்றது. "திவான் பகதூர்" குமாரசாமி ரெட்டியாரைத் தலைவராகக்கொண்ட ஆய்வுக் குழுவினர் ஒரு திங்கள்காறும் அதன் விதி முறைகளை ஆராய்ந்து திருத்தம் செய்தனர். அத்திருத்த மசோதா 11-10-1928-இல் சட்ட சபையில் எடுத்துக்

கொள்ளப்பட்டது. மீண்டும் ஒரு சில திருத்தங் களுடன் அண்ணுமலைப் பல்கலைக் கழக மசோதா அன்றே சட்டம் ஆகியது. முதல் அமைச்சர் டாக்டர் சுப்பராயன் அவர்கள் "இப்பொழுது அண்ணுமலைப் பல்கலைக் கழக மசோதா சட்டமான நற்செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன். என் மதிப்புக்கு உரிய நண்பர் சர். அண்ணுமலைச் செட்டியாருடைய பெருங் கொடைத் திறத்தால் தோன்றும் பல்கலைக் கழகம் வெற்றி பெற்று விளங்குவதாக" என நல்லுரை பகர்ந்தார்.

எஸ். சத்திய மூர்த்தி அவர்கள், "இம் மசோதா சட்டமானதுபற்றி மிக்க மகிழ்ச்சி யடைகின்றேன். என் நண்பர் சர். அண்ணுமலைச் செட்டியார் சிறி தேறக்குறைய நாற்பது லட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருள்களையும் தொகையையும் இப்பல்கலைக் கழகத் திற்கு வழங்கியுள்ளார். தென்னிந்தியாவில் இது வரை யாரும் இவ்வாறு செய்ததே யில்லை. இஃது உடனுறை பெருங்கழகம் ஆதலால் இதில் இடம் பெறும் ஆசிரியர்கள் நிரம்பிய தகுதியுடையவர் களாகவே இருப்பார்களென நம்புகிறேன். ஆக்ஸ் போர்டு கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களிலிருந்து வெளிவரும் மாணவர்களைப்போல் இப்புதிய பல்கலைக் கழகப் பட்டதாரிகளும் உலகம் புகழும் அறிவாற்றல் மிக்கவராய்த் திகழ்தல் வேண்டும். உலக மொழி யான ஆங்கிலத்துடன் நம் பழம்பெருங் கலைச் செல்வங்களான செந்தமிழும் வடமொழியும் செழித் தோங்க வேண்டும். நாடு உரிமை பெற்றபின் நமது விருப்பம்போல் உயர்தரக் கல்வியை வளர்க்கலாம். இப் பெரும்பணியைச் செய்துள்ள சர். அண்ணு

மலைச் செட்டியாருக்கும் புதிய பல்கலைக் கழகத்திற்கும் வாழ்த்துக் கூறுகின்றேன்'' என்ருர்.

பனகால் அரசர் ''சர். அண்ணுமலைச் செட்டியாருடைய ஒப்புயர்வற்ற அறச்செயல் நம் நாட்டு வரலாற்றில் முதலிடம் பெறும் தகுதி வாய்ந்தது. அவருடைய எண்ணமும் ஈகையும் மிக உயர்ந்தவை. கல்விக்காக இவ்வளவு பெரும்பொருளை வாரி வழங்கிய வள்ளலை இந்நாட்டிற் காண்பது அரிது. அவருடைய நன்முயற்சிக்கு உதவியாக அரசாங்கமும் பெருந்தொகை வழங்கியிருப்பது போற்றற்குரியது. அரசியலாரும் பொதுமக்களும் அண்ணுமலையாருடைய அரும் பெருந் தொண்டினைப் போற்றிப் புகழ்கின்றனர். கோயிற் பணிகளில் பெருநோக்குடைய தனவணிக மரபிற் பிறந்த இவர் இப்போது கலைக் கோயில் நிறுவி நாட்டு மக்களின் அறிவுக் கண்ணைத் திறக்க முன்வந்திருக்கிருர். இவரைப் பின்பற்றி ஏனைய செல்வர்களும் இத்துறையில் ஈடுபடுவார்களாயின் பிற நாடுகள்போல் நம் நாடும் அறிவு விளக்கமும் நாகரிக வளர்ச்சியும் பெற்று முன்னேற்றமடையும் என்பது ஒருதலை. அண்ணுமலை வாழ்க! அவர் பெயரால் அமைக்கப்பெறும் பல்கலைக் கழகம் வளர்க!'' என உணர்ச்சியும் உருக்கமுந் தோன்றப் பேசினுர்.

பின்னர், சட்டசபையால் முழுமனத்துடன் ஒப்புக்கொள்ளப்பட்ட இப்பல்கலைக் கழகச் சட்டம், சென்னைக் கவர்னராலும், இந்திய அரசப் பிரதிநிதியாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1929-ஆம் ஆண்டின் முதல் சட்டமாக அண்ணுமலைப் பல்கலைக் கழகச் சட்ட விதிகளெல்லாம் அரசாங்கப் பதிவேட்டில் வெளி வந்தன. இவ்வாறு சட்டம் நிறைவேற்றப் பெற்ற

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தையும் அதன் சார்பாக அமைக்கப் பெற்ற அண்ணுமலைநகரையும் இனிக் காண்போம்.

# 7. அண்ணுமலைப் பல்கலைக் கழக அமைப்பு

சிதம்பரம் புகைவண்டி நிலையத்திலிருந்து நேரே கிழக்குத் திசையில் ஏறத்தாழ ஆறு பர்லாங்குத் தொலைவில் அண்ணுமலைப் பல்கலைக் கழகம் இருக்கின்றது. கார் முதலிய ஊர்திகள் செல்லுதற்குச் செவ்வையான நடைவழிகள் வகுக்கப்பட்டுள்ளன. அவ்வழியின் இருமருங்கும் நிழல்தரும் மரங்கள் நின்று, ஆங்கு வருவோரைத் தண்ணளியுடன் வரவேற்று உபசரிப்பனபோற் காட்சியளிக்கும். சிறிது தூரம் சென்ருல், அந்நேர்வழியின் வடபாகத்தில் இரண்டு பெரிய கட்டிடங்கள் காணப்படும். அவை சிவில், எலக்ட்ரிகல், மெக்கானிகல், கெமிகல் என்னும் பொறிக்கலை வகுப்புக்கள் நடத்தப்பெறும் எஞ்சினீரிங் கல்லூரியும், டெக்னுலஜிக் கல்லூரியும் ஆகும். இவற்றுள், டெக்னுலஜிக் கல்லூரிக் கட்டிடங் கட்டுதற்கு டாக்டர் ராம. அழகப்ப செட்டியார் (பார்-அட்-லா) அவர்கள் ஐந்து லட்சம் ரூபாய் நன்கொடையளித்துள்ளார்கள். இக்கல்லூரிகள் அணிமைக் காலத்தில் தோன்றினவை யாயினும் வழியின் முன்னிடத்தில் இருத்தலால் முதலிற் குறிக்கப் பெற்றன.

அவற்றிற்குத் தென்பாகத்தில் அக்கல்லூரி மாணவர்கள் உண்ணுதற்கும் தங்குதற்கும் வேண்டிய வசதிகளுடன் கூடிய விடுதி (Hostel) அமைந்

துள்ளது. அம்மாணவர் விடுதிக் கட்டிடங் கட்டு தற்கு, திருவனந்தபுரம் பேரரசர் ஒரு லட்சம் ரூபாய் நன்கொடையாக வழங்கியுள்ளார். இன்னும் சில விடுதிகள் அமைப்பதற்கு உதவிசெய்ய அரசாங்கம் முன்வந்துள்ளது.

மேலும் சிறிது தூரம் கிழக்குநோக்கிச் சென்ருல், நடைவழியின் தென்பாகத்தில் பல்கலைக் கழகத் துணைவேந்தர் (Vice-Chancellor) மாளிகை காணப் படும். அது, பசும்புல் தரையும் பூந்தோட்டமும் சூழப்பெற்றுத் தனிப்பெருந் தோற்றத்துடன் விளங்கு வதாகும். சுகாதாரத் துறையில் அமைந்த பல வசதி களுடன், அஃது ஓர் அரசர் குடியிருப்பைப்போல் அழகுறத் திகழ்கின்றது.

அப்பால் சிறிது தூரத்தில் சாலையின் வடபாலும் தென்பாலும் இரண்டு நீர்த்தேக்கங்கள் உள்ளன. அவற்றில் கொள்ளிட நன்னீர் தேக்கிவைக்கப் பெற் றிருக்கிறது. அது, நன்ருகத் தூய்மை செய்யப்பட்ட பின் அண்ணுமலைநகரத்தில் வாழ்வோரனைவருக்கும் குழாய்களின் வழியாகப் பயன்படுகிறது. அத்தேக்கங் களின் நாற்புறக் கரைகளிலும் தெங்கிளஞ் சோலை கள் செறிந்திருக்கும். அவை குலைகுலையாகக் காய்த் திருக்கும் தோற்றம், தாளுண்ட நீரைத் தலையாலே தரும் நன்றியறிவைப் புலப்படுத்துவது போலிருக்கும்.

நீர்நிலைகளைக் கண்டு ஆண்டே தங்காமல் அவற்றின் கீழ்ப்புறம் உள்ள வளைவைக் கடந்து சென்ருல், அஞ்சா நெஞ்சம் படைத்த ஆண்மகன் தலைநிமிர்ந்து நிற்பதுபோல் அழகிய தோற்றமுடைய தாய ஆங்கிலக் கலை மாளிகை, எதிரே மேற்குத் திசை நோக்கிக் காட்சியளிக்கும். இதன் சிகரத்தில் "மீனுட்சியம்மை" திருவுருவம் அமைக்கப் பெற்

றிருத்தலைக் கண்டு இதுவே முதன் முதலில் (1922-இல்) கட்டப்பெற்ற மீனாட்சி கலைக் கல்லூரி என அறிதல் கூடும்.

ஆங்கிலக் கலைமாளிகையின் வடமேற்குத் திசையில், பட்டமளிப்பு விழா மண்டபம் பனிமலை போலப் பாங்குறத் திகழும். அஃது ஐந்து லட்சம் ரூபாய் செலவிட்டு அமைக்கப் பெற்றது. அம்மண்டபத்தின் உள்ளே சென்றால், சலவைக் கற்கள் தண்ணொளி பரப்பிப் பலநிறங் காட்டிப் பரவசப்படுத்தக்காணலாம். பல்கலைக் கழக மாணவ மாணவியர், தத்தம் கலைத் துறையை முடித்துக் கவர்னர் முன்னிலையில் பட்டம் பெறுதற்கு உரிய இடம் அதுவாகும். அங்கு, விருந்தினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மாணவியர் ஆகியோர் தனித்தனியே அமர்வதற்கு, நிலையாக அமைக்கப் பெற்றுள்ள இருக்கைகள் இரண்டாயிரம் பேருக்குப் பொருத்தமாக இருக்கின்றன. அம்மண்டபத்தின்கண் உள்ள அழகிய மேடையின் நடு இடத்தில், பல்கலைக் கழகம் நிறுவியவராகிய டாக்டர் இராசா. சர். அண்ணாமலைச் செட்டியாருடைய திருவுருவ முழுப்படம் கண்கவர் வனப்புடன் காட்சியளிக்கும். அதன் தோற்றமானது, அண்ணாமலையரசர், பல்கலைக் கழகத்தின் நடைமுறைகளைப் பகலும் இரவும் அகலாது நின்று பார்த்துக்கொண்டிருப்பது போன்ற உணர்ச்சியை ஊட்டுவதாகும். அம் மேடையின் இரண்டு பக்கங்களிலும், தில்லையிற் பள்ளி கொண்ட திருமாலும், அருட்கூத்தாடும் அம்பலவாணரும் ஆகிய இருவருடைய திருவுருவங்கள் உலோகத்தாற் சமைக்கப் பெற்று ஒளி பரப்பிக்கொண்டிருக்கின்றன. எத்தனையோ அரசர்கள், அமைச்சர்கள், அறிஞர்களுடைய அரிய சொற்

பொழிவுகள் அம்மேடையில் நடைபெற்றிருக்கின்றன. காண்பவர் கண்ணுக்கும் கருத்துக்குங் களிப்பூட்டும் நாடகங்கள், மாணவர்களால் அதில் நடிக்கப்படுதலும் உண்டு. இப்போது அம்மேடையில் வாரத்தில் ஒரு முறை மாணவர் அறிவுவளர்ச்சிக்கு ஏற்ற கலைத் துறைப் படங்கள் வெள்ளித் திரையிற் காட்டப்படுகின்றன.

பட்டமளிப்பு விழா நடைபெறும்போது அம் மேடையின்மேல், பல்கலைக் கழகச் சட்ட மன்றத்தினரும் (Senators) ஆட்சிக் குழுவினரும் (Members of the Syndicate) தத்தம் பெயர் குறிக்கப்பெற்ற இருக்கைகளில் பிறைவடிவில் அமைந்த வரிசையில் அமர்ந்திருப்பர். அவர்கள், பெரும்பாலும் அப்பதவிகளுக்கும் தங்கள் பட்டங்களுக்கும் பொருத்தமான உடைகளுடன் காணப்படுவர். அவர்களுக்கு முன்னிடத்தில், பல்கலைக் கழகம் நிறுவியவர் (Founder and Pro-Chancellor), விழாத்தலைவர் (Chancellor and Governor), பல்கலைக் கழகத் துணைவேந்தர், விழாச் சொற்பொழிவாளர் ஆகிய இவர்கள், சிறந்த இருக்கைகளில் வீற்றிருப்பர். பட்டம் பெறும் மாணவ மாணவியர், தத்தம் பட்டங்களுக்கு உரிய அங்கிகள் அணிந்து, ஒருவர் பின் ஒருவராக மேடையில் ஏறிப் பட்டமும் பரிசுகளும் பெற்றுச் செல்லுங் காட்சி பார்த்தற்கினியது. அம்மண்டபத்தின் முகப்பிலுள்ள கோபுரத்தின்மீது நாடோறும் ஏற்றப்படும் மின்சார விளக்கின் ஒளி, திருவண்ணுமலை யென்னும் பெருமலையின் உச்சியில் ஏற்றப்படும் கார்த்திகை விளக்கின் சுடரொளிபோல் நெடுந்தொலைவு காணப்படும். அம் மண்டபத்தின் மேற்குப் பக்கத்தில் பல்கலைக் கழகத் துணைவேந்தர், பதிவாளர் (Registrar) இவர்

O31:6w
907

களுக்குத் தனித்தனி அலுவலறைகள் உள்ளன. அன்றியும், பல்கலைக் கழகத்தின் பலதுறையான அலுவலகங்களும், பல்கலைக் கழகச் சட்ட மன்றத்தினரும் ஆட்சியாளரும் அவ்வப்போது கூட்டங்கள் நடத்துதற்கு உரிய மண்டபமும் (Senate Hall) ஆங்குக் காணப்படும்.

பட்டமளிப்பு மண்டபத்தின் கீழ்பால், ஒரு பெரிய நூல் நிலையம் இருக்கின்றது. அதில், எண்பதினாயிரம் நூல்கள் பொருளுக்கேற்பப்பிரிக்கப்பட்டு வரிசை வரிசையாக அடுக்கி வைக்கப் பெற்றிருக்கின்றன. அக்காட்சி காணத்தக்கதொன்று. பல மொழிகளில் எழுதப்பட்ட நூல்களும் பலப்பல கலைத் துறை பற்றிய நூல்களும் ஆங்கு உள்ளன. பிற சில இடங்களிற் கிடைக்கப்பெருத அரிய நூல்களும் பழைய சஞ்சிகைகளும் ஏட்டுச் சுவடிகளும் அந்நூல் நிலையத்தில் உண்டு. காலை ஏழு மணி முதல் இரவு ஒன்பது மணிவரை ஆசிரியர்களும் மாணவர்களும் அங்குச் சென்று தமக்கு விருப்பமான நூல்களைப் படித்துப் பயன்பெறுதற்கு எல்லா வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. அன்றியும், பலப்பல செய்தித் தாள்கள், வார வெளியீடுகள், திங்கள் வெளியீடுகள், ஆண்டு மடல்கள் ஆகியவை நானூற்றுக்குக் குறையாமல் அங்கு மாணவராலும் ஆசிரியராலும் பயன்படுத்திக்கொள்ளப்படுகின்றன. ஆசிரியர்களும் மாணவர்களும் தம் பெயர் எழுதப்பட்ட சீட்டுக்களைக் கொடுத்துத் தமக்கு வேண்டிய நூல்களை வெளியில் எடுத்துக்கொண்டும் செல்லலாம். இந்நூல் நிலையத்தின் மேல்மாடியில் நூல் நிலையத் தலைவர்க்கும் அலுவலாளர்களுக்கும் தனித்தனி அறைகள் இருக்கின்றன. தமிழ் ஆராய்ச்சிக்



அண்ணாமலைப் பல்கலைக் கழகக் கட்டிடம்

(அலுவலகமும் நூனிலையமும்)

கூடமும் தற்காலிகமாக அங்கே உள்ளது. இத் தகைய நூல்நிலையம் நம் நாட்டில் அருமையாகவே இருக்கும். இப்பொது நூல்நிலையமேயன்றி, ஒவ் வொரு பொருட்டுறையிலும் தனித்தனி நூல் நிலையங்கள் அந்தந்தத் தலைவர்களுடைய மேற் பார்வையில் அமைக்கப்பெற்றுள்ளன. ஆகவே, அறிவு வளர்ச்சியில் ஆர்வமுள்ள ஆசிரியரும் மாணவரும் நூல்களை நன்கு பயன்படுத்திக் கொள்ளு தற்கு வசதிகள் பெற்றிருக்கின்றனர்.

இந்நூல்நிலையத்தின் வடதிசையில் விரிவான உடற்பயிற்சி வெளி உள்ளது. காலைமாலை நேரங்களில் மாணவர்கள் ஆங்குச் சென்று தமக்கு விருப்பமான பலதிறப்பட்ட விளையாட்டு விளையாடுவார்கள். உடற் பயிற்சி முறைகளை மாணவர்களுக்கு ஒழுங்காகப் பயிற்றும் ஆசிரியர் பலர் இருக்கின்றனர். மாணவர் கள் உடலுரம் பெறுதற்குச் சிறந்த பயிற்சிக்களமாக அது விளங்குகிறது. வெளியிடத்து மாணவர்கள் வந்து போட்டிகளிற் கலந்து விளையாடுதலும், வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்குதலும் அங்கு நடைபெறும். மேலும், அவ்விடத்தில் மாணவர் களுக்குத் தேசியப் போர்ப்படைப் பயிற்சியும் கற்பிக் கப்படுகிறது. அதன் ஒரு பக்கத்தில், ஏறத்தாழ ஒன்றரைக்கல் சுற்றளவில் செயற்கையாறு ஒன்று வெட்டப்பட்டுள்ளது. அதில் பெரும்பாலும் ஆறடி நீர் நிரம்பியிருக்கும். மாணவர்கள் அதில் நீந்தவும் படகு ஓட்டவும் பயிற்சியளிக்கப்பெறுகின்றனர்.

ஆங்கிலக் கலைமாளிகையின் வடபால் அமைந் திருப்பது விஞ்ஞான மாளிகையாகும். அதில், பௌதிகம், இரசாயனம், தாவர நூல், விலங்கு நூல் முதலான பல விஞ்ஞானக் கலைகள் கற்பிக்கப்படு

கின்றன. அவைபற்றிய ஆய்வுக் கூடங்களும் அங்கே யிருக்கின்றன.

விஞ்ஞான மாளிகையின் நேர் தெற்கில், நாட்டு மொழிக் கலைமாளிகை நன்கு தோற்றமளிக்கும். அதில், தமிழ், வடமொழி, தெலுங்கு, மலையாளம், உருது, இந்தி, பிரெஞ்சு ஆகிய மொழிகள் கற்பிக்கப் படுதற்கு வேண்டிய இடவசதிகள் உள்ளன. அங்கே, தமிழ்ச் சிறப்பு வகுப்பு (பி.ஏ. ஆனர்சு) மாணவரும், புலவர் வகுப்பு மாணவரும், வடமொழி வகுப்பு மாணவரும் தத்தம் கல்வித் துறைகளை விரும்பிக் கற்கும்நிலை, "முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய்", "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய் அண்ணாமலையுறை எம் அண்ணல் கண்டாய்" என்ற திருநாவுக்கரசர் திருவாக்குக்களிற் காணப்படும் ஒற்றுமையை உணர்த்துவதாகும். தமிழ்ப் பெரியார் பலருடைய உருவப் படங்கள் அப்பகுதியை அணி செய்து கொண்டிருக்கின்றன.

விஞ்ஞான மாளிகையின் கீழ்பால் இசைக் கல்லூரி இருக்கிறது. அதில், வாய்ப்பாட்டு, வீணை, பிடில், மிருதங்கம், தேவாரம் ஆகிய இசை வகுப்புக் களுக்கு உரிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. தமிழிசை வளர்ச்சிக்கு இக்கல்லூரி பெருந்தொண்டு புரிந்துவருகிறது. இசை மாணவர்கள் தங்குதற்குத் தனி விடுதியும் இக்கல்லூரியின் வடபால் உள்ளது.

இசைக் கல்லூரியின் கீழ்பால் விருந்தினர் விடுதி சிறந்த முறையில் திகழ்கின்றது. வெளி யூரிலிருந்து வரும் பல்கலைக் கழகச் சட்ட மன்றத்தினர், ஆட்சிக்குழுவினர், தேர்வாளர்கள், அரசியல் தலைவர்கள், அறிஞர்கள், செல்வர்கள் ஆகியோர் சில நாள் தங்குதற்கு இவ்விடுதி பயன்

படுகிறது. பல்கலைக் கழக ஆசிரியர் முதலானவர்கள், பல விளையாட்டுக்கள் விளையாடுதற்கும், செய்தித் தாள்கள் படித்தற்கும், விருந்துகள் கூட்டங்கள் நடத்துதற்கும் வேண்டிய இடங்களும் அவ்விருந் தினர் விடுதியின்கண் உண்டு.

விருந்தினர் விடுதியின் தென்கீழ்த் திசையில், பேராசிரியர் மாளிகைகள் ஒரே வரிசையாக இரண்டு நிலைமாடங்களுடன் எழில்பெற அமைந் திருத்தலைக் காணலாம். பேராசிரியர்களைக் காண விரும்புவோர் அவ்வரிசையில் அவர்கள் எல்லோ ரையுங்கண்டு பேசுதல் எளிதாகும். பேராசிரியர் மாளிகைத் தெருவின் வடகோடியில் அண்ணுமலை நகர் அஞ்சல் நிலையம் அமைந்துள்ளது. அதில், கடிதப் போக்குவரவுகளேயன்றிக் கம்பிவழிச் செய்தி நிகழ்த்துதற்கும் வசதிகள் இருக்கின்றன. இத் தெருவின் தென் கோடியில் மாணவியர் விடுதி இருக் கின்றது. அதில் ஒருநூறு மாணவியர் உண்ணு தற்கும் தங்குதற்கும் வேண்டிய எல்லா வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இவ்விடுதிக்குத் தனி மேற் பார்வையாளராகப் பட்டம் பெற்ற பெண்மணியார் ஒருவர் இருக்கின்றனர்.

மாணவியர் விடுதியின் தென்பால், மாதர் மன்றம் ஒன்று உள்ளது. ஆசிரியர் வீட்டுப் பெண்டிரும் பிற மகளிரும், உடற்பயிற்சி விளை யாட்டுக்கள் விளையாடவும், செய்தித் தாள்கள் படிக்கவும், மகளிர் நலங்குறித்துக் கலந்து பேசவும் அம்மன்றம் பயன்படுகிறது. அது, செட்டிநாட்டு அரசர் தாமே பல்லாயிரக் கணக்கான பொருட் செலவிற் கட்டி முடித்து அண்ணுமலை நகர் மகளிர்க் கென உதவியதொன்று.

அஞ்சல் நிலையத்தின் வடகீழ்த் திசையில் பாசுபதநாதர் கோயிலும் திருக்குளமும் உள்ளன. அவ்விரண்டும் அண்ணாமலையரசரால் புதுப்பித்துச் செப்பஞ் செய்யப்பட்டிருக்கின்றன. திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர் என்னும் நாயன்மார் இருவராற் பாடப்பெற்ற திருவேட்களமென்னும் தலமே அது. இது முன்னருங் கூறப்பட்டிருக்கிறது. அக்கோயில் அளவிற் சிறியதாயினும் அன்பர்கள் உள்ளம் உவகையுறும்படி மிக்க தூய்மையுடன் பேணப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. சைவப் பற்றுடைய ஆசிரியர்களும் மாணவ மாணவியரும் அங்கே சென்று வழிபாடு செய்வர்.

அக்கோயிலுக்கு வடபால், சிதம்பரம் இராமசாமி செட்டியார் உயர்நிலைப் பள்ளியின் பிரிவான ஓர் உயர்நிலைப்பள்ளி இருக்கிறது. பல்கலைக் கழக ஆசிரியருடைய பிள்ளைகளும் அயலூர்ப் பிள்ளைகளும் அதில் பயில்கின்றனர். அதன் கீழ்பால், மீனாட்சி தொடக்கப்பள்ளி உள்ளது. இதுவும், செட்டிநாட்டரசர் தம் அன்னையார் பெயரால் நிறுவிய தொன்றுகும். ஆகவே, சிறுவர் சிறுமியர்கள் எழுத்துப் பயிலத் தொடங்கியது முதல் எம். ஏ. வரை படித்துப் பட்டம் பெறுதற்கு வேண்டும் வாய்புக்க ளெல்லாம் அண்ணாமலை நகரத்திலேயே அமைந் திருக்கின்றன என்பது அறிந்து மகிழத்தக்கது.

இனி, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அண்ணாமலை நகரம் ஆகிய இரண்டின் எஞ்சிய பகுதிகளையுங் காண்போம். பட்டமளிப்பு மன்றத்தின் எதிரே தென்பால் உள்ள இடம் பன்னிறப் பூத் தொழிலமைந்த பச்சைக் கம்பளம் பரப்பி விரித்தாற் போன்று, புற்றரைகளாலும் பூஞ்செடிகளாலும்



அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
(மாணவர் விடுதி)

பொலிவுற்றிருக்கும். அதற்குத் தென்பால், அணி யணியாய் நெடுநிலை மாடங்களாய் அமைந்திருப்பவை மாணவர் விடுதிகளாகும். அவை, நல்ல காற் ருேட்டமும் வெளிச்சமும் உடையன. வாசகசாலை வாஞெலிப்பெட்டி முதலான வசதிகளெல்லாம் நிரம்பி யுள்ளன. சற்றேறக் குறைய ஆயிரவர் தங்கி யிருத்தற்கு அங்கு இடமுண்டு. அவ்விடுதிகள் நான்கு கூருகப் பிரிக்கப்பட்டு, திருவள்ளுவர் விடுதி, இளங்கோ விடுதி, கம்பர் விடுதி, பாரதியார் விடுதி என்னும் பெயர்களால் வழங்கப் பெறுகின்றன. அவ் விடுதிகளுக்குத் தென்பால் மாணவர் உணவுச் சாலைகள் பல இருக்கின்றன. அவற்றில், மரக்கறி யுணவு, அஃதல்லாத உணவு என இருவகை யுணவுகள் ஆக்கப்பெறும் இரு பிரிவுகளே உள்ளன.

மாணவர் விடுதிக்குக் கீழ்பால், கோகலே மண்டபம் என்னும் மாளிகையுள்ளது. அப்பல்கலைக் கழகத்தில் மாணவர் கழகங்களும், இலக்கிய மன்றங்களும், பேரவைகளும் பல இருக்கின்றன. அவற்றின் சார்பாக, மாணவ மாணவியர் சொற் பொழிவு செய்யவும், சொற்போர்கள் நிகழ்த்திப் பயிலவும் அம்மண்டபம் இடமளித்து வருகிறது. மாணவர் அழைப்பிற்கு இணங்கி வந்து அறிஞர் பலர் அங்குச் சொன்மழை பொழிதலும் உண்டு. சொல்லின் செல்வரும் தேசத் தொண்டருமாகிய கோபாலகிருஷ்ணகோகலே அவர்களின் பெயர் அம் மண்டபத்தோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.

கோகலே மண்டபத்தின் தென்கீழ்த் திசையில், அகன்ற நிலப்பரப்பில் அழகான மருத்துவசாலை அமைந்திருக்கிறது. ஆசிரியர்களுக்கும், மாணவர் களுக்கும், அடுத்தடுத்துள்ள சிற்றூர் மக்களுக்கும்

அஃது அரிய பணியாற்றிவருகிறது. நோயாளிகள் நோய் நீங்கும்வரை தங்கியிருந்து மருத்துவஞ் செய்துகொள்ளுதற்குப் போதிய அறைகளும் அங்கே யுள்ளன.

பல்கலைக் கழக ஆசிரியர்கள் எல்லோர்க்கும் அவரவர் தகுதிக்கேற்பத் தனித்தனியே வீடுகள் கட்டப்பெற்றுள்ளன. அவ்வீடுகள், துணைவேந்தர் மாளிகைக்கு மேற்குப் பக்கத்திலும் எதிர் வரிசையிலும், பேராசிரியர் மாளிகைகளுக்குக் கீழ்பாலும், மாணவர் உணவுச் சாலைகளுக்குத் தென்பாலும் அமைந்திருக்கின்றன. அவையேயன்றி, பல்கலைக் கழக அலுவலகத்தாருக்கும், ஏவலர்களுக்கும் அமைந்த வீடுகளும் பலவாகும். கூட்டுறவு வாணிக நிலையமும் ஊர்க் காவலர் நிலையமும் அண்ணுமலை நகருக்கெனத் தனியே உண்டு. அண்ணுமலை நகரின் இடைவெளியில் அழகிய தோட்டங்களும், செய்குன்றுகளும், இளமரக்காக்களும், முதுமரச் சோலைகளும், மின்சார விளக்குக்களும் அமைந்து, அங்கு வாழ்வோர்க்கும் வருவோர்க்கும் மகிழ்ச்சி யூட்டுகின்றன.

## 8. பல்கலைக் கழகத்தின் வளர்ச்சியும் ஆட்சிமுறையும்

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் அமைப்புக்களையும், அதனையடுத்துள்ள அண்ணுமலை நகரத்தையும் கண்டோம். இனி, அப் பல்கலைக் கழகம் எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளது; அதன் ஆட்சிமுறை யாங்ஙனம் நடைபெறுகிறது என்பவற்றையும் பார்ப்போம். வள்ளல் அண்ணுமலையார் 1922-ஆம்

ஆண்டில் நூறு ஏக்கர் நிலத்தில் மீனாட்சி கல்லூரி அமைத்தார்; மேலும் 168 ஏக்கர் நிலம் வாங்கிக் கொடுத்தார். பின்பு, பல்கலைக் கழகத்தார் வாங்கிய நிலமுஞ் சேர்ந்து இப்போது 572 ஏக்கர் நிலம் உள்ளன. அந் நிலப்பரப்பிலே அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் அண்ணாமலை நகரமும் அமைந் திருக்கின்றன. அவற்றின் இப்போதைய மதிப்பு, வைப்புப் பொருளுடன் சேர்த்து ஒன்றரைக் கோடிக்கு மேற்பட்டதாகும்.

தமிழ், ஆங்கிலம், வடமொழி, கணிதம், வரலாறு, பொருளாதாரம், தத்துவம், பௌதிகம், இரசாயனம், தாவர நூல், விலங்கு நூல் ஆகிய பகுதிகளில், எம். ஏ. படிப்புவரை ஒருவர் கற்றற்கு வேண்டிய வசதிகள் அங்கே உள்ளன. சிறிதேறத் தாழ இரண்டாயிரம் மாணவர்கள் கல்வி பயில் கின்றனர். சென்னை அரசியலார் ஆண்டுதோறும் ஆறரை லட்சம் ரூபாய் உதவித் தொகையாக வழங்கு கின்றனர். தமிழிசை வளர்ச்சிக்காகவும் தமிழ் நூல் வெளியீட்டிற்காகவும் பல பரிசுகளுக்காகவும் திருப் பனந்தாள் காசிமடத்துத் தலைவர் அவர்கள் நன் கொடையாக வழங்கிய விளைநிலங்கள், ரூபாய் இவற்றின் மதிப்புச் சுமார் இரண்டரை லட்சம் ரூபாயாகும்.

அண்ணாமலையரசர் ஒருவரே சுமார் ஐம்பது லட்சம் ரூபாய் வழங்கியதனால் அப்பல்கலைக் கழகம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என அவர் பெயரால் நிலைபெற்று விளங்குகின்றது. மக்கள் நெருக்கத்தால் பல இடர்ப்பாடுகள் தோன்றும் பெரிய நகரத்தில் அஃது அமையவில்லை; நாற்புறமும் நன்செய் நிலங் களாற் சூழப்பட்டு எழில்மிக்க தோற்றத்துடன்

இலங்குகின்றது. பெற்றோர்கள் அனுப்பும் பொருளை மாணவர்கள் மனம்போனவாறு செலவு செய்தற்கு அங்கே இடமில்லை. உடல் நலத்திற்கு ஊறு நேராத வகையில் உண்டியும் உறையுளும் அமைத்துத் தரப் படுகின்றன. ஆசிரியர்களும் மாணவர்களும் உட னுறைந்து பழகும்படி வீடுகளும் விடுதிகளும் அங்கே ஆக்கப்பெற்றுள்ளன. அதனால் பாடங்கள் நடை பெறுங் காலங்களில் மாத்திரமன்றி, வேண்டும் போதெல்லாம் ஆசிரியர்களை அணுகித் தமக்கு உண்டான ஐயங்களைப் போக்கி மாணவர்கள் அறிவை வளர்த்துக்கொள்ளுதற்கு வாய்ப்பு இருக் கிறது. மேலும், மாணவர் விடுதிகளுக்கு அண்மை யில், காலை ஏழுமணி முதல் இரவு ஒன்பது மணி வரை சிறந்ததொரு நூல்நிலையம் திறந்தேயிருக் கிறது. இவையெல்லாம் பிற கல்விக் கழகங்களிற் காணப்படாத தனிச் சிறப்புக்களாகும்.

கி. பி. 7-ம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் சிவநெறி பரப்பித் திகழ்ந்த திருஞானசம்பந்தர், திருவேட்களத்திற் கோயில் கொண்டிருக்கும் சிவ பிரான்மீது பாடிய பதிகத்தில் “ திருவேட்கள நன்னகரார் ” என்று அவ்விறைவனைக் குறிப்பிட் டிருக்கின்றார். அவர் காலத்தில் திருவேட்களம் ஒரு நகரமாயிருந்ததென்பதற்குச் சான்றுகளில்லை; ஆயி னும், ஆயிரத்திருநூறு ஆண்டுகள் கழிந்த பின்னர் அவ்விடத்தில் அண்ணாமலை நகரம் அமைந்திருப்பது, நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த மறை மொழிகள், எத்துணையாண்டுகள் செல்லினும் தம் பயனைத் தாராதொழியா என்னும் உண்மைத் தன்மையை உணர்த்துவதாயுள்ளது.

தில்லைச் சிற்றம்பலத்தில் சிவபெருமான் திருக்

கூத்தாடுகின்றானென்பது யாவரும் அறிந்தது. அக் கூத்தாட்டத்திற்குக் காரணம், அண்ணாமலையரசர் அமைத்த பல்கலைக் கழகத்தைக் கண்ட மகிழ்ச்சியே யாகும் என்று, கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை யவர்கள் நயந்தோன்றப் பாடியிருப்பது ஈண்டுப் படித்து இன்புறத் தக்கதாகும்.

"தில்லைப் பதியுடையான் சிற்றம் பலந்தன்னில்
அல்லும் பகலுநின் றாடுகின்றான்—எல்லைக்கண்
அண்ணா மலைமன் அமைத்த கலைக்கழகம்
கண்ணாரக் கண்டு களித்து"

என்பதே அப்பாடல்.

இனி, விஞ்ஞானக் கலைமாளிகையின்கண் உள்ள ஆய்வுக் கூடங்களில் தாவரப் பொருட்காட்சிச்சாலை, விலங்குப் பொருட்காட்சிச்சாலை ஆகிய இரண்டின் இயல்பினையும் வளர்ச்சியையும் ஈண்டே ஒரு சிறிது காண்போம்.

தாவரப் பொருட்காட்சிச் சாலையைத் தாவர நூற் பகுதியின் மிக இன்றியமையாததொரு கூறு எனலாம். அதன்கண், சென்ற இருபது ஆண்டுகளாகப் பெரிதும் முயன்று பெற்ற மிக அருமையான தாவரப் பொருள்கள் உள்ளன. பல வேறு இடங்களினின்றும் பல வேறு நாட்களிற் கிடைப்பனவாகிய பல திறப் பட்ட தாவரக் குடும்பங்களைச் சார்ந்த வெவ்வேறு வகையான மரம் செடி கொடிப்பொருள்களும், வேறு வேறு வகைப்படும் குறிமறையினத் தாவரங்களும் (Cryptogams) அவற்றின் நுண் பொருள்களும் கொண்டது அச்சாலை.

பொதுமக்கள் கண்ணிற்குப் பாசியெனத் தோன் றும் இத்தொகுதியில் நான்கு வகையுண்டு. இவை தோற்றத்தின் அளவில் பெரும்பாலும் பச்சையாகக்

காணப்படினும் உண்மையில் நிற வேறுபாட்டால் நான்கு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. பச்சையில் நீலமுற்ற பாசியும், பழுப்பு வண்ணப் பாசியும், செந்நிறஞ் சிவணிய பாசியும், பச்சைநிறப் பாசியுமாக அமைந்த இவை யனைத்தும் ஒழுங்குற வகுக்கப் பெற்று விளங்குகின்றன. இப்பாசிகளில், கானந்தன்னுட் கழிநீரினிற் கிடைப்பன ஒருசில; ஆழ்ந்தகன்ற கடல் நீரினிற் கிடைப்பன இன்னுமொரு சில; ஓங்கியுயர்ந்த மலையருவி நீரினிற் கிடைப்பன மற்றுமொருசில; தேங்கி நிற்கும் சாக்கடை நீரினிற் கிடைப்பன பிறிதுமொருசில. இவற்றுள், கடற் பாசியில் ஐயோடின் (Iodine) என்ற வேதிப் பொருள் இயற்கையில் அமைந்திருத்தல் நினைவு கூரற்பாலது. பொதுவாக, பாசிகளில் மிக நுண்ணியனவும், ஓரணு உயிரினவும், மிகப் பெரியனவும் உண்டு. இவை யனைத்தையும் அங்கே காணலாம்.

அடுத்தபடியாக உள்ளவை காளான் வகைத் தாவரம். இவை அச்சாலையில் மிகவும் அதிகம். தாவரங்களில் இயல்பாக அமைந்துள்ள பச்சையம் எனப் படும் பச்சைப் பொருள் (Chlorophyll), காளான் வகைத் தாவரங்களில் இல்லாமையால் இவை பாசி வகைத் தாவரங்கள்போன்று தனித்து உயிர்வாழ்வன வல்ல. ஆதலின், வேறு உயிர்ப் பொருள்களைப் பற்றிநின்று அவற்றிலிருந்து தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களை உறிஞ்சி அவற்றின் உள்ளும் புறமும் வாழ்வனவாகவும், ஆவி சோர்ந்து அழுகிய பொருள்கள்மாட்டு வளர்வனவாகவும் இவை இரு பகுதியாய் அமைந்துள்ளன. இவற்றுள், முன்னர்க் குறித்த காளான் வகையால், உணவுப்பொருள் நல்கும் பயிர்கள், அடுத்தடுத்துப் பற்பல நாடுகளிலும்

பற்பல காலங்களில் அழிக்கப்படுகின்றன. அச்சாலையில் கம்பு, சோளம், கோதுமை, பார்லி முதலியவற்றை அடுத்தழிக்கும் காளான் வகைகள் சேமித்து வைக்கப்பட்டுள. ஒரு சிலர் உண்ணும் சிறிய நாய்க்குடையும், நச்சுப் பொருள் மலிந்துள்ள பல நிறமுடைய மிக அழகிய நாய்க்குடைகளும் அவண் உள்ளன.

மற்று, பாசியுங் காளானும் ஒருங்கு அமையப் பெற்ற பாசிக்காளான் எனப்படும் (Lichens) தாவரங்களின் மூவகையும் அங்கு அழகுற நிரம்பப் பெற்றிருக்கின்றன.

இதுகாறுஞ் சொல்லிய தாவரங்கள் பெரிதும் நீரில் வாழ்வன. இனி உள்ளவை நிலத்தில் வாழ்வன. இவற்றிற்கிடையில் நீரிலும் நிலத்திலும் வாழுந் தாவரங்கள் ஈரற் செடிகள் (Liver worts), பாசங்கள் (Mosses) முதலியன. ஈரல் நோய்களைத் தீர்க்கும் தன்மையவாதலால் இவை இப்பெயர் பெற்றன என்பர். நீரிலும் நிலத்திலும் வாழ்தலின் இவை விலங்கு நூலுள் வரும் தவளை, தேரை போன்றவை. உள்ளது சிறத்தல் என்னும் (பரிணமம்) (Evolution) இயற்கை யுண்மை நெறியிற் சற்று உயர்ந்தவை யாகலின் இவற்றைத் தாவரப் பேராசிரியர் மிகச் சிறப்பின என விதந்து ஓதுவர்.

தம்முடைய அமைப்பிலும் வாழ்விலும் மேலும் உயர்ந்து விளங்குந் தாவரங்கள் பெரணைகள் (Ferns) எனப்படும். இவற்றின் இலைகள் பலப்பல வடிவங்களாற் சிறப்புற்றவை. இலையுருவச் சிறப்பினுல் இத் தாவரங்கள் அழகுசெய்தற்குப் பயன்படுகின்றன. இவற்றின் பல வகைகள் அச்சாலையில் இடம் பெற்றுள்ளன.

ஒத்த நிலப்பரப்பில் வளருந் தாவரங்கள் இயல்பாகப் பூத்துக் காய்க்கும் தன்மையுடையன. இவை போலவே மிக உயர்ந்த மலைச் சரிவில் ஓங்கி வளர்ந்து பூத்துக் காய்க்குந் தேவதாரு முதலியன விதை மூடாத் தாவரங்களைச் சார்ந்தவை. (Naked seeded plants) இவற்றின் விதைகள் மூடப்பெறாது அமைந்திருத்தலின் இவை அதற்கேற்ற பெயர்பெற்றன. ஜிங்கோ (Ginkgo biloba) என்ற சிறு மரம் ஒன்றும் இவ்வினத்தைச் சார்ந்தது. இது திமிங்கிலம் போன்று உலகில் அருகிவருதலால் மிக அருமையாகக் காணப்படுகின்றது. கோடைக்கானல் நகரப் பூங்காவில் இச்சிறு மரமொன்று மிக விழிப்புடன் கண்காணிக்கப் பட்டு வருகின்றது. இதனுடைய கிளை ஒன்றும் அச்சாலையின்கண் வைக்கப்பட்டுள்ளதெனின், அது மிகவும் போற்றற் குரியதன்றோ ?

மற்று, தமது இயற்கை யமைப்பினால் தாவர வாழ்வில் மிகச் செம்மையெய்தி, பூத்துக் காய்க்கும் மரஞ் செடிகளும், அவற்றின் பயனாகிய பூ, காய், பழங்களும் அச்சாலையின் பெரும்பகுதியை அணி செய்கின்றன. புல்லுருவி என்பது பெரும்பாலும் பூவரசு, இருப்பை, மா முதலிய மரங்களின்மேல் வாழும். இது தனக்கு வேண்டிய நீரையும் உப்புப் பொருள்களையும் தான் உறையும் மரத்தினின்றும் கொள்ளைகொண்டு வளரும். இதுபோன்ற பல வகைச் செடிகளும், இடந்தருதலே அமையுமென்று ஒன்றன்மேல் உறைதல்மட்டும் செய்து தமக்கு வேண்டிய நீர் முதலியவற்றை வேறுவகையால் ஈட்டி உயிர் வாழும் தொத்துத் தாவரங்களும் அங்கு மலிய உள்ளன.

இனி, பாலைநிலப் பகுதியில் விரிகதிர் தெறுத

லால், கிட்டுதற்கரிய சிறிய நீரினைத் தமது இலை களின் வாயிலாக இழக்க நேருமாகலின் இலையுறுப் பின்றி, இலையின் வேலையைத் தண்டுகளே செய்ய உயிர்வாழும் சவுக்குப் போன்ற தாவரங்களும் ஆண்டு இருக்கின்றன. தாவரங்கள் இடத்திற் கேற்பத் தம் வாழ்க்கையினை அமைத்துக்கொள்ளுந் தன்மையை இவை விளக்குவனவாகும். தாய்மை என்னும் பெருந் தன்மையும் தாவரங்களிற் காணப்படுகின்றது. கடலைச் சார்ந்த உவர்நீர்க் கழியில் (Saline marsh) வளரும் சுரபுன்னை யென்று வழங்கப்படும் சிறு மரத் தில் (Rhizophora) பழம் முதிர்ந்த பின்னரும் கீழே விழுவதில்லை. கீழே சதுப்பு நிலமாகலானும், அதன டியில் பெரிதும் உவர்நீர் நிரம்பி நிற்குமாகலானும் பழம் விழுந்தால் முளைத்தற்கியலாதுபோகும். ஆகவே, இப்பழம் விழுமுன்னர் அதனிடத்து முளை தோன்றி நன்கு நீண்டு வளரும். ஓரடியளவிற்கு அது முதிர்ந்து வளர்ந்த பின்னர் நீண்ட முளையுடன் அப்பழம் கீழே விழும். விழும்பொழுது முளையின் கன மிகுதியால் பழம் மேலும், முளைப்பகுதி கீழுமாக விழுதலின், முளைப்பகுதி சேற்றில் நன்கு ஊன்றப் பெற்று வேர்விட்டு வளர இயல்கின்றது. அப்பொழுது பழப்பகுதி பெரும்பாலும் நீர்நிலைக்கு மேல் நிற்கும்; நீரில் முழுகப் பெறினும் வேர் நிலைபெறுதலால் செடி நன்கு வளர முடிகின்றது. இது போன்ற ஏனைய உப்பங்கழித் தாவரங்கள் (Mongrove vegetation) வேறு வேறு வகையிற் சிறப்புடையன.

மேலும், பிறப்பிலேயே தம் இயல்பு திரிந்த சில தாவரங்களும் (Freaks) தாவரப் பொருள்களும் அவண் நோக்குதற்கு உரிய. சற்றேறக் குறைய ஓரடி உயரமுள்ள ஒரு வாழை தாறு ஈன்ற நிலையில்

வைக்கப்பட்டுள்ளது. மிளகாயினுள் மிளகாயும், இரட்டை மாங்காயும் குறிப்பிடற்பாலன. கனி வகையில் கொடியுடன் மிளகு, வேருடன் ஏலம், பலநிறக் குன்றி, இவைபோன்ற பிறவும் வகுத்து வைக்கப் பட்டுள்ளன.

இவையேயன்றி, மிகப் பழங்காலத்தில், அஃதாவது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஒவ்வோரிடத்து நிகழ்ந்த நிலச் சரிவினுல், அதன்மேல் வாழ்ந்த தாவரங்கள் மண்ணிற் புதைபட்டு, மலைகளாலும் ஏனைய மண்ணடுக்குக்களாலும் நன்கு அழுத்தப் பெற்றுப் பின்னர், சுரங்கங்களினின்றும் தோண்டி யெடுக்கப்படும் நிலக்கரி போலவே ஒரு சில மரக்கற்களாய்க் (Fossils) காணப்படுகின்றன. இவை நில மாறுதல்களால் நிலத்தின் மேற்பரப்பிற்கு வருதலும் உண்டு. இம்மரக்கற்கள் வரையறுத்தற் கெட்டாத பண்டைக் காலத்தில் இவ்வுலகத்திருந்த மரம் செடிகளின் தண்டு, இலை, பூ முதலியவற்றின் பதிவுகளைப் பெற்றும், அவை முழுதும் கல்லாக மாறியும் காணப்படுகின்றன. இத்தகைய மரக்கற்கள் பல அங்கே கொண்டுவரப்பட்டுள்ளன. இவை பண்டைத் தாவரங்களின் வரலாற்றினை அறிதற்கு உதவுகின்றன.

இன்னும் அச்சாலையுள், செடிகளை இலை பூவுடன் நன்கு படிய வைத்து, மருந்திட்டு அட்டையில் ஒட்டி, அவ்வச் செடியின் தாவர நூற் பெயரும், அவைதம் அமைப்பாற் சாரும் தாவரக் குடும்பத்தின் பெயரும், அவை கிடைக்கப் பெறும் இடத்தின் பெயரும், அவற்றைச் சேமித்து வைத்தார் பெயரும் எழுதி மிக ஒழுங்காக அரண் செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றிற் சிறப்பாக, குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை முதலிய தாவரங்களும், பிண்டி, பிடவம், காந்தள், மாதவி,

ஞாழல், வேங்கை, அனிச்சம், சண்பகம் முதலிய சங்க நூல்களிற் குறிக்கப்பட்டுள்ள தாவரங்களும் கண்டுகளித்தற்கு உரியனவாகும்.

அப் பல்கலைக் கழகத்திலுள்ள விலங்கினப் பொருட்காட்சிச்சாலை நல்ல வளர்ச்சி அடைந்திருக் கின்றது. அதனுள் விலங்கு நூலின் பலதிறப்பட்ட நுண்ணிய பொருள்களும், கிடைத்தற்கரிய மிகச் சிறந்த விலங்குகளும் மருந்திட்டுச் சேமிக்கப் பட்டுள்ளன. இவற்றைத் திரட்டுதலின்கண் பல் கலைக் கழகத்தார் எடுத்துக்கொண்ட முயற்சி பெரிதும் பாராட்டத்தக்கது.

இற்றை நாளைய விலங்குகளுக்கு முதற் காரணமாய் அளவு குறிக்க முடியாத பண்டைக் காலந் தொட்டு இவ்வுலகில் வாழ்ந்துவரும் விலங்கு களை ஓரணு உயிரினம் எனலாம். இவை நுண் ணோக்கி கொண்டு காணின் அல்லால் பெரும்பாலும் கட்புலனாவதில்லை. அமீபா (Amoeba) எனப்படும் இச் சிற்றுயிர் ஓர் உயிரணுவால் ஆக்கப் பெற்ற தாயினும் உணுக் கொள்ளல், கழிபொருள் நீக்குதல், இனம் பெருக்குதல், ஒளிகண்டு மயங்குதல், ஊர்ந் தியங்குதல் ஆகிய செயலாற்றி வாழுந் தன்மை யுடையது. தம் உடம்பிற் கிளைத்த மிக நுண்ணிய மயிர்ப் பொருள்களின் அசைவால் இயங்கும் உயிர் கள் இவ்வினத்திற் பலவுள. அன்றியும், மலேரியா, உறக்கந் தந்து உயிர் வாங்கும் ஒருவகை நோய் (Sleeping Sickness) முதலிய கொடிய கொள்ளை நோய்கட் கெல்லாம் வைப்பிடமாகி, மக்கள் உடலுள் ளும் ஏனைய விலங்கினங்களுள்ளுந் தங்கி உண் பொருள் உறிஞ்சி உறையும் உயிரணுக்களும் அவண் காணத்தக்கன.

கடலிடத்து அளத்தற்கரிய மிக்க ஆழத்தில் உறையும் யூபிளெக்டெல்லா (Euplectella) என்பது கடற் பஞ்சு இனத்தின்பாற்படும். இதனைக் காதற் றெய்வத்தின் பூக்கூடை (Venus Flower Basket) என வழங்குப. இது போன்ற விலங்கினம் அச்சாலை யிற் சிலவுள. அலை கடலில் ஆயிரக்கணக்காக ஒன்றுசேர்ந்து, கடல் நீரைத் தம் உடம்பால் வடித் தெடுத்து, ஒருவகை உப்புப் பொருளாக்கி, அது கொண்டு பல்லாயிரங் காத மட்டும் மலைபோன்ற அணைகட்டும் விலங்கினம், பவளவினம் (Coral) எனப்படும். இவ்வினத்துட் செந்நிற முடைய தொன்று ஈண்டுக் காணப்படும். இதனைத்தான் பவளக்கொடி என்பர். அன்றி, கடலோரங்களில் மிதந்துவரும் சொரி எனப்படும் விலங்குகளும் அவ் வினத்திற் பலவகைகளும் வைக்கப்பட்டிருப்பதை அவண் காணலாம். இவை உயிருடன் காணப்படுங் கால் மிக்க அழகுடையனவாய்த் தோன்றும். இவற் றுட் சில தம்பால் அமைந்த கொடிய நஞ்சுமிழ் உறுப்பால் இரைதேர்தலும், பிடிப்பவர்க்கு அஞ்சிப் பரந்த விரல் போன்ற தம் உறுப்புக்களைச் சுருக்கிக் கொள்ளுதலும் உண்டு.

புழுவினத்திற் குறிப்பிடற்பாலது ஈரற் புழு (Liver Fluke). இது முதிர்ந்த நிலையில் ஆடு, பன்றி முதலிய விலங்குகளின் ஈரற் கண்ணும், ஒரோ வழி மக்கள் ஈரலிலும் காணப்படுகின்றது. இத்தன்மை வாய்ந்த புழுக்கள் ஒரு விலங்கின் ஈர லிடத்துக் குறைந்தது இருநூறு வரை காணப்படு மென்றும், அவற்றுள் ஒன்று ஒரு காலத்தில்தானே ஐந்து நூறாயிரம் முட்டை யிடுமென்றுங் கூறுப. இப் புழு முதிரும் வரலாறு விரிந்த நூல்களிற்

படித்தறியத் தக்கது. இதுபோன்ற பலவகைப் புழுக் களும் இங்கு மலிய உள்ளன. இன்னும் பிளனேரியா (Planaria) எனப்படும் ஒரு புழுவிற்குத் தலைப் பக்கம் அறுபடினும் மீண்டும் வளர்ந்துகொள்ளும் பெருந்திறல் இயல்பாக அமைந்துள்ளது. இதனை யும் ஆண்டுக் காணலாம்.

நத்தை கிளிஞ்சில்களின் உட்புறத்தில் வாழும் அர்னடெல்லா (Urnatella) எனப்படும் விலங்கு உலகில் இரண்டு இடங்களிற்றான் காணப்படுகின் றது. அவ்விடங்களில் ஒன்று பிலடெல்பியா; (Philadelphia) மற்றொன்று அண்ணுமலைநகர். இங்குக் காணப்படும் அவ்விலங்கிற்கு முதல் முதலாகச் சிறப்புப் பெயர் கண்டவர் இவ் விலங்கு நூற் பகுதிப் பேராசிரியர் சேஷையா ஆவர். அவ் விலங்கு இந்தியாவிற் காணப்படுவதாக உலகறிய வேண்டு மெனக் கருதி அதற்கு அர்னடெல்லா இண்டிகா சேஷையா (Urnatella Indica Seshayya) எனப் பெயர் தந்திருப்பது குறிப்பிடற் பாற்று.

நத்தையினத்தில் அரியனவெல்லாம் அங்கே காணப்படும். அலைகளால் எடுத்தெறியப்பட்டுக் கிடைக்கும் முத்துச் சிப்பியின் ஓடுகளும், இடம்புரி வலம்புரி முதலிய சங்கின் ஓடுகளும் அச்சாலையில் நிரம்பக் குவிக்கப்பட்டுள்ளன. மேலும், சிறு மகாரைத் தொட்டிலிற் கிடத்துவதுபோற் கிடத்து தற்கும் நீராட்டுதற்கும் இயலும் என்னும்படி அளவிற் பெரியதாய் விளங்கும் டிரைடாக்மா (Tridacma) என்ற கிளிஞ்சில் ஓடுகளும் அங்கே காணப்படுவது குறிப்பிடத் தக்கதாகும். முதிர்ந்த முத்துச் சிப்பி ஒன்று ஒரு காலத்தில் ஆறு கோடி

முட்டையிடும் என்ப. இச் சிப்பியின் உடலுள் எங்ஙனமாவது ஒரு சிறு மணல் புகுமாயின் அஃது அச் சிப்பியின் உடலை உறுத்தத் தொடங்கும். அதுபோலவே ஒருவகை உப்புக்கல் உள்ளிடத்துத் தானே உண்டாகுமாயின் அதுவும் அதன் உடலை உறுத்தத் தொடங்கும். அதனால் ஒருவித உப்புநீர்ப் பொருள் அச் சிப்பியின் உடலில் ஊறி, அம் மணலையோ அவ்வுப்புக் கல்லையோ சூழ்ந்து இறுகும். அங்ஙனம் இறுகியதொன்றுதான் முத்து எனப்படும். இதுபோலவே கிளிஞ்சில்களிலும் ஒருவகை முத்து உண்டாவதுண்டு. இக்கிளிஞ்சிலில் வளர்ந்த முத்து ஒன்றும் அங்கு வைக்கப்பட்டுள்ளது. இத்தாலிய தேசத்திலிருந்த செயிண்ட் மசீனு (St. Masena) என்ற மரப்பாலத்தை, ஆயிரக் கணக்காகக் கூடி ஆறு திங்களில் துளைத்து அழிவு செய்த டெரிடோ (Teredo) என்ற சங்கினத்தைச் சார்ந்த விலங்கு ஒன்றும் அங்கு நோக்குதற்கு உரியது. மிகப் பழைய காலந்தொட்டுக் கடலில் வாழும் நாட்டிலஸ் (Nautilus) என்ற விலங்கின் அழகிய செம்பழுப்பு நிறம் அமைந்த ஓடும் சேர்த்து வைக்கப்பட்டுள்ளது. இவ்விலங்கு உயிருடன் அகப்படுவது அரிது. இதன் ஓட்டில் அடுக்கடுக்காய் அமைந்த பல அறைகள் உள்ளன. ஓரறையில் இவ்வுயிர் தான் வாழுநாளில் அவ்வறையினும் சிறிது அகன்ற புதிய அறை வகுத்துக்கொண்டு அதனுட் புகும். அங்கிருந்து கொண்டு அதனினும் அகன்ற அறையமைத்து அதிற் புகும். இவ்வாறு அஃது உறைந்திருந்த அறைகள் ஒருவகைக் காற்றினுற் பின்னர் மூடப் படும். அக்காற்றின் துணையால் இவ்விலங்கு நீரில் மிதத்தல் கூடும். யானையின் துதிக்கைபோன்ற

பெரிய எட்டுக் கைகளைக்கொண்டு முத்தெடுப்பவர் களை வளைத்துப் பிடித்துக் கொன்று விழுங்கும் ஆக்டோபஸ் (Octopus) என்ற ஆட்கொல்லியின் மிக இளைய உடலொன்றும், இரவில் ஒளிபரப்பும் இயல்பமைந்த செபியா (Sepia) என்ற விலங்கின் உடலொன்றும் அங்கே காணப்பெறும்.

பல வண்ணத்து நண்டினங்களிற் பால்வேற் றுமை காணப்படாது முதிர்ந்து வளர்ந்த சாக்குலைனு (Sacculina) என்ற நண்டொன்று உண்டு. இதன் வளர்ச்சிமுறை வியக்கத் தக்கது. லிமுலஸ் (Limulus) எனப்படும் அரசநண்டு (King Crab) உலகில் அருகி வருகின்றது. இதனுடன் மிக்க தொன்மைக் காலத்து வாழ்ந்த விலங்கினங்கள் பல இவ்வுலகில் முன்னரே அருகியொழிந்தன என்பது அவை கல் ஆயினமையால் அறியப்படுகின்றது.

தம் இன வளர்ச்சி குறித்து விசித்திரமான முறைகளை மேற்கொள்ளும் தேள் வகைகளும், சிலந்தியினங்களும், மிக விரைந்து ஓடுதற்கேற்ற பல கால்களையும் மிகக் கொடிய நஞ்சையும் உடைய சரமண்டலமும், அதன் வகை பலவும் அங்கே காணப் படும். அவை கண்டார்க்கு அச்சம் விளைப்பனவாம்.

மீனினத்தைச் சாராது உருவத்தால் வானத்து வெள்ளியை ஒத்த வெள்ளிமீன் (Star fish) என்பது கடலில் வாழும் இயல்பிற்று. இவ்வினத்தின் ஐந்து வகையும் இங்கே காணலாம். கடற் கக்கரி (Sea cucumber) எனப்படுவது ஒருவராற் பிடிக்கப்பட்ட போது தனது குடல் முழுவதையும் பிடித்தவர்மேல் உதறித் தள்ளிவிட்டு ஓடிப்போய், பின்னர்ப் புதிய குடலொன்று வளர்த்துக்கொண்டு வாழுந்தன்மை யுடையது. இதுவும் ஆண்டுக் காணப்படும்.

வண்டினப் பூச்சிகள் விலங்கு நூலாசிரியர்களால் நாணுளும் புதிது புதிதாகக் கண்டு கூறப்படுகின்றன. இவ்வினத்துள் ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட வகை உண்டென்பர். சீவகசிந்தாமணி உரையில் நச்சிஞர்க்கினியர் சுரும்பு, மிஞிறு, வண்டு, தேன் என்பன தும்பியின் இனங்களெனக்கூறி அவற்றின் இயல்புகளையும் விளக்கியுள்ளார். இவற்றுட் பல அச்சாலேயுள் நன்கு வகுத்தமைக்கப் பெற்றுள்ளன. நல்ல வெயில்வேளையில் பாலைநில மரங்களின் பட்டையிலிருந்து கறங்கும் சிள்வீடு (Xenopsylla) அங்கே சிறப்பாகக் காணுதற்குரியது.

இனி, முதுகெலும்புடைய விலங்குகளுள் முதலில் வைத்து ஓதப்படுவது ஆம்பியாக்சஸ் (Amphioxus) என்பதாம். இதுவும் பரங்கிப்பேட்டையருகிற் கடலோரத்திலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளது. இதன் முதுகெலும்பு வலிய என்பு போலன்றிப் புறக்காதின் எலும்பென்ன வளையும் இயல்பினதாய் ஆக்கப்பட்டுள்ளது. மக்கள் இனத்தார்க்கும் மிக்க இளமையில் உண்டாவது இது போன்ற எலும்பேயாம்.

அதனிலும் சிறிது உயர்ந்தவை மீனினம். அச்சாலையின்கண் பலவகைச் சிறப்பினவாய மீன்கள் வைக்கப்பெற்றுள்ளன. இவற்றுள், தாய்மைக்கு ஓர் எடுத்துக்காட்டு ஏரியஸ் (Arius) எனப்படும் மீனுகும். இதனுள் ஆண்மீன், பெண்மீன் ஈன்ற முட்டைகளைத் தன் வாயில் வைத்துக் காக்கும் நிலையில் இங்கே காணப்படுவதாகும். பனையேறிக் கெண்டை (Anabas) என்னும் மீனிடத்துச் சில செதில்கள் மரமேறுதற்கேற்ப அமைந்துள்ளமையின்

அஃது அப்பெயர் பெற்றது போலும். அதனையும் ஆண்டுக் காணலாம். பட்டினப்பாலையில், பரதவர் "சுறவின் கோடுநட்டு" வணங்கிய செய்தி கூறப் பட்டுள்ளது. அத்தகைய சுறுமீனின் முற்பாகத்து அமைந்த நீண்ட வாள்போன்ற கொம்புகளையும் அங்கே கண்டு மகிழலாம். கடலிற் பலப்பல காதங் கள் சென்று உலாவும் ஈல் (Eel) வகைகளில் நல்ல பளிங்கினால் ஆனதுபோன்ற ஒருவகையும் (Glass eel) அங்கு நோக்கத்தக்கது. மீனினத்திற்கெல் லாம் கண்ணிமை இல்லையாதலின் அவை கண் மூடி உறங்குவதில்லையென்ப. கடவுளை "மீன் கண்ணன்" என்று மொகஞ்சதாரோ நாகரிகம் குறிப்பிடுவதாக அருட்டிரு. ஹீரஸ் (Father-Heras) கூறுவர். இஃது "இமையா நாட்டத்திறைவன்" என்னும் தமிழ்வழக்கினை ஒத்திருத்தல் அறிந்து மகிழத்தக்கதாம்.

தவளையினம் நீரிலும் நிலத்திலும் வாழுமென நாம் அறிவோம். இவ்வினத்திலும் பலவுள. இவை இளமையில் மீனினத்திற்குரிய மூச்சுவிடும் உறுப்புக் களைப் பெற்றிருக்குமாயினும் முதிர்ந்த நிலையில் அவற்றையிழந்து நிலத்தில் வாழ்தற்கு இயைந்த மூச்சுவிடும் வேறு உறுப்புக்களைப் பெற்று நிலவும். ஆம்பிளிஸ்டோமா (Amblystoma) எனப்படும் விலங்கிடத்து, அதன் இளமையிலிருந்த மீனின உறுப்புக்கள், அவ்விலங்கு மூச்சுவிடும் வேறு உறுப்புக்களைப் பெற்று முதிர்ந்த நிலையிலும் அங் ஙனமே நிலைத்திருக்கின்றன. அன்றியும், ஏரியஸ் (Arius) என்ற மீனைப்போலவே பெண்ணினம் ஈன்ற முட்டைகளை ஆணினம் சென்றவிடமெல்லாம் ஒரு கோவையாக இழுத்துச் செல்லும் இயல்பு எலைடிஸ்

(Alytes) என்ற இவ்விலங்கினிடங் காணப்படுகின்றது.

பல்லி, ஓணான், அரணை முதலியவை அடுத்தபடியாகக்கருதப்படும். இவ்வினத்தில் பிரினோசோமா (Phrynosoma) என்பது கொம்புறு தேரை (Horned Toad) எனப்படும். இஃது ஆள் வழக்கற்ற வறண்ட இடங்களில் நீரருந்தாமலும் பன்னாள் வாழ்ந்திருக்கும்; பிறிதொன்றனாற் பற்றப் பட்ட நிலையில், உயிர்க்கு ஊறு நேருமெனத் தோன்றினால் தன் கண்களிலிருந்து குருதிநீர் சிந்தி அப்பிடிப்பினின்றும் விடுபட்டுப் பிழைக்கும். குறிஞ்சிப் பாட்டில், தலைமகன் வரும்வழி முதலையும், இடங்கரும், கராமும் செறியப்பெற்று இடருடையதாயிருக்கும் என்று தலைமகள் வருந்துவதாகச் சொல்லப்பட்டிருக்கிருள். ஆனால், முதலையினத்தில் நான்கு வகை யுண்டென விலங்கு நூலாசிரியர் கூறுகின்றனர். இவற்றுள், கங்கை நதியிற் காணப்படும் ஓரினத்ததும், நமது பக்கத்துச் சிற்றாறுகளில் உறையும் மற்றோரினத்ததும் ஆகிய ஈரின இளமுதலைகள் அங்குக் காட்சியளிக்கின்றன. பெரிய கடலாமை ஓடுகளும் காணப்படும்.

பாம்பினம் பல' அங்குண்டு. முட்டையிடுவனவும், குட்டி போடுவனவும், கொடுநஞ்சு உமிழ்வனவும், நஞ்சு இல்லனவும், கடலிடத்து உறைவனவும், நிலத்திடை வாழ்வனவும், படமெடுத்தாடுவனவும் ஆகிய பல சிறந்த பாம்பினங்கள் அங்கு நிரம்ப உள. கடிய வேகச் சுடுசர மென்ன இயங்கும் மிகக் கொடிய நஞ்சமைந்த அரசநாகமும் (King Cobra) அண்மையில் அங்கே கொணர்ந்து வைக்கப் பட்டுளது.

இதனினும் உடலமைப்பாற் சிறப்புற்றது பறவையினம். நெருப்புக் கோழியின் என்புக்கூடு ஒன்றும், ஆடுகின்ற நிலையில் மயிலுடல் ஒன்றும் அங்குப் பொருத்தப்பட்டுள்ளன.

பறவையினும் சிறந்தவை தம் மகவிற்குப் பாலூட்டி வளர்க்கும் விலங்கினம். இதனுள் மக்களினமும் ஒன்று. இவ்வகை விலங்கினத்தால் அச்சாலையை அழகு செய்வன ஒரு நீர்நாயும் (Lutra) ஓர் எறும்புண்ணியும் (Ant Eater) ஓர் யானைத் தலைக்கூடும் எனலாம்.

அல்லாமலும், அச்சாலையின்கண் மக்கள் உடற் பொருள்களாய்க் காணுதற்குரியன மனித மூளையும் மனித இதயமும் முதலியனவாம். உள்ளிடத்து வைகும் மகவின் வளர்ச்சியைத் திங்கடோறும் காட்டுவனவாய் அமைந்த கருப்பைகள் பல அங்கே உள. இவைபோன்று முயல், ஆடு இவற்றின் கருப்பையில் அவற்றின் குட்டிகள் அமைந்துள்ள நிலைகள் கண்டார் நெஞ்சு பிணிப்பன. ஒன்பதாண்டுச் சிறுவன் ஒருவனுடைய சிறுநீர்ப் பையில் உண்டாகி அவனை உயிர் துறக்கும்படி செய்த ஒரு சிறு கல்லும் (Stone of Calcium Carbonate) வைக்கப்பட்டுள்ளது.

ஒருடம்பில் இரண்டு தலையுடைய பசுங்கன்றும், ஈருடலுக்கு ஒரு தலையமைந்த நாய்க்குட்டி யொன்றும், ஆறுகாற் கோழிக்குஞ்சு ஒன்றும் பாமரமக்களாலுங் கண்டு இன்புறத்தக்கன. அன்றி, விலங்கின் உடலில் அமைந்த என்புக் கூட்டிற்கு ஒருவகைச் சாயமேற்றி (Alizarine staining) அவற்றின் கூறுபாடுகள் அமைந்த வண்ணம் விளக்குவதென்பது உலகில் மிக அரியதொரு கலையாகும். இக்கலையிற்

கைவந்த விலங்குநூற் பேராசிரியர் கோழிக்குஞ்சு களையும் இன்னுஞ் சிலவற்றையும் அவ்வண்ணம் சாயமேற்றி அமைத்திருத்தல் அச்சாலையின் தனிச் சிறப்பாகும்.

இனி, பலவாகிய விலங்குகளின் உடற் பொருள் களை உள்ளது சிறத்தலென்னும் இயற்கையுண்மை நெறியிற் பயிற்றுதற் பொருட்டு ஒழுங்கு படுத்துவது மேனாட்டுப் பல்கலைக் கழகங்களைச் சார்ந்த முறை யாகும். அம்முறை பற்றி இங்கும் பல்வேறு விலங்கு களின் இதயமும் இடுப்பெலும்பு தலையோடு முதலி யனவும் ஒப்புநோக்கிப் பயிலுதற் பொருட்டு வகுத்து அமைக்கப் பெற்றுள்ளன. இது கற்றுர் கண்டு மகிழ்ந்து போற்றுதற்குரியது.

இதுவரை அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிபற்றி அறிந்த நாம், இனி அதன் ஆட்சி முறைகளையும் அறிவோம்.

பல்கலைக் கழக நிருவாகம், ஆட்சியாளர் குழுவி னிடம் (Syndicate) ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அக்குழுவிற்குத் தலைவர் பல்கலைக் கழகத் துணை வேந்தர். புரவலரால் (Pro-Chancellor) நியமிக் கப் பெறும் பிரதிநிதிகள் இருவரும், சென்னை அரசாங்கத்தாரால் நியமனம் பெறும் பிரதிநிதிகள் இருவரும் அக்குழுவில் இடம் பெறுவர். அன்றியும், பல்கலைக் கழகப் பேராசிரியர்களிலிருந்து தேர்ந்தெடுக் கப்பெறும் பலதுறைத்தலைவர் (Deans) நால்வருக் கும் அதில் இடமுண்டு. இந்தக் குழு திங்களுக் கொருமுறை கூடி நிருவாகச் செய்திகளை முடிவு செய்யும். ஆயினும், நாடோறும் நடைபெறும் நிரு வாகத்தின் பொறுப்புக்கு உரியவர் துணைவேந்தரே.

சட்டமன்றம் (Senate) என்பது, ஏறத்தாழ

எழுபதுபேர் கூடிய ஒரு சபை. அதற்குச் சென்னைக் கவர்னர் தலைவராவார். அச்சபையின் கூட்டத்திற்குக் கவர்னர் வந்திருந்தால் அவரும், அவர் வரவில்லையானால் புரவலரும் தலைமை வகிப்பர். அவ்விருவரும் வராதிருந்தால் துணைவேந்தர் தலைவராவார். இம் மன்றத்து உறுப்பினர்களுள், சென்னைச் சட்ட சபைப் பிரதிநிதிகளும், அரசாங்கப் பிரதிநிதிகளும், புரவலர் பிரதிநிதிகளும், இப்பல்கலைக் கழக ஆசிரியர் பிரதிநிதிகளும், இப்பல்கலைக் கழகப் பட்டம்பெற்ற மாணவர் பிரதிநிதிகளும் இடம்பெற்றிருப்பர். இம் மன்றத்தார், ஆண்டுக்கு இருமுறை' கூடிப் பல்கலைக் கழகத்தின் பல்வேறு செய்திகளையும் ஆராய்ந்து ஆலோசனை கூறும் உரிமையுடையவர். வரவு செலவுத்திட்டமும் நிருவாக அறிக்கைகளும் இம் மன்றத்தாரால் முடிவு செய்யப்படும். இவர்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர் மூவர் ஆட்சியாளர் குழுவிலும் இடம்பெறுவர்.

இவையன்றியும், ஆசிரியர் பிரதிநிதிகள் நிரம்பிய கல்விச் சபையும் (Academic-Council) பல துறைக்குழுவும் (Faculty) பாடக்குழுவும் (Board of Studies) பணியாற்றுகின்றன. எனவே, பல்கலைக் கழகத்தின் கலைவளர்ச்சியையும் நிருவாகப் பொறுப்புக் களையும் கவனித்துச் செயலாற்றுதற்குத் தக்க வழி வகைகள் காணப்பட்டிருக்கின்றன.

இனி, அப்பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் களாக இருந்து பணியாற்றியவர்களைப்பற்றி நோக்கு வோம். பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்த ராய் அமைந்தவர், மகாகனம் சீநிவாச சாஸ்திரியார் அவர்களாவர். அவர் ஆங்கிலமொழியை அழகுறப் பேசுந்திறத்தாலும், நாவன்மையாலும், மிதவாதக்

கொள்கையாலும் உலகப் புகழ்படைத்தவர் ; ஆசிரிய ராயமர்ந்து சில ஆண்டுகள் தொண்டாற்றியபின், அரசியலிற் கலந்துகொண்டு பெருமதிப்புப் பெற்றவர்; சட்டசபை உறுப்பினராய்ப் பல ஆண்டுகள் இருந்த வர் ; 1921-இல் ஜெனிவாவுக்கு இந்தியாவின் பிரதி நிதியாக அரசாங்கத்தாரால் அனுப்பப்பட்டவர்; தென் ஆப்பிரிக்காவில் சில ஆண்டுகள் இந்தியாவின் தூதுவராக இருந்து தொண்டாற்றியவர். அவர் பின்னரும் ஐந்து ஆண்டுகள் (1935–'40) துணை வேந்தராய் அமர்ந்து, பல்கலைக் கழகத்தின் வளர்ச் சிக்கு வழிவகுத்து உதவினர்.

சென்னைமாகாண அரசாங்கக் கல்லூரியில் பல ஆண்டுகள் ஆங்கிலப் பேராசிரியராகவும், அக் கல்லூரியிலும் கும்பகோணம் அரசியலார் கல்லூரியி லும் தலைவராகவும் இருந்து கல்வித்துறையில் நன்கு அனுபவம்பெற்ற "திவான்பகதூர்" சாமுவேல் அரங்கநாதன் அவர்கள் ஆறு ஆண்டுகள் (1929–'35) துணைவேந்தராய் இருந்து பல்கலைக் கழகத்தின் ஆக்கத்திற்கு அடிகோலி அருந்தொண்டுகள் புரிந் தார்கள். அவர் பின்னர்ச் சென்னைப் பல்கலைக் கழகத்துணை வேந்தராகவும், இங்கிலாந்தில் இந்தியா வின் பிரதிநிதியாகவும் (High Commissioner for India) இருந்து பணியாற்றினர்.

சென்னை மாகாண அமைச்சர் குழுவில், வேளாண்மைப் பகுதி அமைச்சராக இருந்து பணி யாற்றியவரும், சட்டக்கலையில் வல்லுநரும், சில காலம் சென்னை மாகாணக் கவர்னராயிருந்தவரும் ஆகிய சர். கூர்ம வேங்கட ரெட்டி நாயுடு அவர்கள் இரண்டு ஆண்டுகள் (1940–'42) துணைவேந்தராய் இருந்து செயலாற்றியது பெருமைப்படத்தக்கது.

திருவாளர் எம். இரத்தினசாமி அவர்கள் ஆறு ஆண்டுகள் (1942-'48) துணைவேந்தராய் இருந்து சிறந்த பணிபுரிந்தார்கள். இவர், சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தலைவராகவும், சென்னைச் சட்டக் கல்லூரித் தலைவராகவும், சட்டசபைத் தலைவராகவும் இருந்து, கல்வித்துறைக்கும் நாட்டு நலத்திற்கும் உழைத்தவர். சென்னையில் பல அரசாங்க அலுவலகங்களுக்குப் பொறுப்பாளர்களையும் அலுவலாளர்களையும் தேர்ந்தெடுக்குங் குழுவில் (Public Service Commission) உறுப்பினராகவும் இருந்து செயலாற்றியவர்.

இப்போது துணைவேந்தராய் இருந்து சிறந்த கல்வித்தொண்டு செய்துவரும் டாக்டர் ச. கோ. மணவாளராமாநுசம் அவர்கள் சென்னைமாகாணக் கல்லூரியில் விலங்குநூற் பகுதிப் பேராசிரியராகவும், பின்பு அக்கல்லூரித் தலைவராகவும் இருந்து அநுபவம் பெற்றவர்கள்.

மற்றும், டாக்டர் பி. வி. நாராயணசாமி நாயுடு, திரு. டி. ஆர். வேங்கடராம சாஸ்திரியார், திரு. ஆர். இராமாநுசாச்சாரியார், டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் ஆகிய இவர்கள், இடையிடையே துணைவேந்தராக அலுவல் ஆற்றினது குறிப்பிடத் தக்கது.

## 9. தமிழிசைத் தொண்டு

தமிழிசையென்பது தமிழ்மொழியில் அமைந்த பாடல்களோடு இயைத்துப் பாடப்பெறும் இசையாகும். தமிழ்மொழி எக்காலத்தில் தோன்றியதோ அக்காலந்தொட்டே தமிழிசையும் வழங்கிவருகிறது.

தமிழ்மொழியினை இயல் இசை கூத்து என முப் பெரும் பிரிவுகளாக்கி, அவற்றுள், இசைக்கு நடு விடங்கொடுத்து நம் முன்னையோர் பல்லாயிரம் ஆண்டுகளாக முத்தமிழையும் போற்றிவளர்த்தனர். சிற்றிசை பேரிசை இசை நுணுக்கம் முதலான இசை யிலக்கண நூல்கள் பல இருந்தன. சங்க இலக்கியங் களிலும் தொல்காப்பியத்திலும் முத்தமிழ்க் காப்பிய மாகிய சிலப்பதிகாரத்திலும் தமிழிசை, இசைக் கருவிகள் பற்றிய குறிப்புக்கள் பலப்பல காணப்படு கின்றன. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய பரிபாடல் என்னும் நூல் முழுதும் பண்ணோடு பாடப் படுவது என்பதனை, அதில் ஒவ்வொரு பாடற்கும் இசை வகுத்திருப்பதனால் அறிகின்றோம். மேலும், முச்சங்கங்களைப்பற்றிய வரலாறும், "சங்கத் தமிழ் மூன்றுந் தா" என்னும் ஒளவையார் வேண்டு கோளும், "கூடலின் ஆய்ந்த ஒண்டீந் தமிழின், துறைவாய் நுழைந்தனையோ அன்றி ஏழிசைச் சூழல் புக்கோ" என்னும் மணிவாசகப் பெருந்தகை யார் வாக்கும், முதற் சங்க காலந்தொட்டு முத் தமிழும் ஆராயப்பட்டன என்பதையும், ஒவ்வொரு தமிழிலும் பலப்பல நூல்கள் இயற்றப்பட்டன என் பதையும், தனிக்கழகம் நிறுவி இசைத்தமிழ் வளர்க்கப் பெற்றது என்பதையும் நன்கு வலியுறுத்தல் காணலாம். எனவே, தமிழிசையானது வரலாற்றிற் கும் எட்டாத தொன்மை வாய்ந்தது என்று கொள்ளு தற்கு யாதுந் தடையில்லை. கல்லாடம், சிந்தாமணி, பெரியபுராணம், கம்பராமாயணம், திருவிளையாடற் புராணம் முதலான தமிழிலக்கியங்கள் எல்லாவற்றி லும், தமிழிசை மணங்கமழ்ந்துகொண்டிருத்தலைக் கற்றோர் அறிவர்.

அன்றியும், 7-ஆம் நூற்றுண்டிலும் அதற்குப் பின்னரும் எழுந்த தேவாரம், திருவாய்மொழி, திருவிசைப்பா முதலான அருள் நூல்களெல்லாம் இசைப்பாக்களால் ஆனவை. பிற்காலத்து, முத்துத் தாண்டவர், வேதநாயகம்பிள்ளை, கோபாலகிருஷ்ண பாரதியார், அருணசலக்கவிராயர் முதலிய எத்துணையோ இசைப்புலவர்களால் இயற்றப்பட்ட தமிழிசைப் பாடல்கள் எண்ணிறந்தன உள்ளன. இவ்வாறிருந்தும், சுமார் முப்பதாண்டுகளுக்கு முன்னர்த் தொடங்கி இசையரங்குகளில் தமிழிசைப் பாடல்கள் பாடுதல் மிகமிகக் குறைந்துபோயிற்று. மூன்றுமணி நேரம் இசையரங்கு நடைபெற்றுல் அதிற் பெரும்பான்மையான நேரம் வேற்றுமொழிப் பாடல்களுக்கே செலவிடப்பட்டது. இறுதியில், பாடுவோரும் கேட்போரும் அயர்ந்து சோர்ந்த நிலையில் ஏதோ இரண்டொரு தமிழ்ப்பாட்டுக்கள் பாடப்படுதல் வழக்கமாயிற்று. இந்நிலை, தமிழறிஞர் ஒவ்வொருவர் உள்ளத்திலும், உணர்ச்சியையும் வருத்தத்தையும் ஊட்டிவந்தது. ஆயினும், இம்முறை மாறவேண்டுமென்று யாருந் துணிந்துகூற முன்வந்தாரல்லர்.

இசைவாணர்களால், தம் தாய்மொழியின் ஒரு கூருகிய தமிழிசை இங்ஙனம் புறக்கணிக்கப்படுதல் கண்டு, அண்ணமலையரசருடைய உள்ளம் புழுங்கியது. இப் பொருத்தமற்ற செயலைத் தவிர்க்க வேண்டுமென அவர் துணிந்தார். 1941-ஆம் ஆண்டு நடைபெற்ற அண்ணமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில், பதினுயிரம் ரூபாய் நன்கொடையாக வழங்கி, தமிழிசை நூல்கள் வெளியிடும்படி பல்கலைக் கழகத்தாரைத் தூண்டினர்; பின்பும்

தமிழிசை வளர்ச்சிக்காகப் பல பதினாயிரம் ரூபாய்கள் நன்கொடையாகத்தந்திருக்கிறார். 14—8—1941-இல், அண்ணாமலைநகரில் முதல் தமிழிசை மாநாடு கூடிற்று. இசைப் பெரும்புலவர்களும் இசைப்பற்றுடையோரும் பெருந்திரளாகக் கூடினர். மூன்று நாட்கள் காலை மாலை நேரங்களில் பல இசையரங்குகள் நடைபெற்றன. அவற்றிற் கலந்துகொண்ட இசைப்புலவர்கள் யாவரும் தமிழிசைப் பாடல்களே பாடி எல்லோரையும் மகிழ்வித்தார்கள். சிறந்த தமிழிசைப் பாடல்களை இயற்றிய புலவர்களுக்கும் பாடிய இசையறிஞர்களுக்கும் பரிசில்கள் பல வழங்கப்பட்டன. இசைவாணர்கள் எல்லோரும் தமிழ்நாட்டில் தமிழிசையே வளரவேண்டுமெனப் பேராதரவுடன் பேசினார்கள். மாநாடு இனிது முடிந்தது.

ஒரு நாட்டில், எத்தகையதொரு நல்ல இயக்கந் தோன்றினாலும், அதனை எதிர்ப்பதற்குச் சிலர் முற்படுவது இயற்கையன்றோ? அம்முறையில் சிலர் தமிழிசை யியக்கத்தையும் எதிர்த்துப் பேசியும் எழுதியும் வந்தனர். அவர்கள் எதிர்ப்புக்குக் கூறிய காரணங்கள் "தமிழ்மொழி இசைபாடுதற்கு ஏற்றதன்று; தமிழில் நல்ல கீதவர்ணங்கள் கீர்த்தனங்கள் இல்லை; இசைக்கு மொழியானது அவசியமில்லை" என்பனவாம். அண்ணாமலையரசர் அவ்வெதிர்ப்புக்களைக் கண்டு சிறிதும் தளர்ந்தாரல்லர்.

"தமிழ் மொழி இசை பாடுதற்கு ஏற்றதன்று என்பதும், தமிழில் இசைப் பாடல்கள் இல்லை யென்பதும் அறியாமலோ வேண்டுமென்றோ கூறுங் கூற்றுக்களாகும். கீத வர்ணங்கள் இல்லையென்றால் இயல் இசைப்புலவர்களால் எளிதாக ஆக்கிக் கொள்ளலாம்.

இசைக்கு மொழி அவசிய மில்லையாயின், யாழ் பிடில் முதலான இசைக் கருவிகளின் வாயிலாகக் கேட்கப் படும் இசையே அமையும். வாய்ப் பாட்டுப் பாடப்படு வது எதற்கு? அவ் வாய்ப்பாட்டிலும் இராகங்களை ஆலாபனஞ் செய்தல், சுரம் பாடுதல் என்ற இவையே போதுமல்லவா? கீர்த்தனங்களை ஏன் பாடுதல் வேண் டும்? ஒரு மொழியில் அமைந்த பாடல்களோடு இயைத்துப் பாடப்படும் இசையே சிறந்தது என்றால், அம்மொழி யாதாய் இருக்கலாம்? எந்த நாட்டிற்கும் பொதுவாக அந்தந்த நாட்டு மக்களாற் பேசப்படும் தாய்மொழியில் அமைந்த பாடல்களைப் பாடுவது தானே இயற்கை? பாடுவோருக்கும் கேட்போருக்கும் இசையின்பத்தையும் பொருட் சுவையையும் ஒருங்கே ஊட்டவல்லது தாய்மொழிப் பாடல் அன்றோ? அஃது உடன்பாடாயின் தமிழ் மொழியைத் தாய்மொழி யாகக்கொண்ட மக்கள் பெருந்திரளாகக் கூடியிருக் கும் அவையில், அவர்கள் அறிந்த மொழிப் பாடல் களைப் பாடி அவர்களை இன்புறுத்தவேண்டுவது இசை வாணர்கள் கடமை என்பது கூறவும் வேண்டுமோ? "பிற மொழி இசைப் பாடல்கள் என் செவியைத் தொட்டனவேயன்றி, உள்ளத்தைத் தொடவில்லை" என்று மகாகனம் சீநிவாச சாஸ்திரியாரவர்கள் கூறிய உண்மையை யாராலும் மறுக்க முடியுமா? எனக்கு யாரிடத்திலும் எம்மொழியினிடத்தும் வெறுப்பு இல்லை; வேற்றுமொழிப் பாடல்களும் சில பாடலாம்; அவற்றில் அமைந்துள்ள இசை யின்பத்தையும் நுகரலாம். ஆனால், இப்போது இசையரங்குகளில் வேற்றுமொழிப் பாடல்களுக்குக் கொடுக்கப்படும் நேரத்தைத் தமிழ்ப் பாடல்களுக்கும், தமிழ்ப் பாடல் களுக்காக ஒதுக்கப்படும் நேரத்தை வேற்று மொழிப்

பாடலுக்கும் கொடுக்கவேண்டும் என்பதே என் விருப்பம். இசையரங்கிற்கு வரும் பொதுமக்கள் எல்லோரும் இசை நுணுக்கங்களை அறிந்தவரா யிருக்க மாட்டார்கள் ; இருத்தலும் இயலாது. அவர் களுக்கு, அறங்கள், ஒழுக்கங்கள், பலவகையான நீதிகள், நாட்டுப்பற்று, மொழிப்பற்று, கடவுள் உண்மை முதலான உயர்ந்த கருத்துக்கள் செறிந்த தாய்மொழிப் பாடல்களை இசையோடு கலந்து ஊட்ட வேண்டும். அக்கருத்துக்களிற் சிலவேனும் அவர்கள் உள்ளத்திற் பதியுமானல், அவர்கள் நாளடைவில் நல்ல பண்பாடு உடையவராவார்கள். ஆகவே, நம் நாடும், மக்களும், மொழியும் நலம் பெறுதல் வேண்டு மென்று கருதியே இத்தமிழிசை இயக்கம் தொடங்கப் பெற்றிருக்கிறது'' என்று தெளிவாகவும் திருத்தமாக வும் எதிர்ப்பாளர்களுக்கு மறுமொழி தந்தார்.

மேலே கூறியவற்றைச் செயல் முறையிற் காட்டு தற்காக, செட்டிநாட்டு அரசர், சென்னையில் தமி ழிசைச் சங்கம் என ஒரு சங்கம் நிறுவினர். அதற்கு முப்பதினயிரம் ரூபாயும் வழங்கினர். சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் முதலான பேரறிஞர் பல ருடைய உழைப்பும் உதவியும் இருந்தமையால் அச்சங் கத்திற்கு ஐந்து லட்சம் ரூபாய் நிலைப்பொருள் சேர்ந் தது. அச்சங்கத்தின் சார்பாக (1943-இல்) அமைக் கப் பெற்றுள்ள இசைக் கல்லூரியில் பல மாணவ மாணவியர் தமிழிசைக்கல்வி பயில்கின்றனர். சிறந்த இசையாசிரியர்களால் தமிழிசை கற்பிக்கப்படுகிறது. நான்கு ஆண்டுகள் பயின்று தேர்ச்சிபெற்ற மாணவர் களுக்கு ''இசைச் செல்வர்'' என்ற பட்டமும், ஐந்து ஆண்டுகள் பயின்று தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு ''இசை மணி'' என்ற பட்டமும் வழங்கப் படுகின்

றன. ஆண்டுதோறும் பெருந்திருவிழாப்போல் பத்து நாட்கள் தமிழிசை யரங்குகள் அச்சங்கத்தின் சார்பாக நடைபெற்றுவருகின்றன. அதனோடு, பண்டைத் தமிழிசை மரபினைத் தெரிந்து கோடற்கு உறுதுணையாவன தேவாரப் பண்களே யென்பதை யுணர்ந்து, தேவாரம் பாடுதலில் வல்லுநர் பலரை ஒருங்குகூட்டி, இக்காலத்து வழங்கிவரும் கருநாடக இசைக்கும் தேவாரப் பண்களுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை பற்றிய ஆராய்ச்சியும் சில ஆண்டுகளாக அங்கு நடைபெற்றுவருதல் குறிப்பிடத்தக்கது. இங்ஙனம், பல்லாற்ருனும் சென்னைத் தமிழிசைச் சங்கம் தமிழிசை வளர்ச்சிக்குப் பணியாற்றிவருகின்றது.

அண்ணுமலைப் பல்கலைக் கழக இசைக் கல்லூரியில் தமிழிசை நன்கு கற்பிக்கப்படுகின்றது. அதில் நான்கு ஆண்டுகள் பயின்று தேர்வில் வெற்றிபெற்ற மாணவர்கள் "சங்கீத பூஷணம்" என்ற பட்டம் பெறுகின்றனர். அதற்கு மேலும் ஓராண்டு சிறப்பாக இசைத் தனி வகுப்பும் (Special Music Course) நடைபெறுகின்றது. பல்கலைக் கழகத்தார் இதுவரை இருபத்தொரு தமிழிசைப் பாடற்றெகுதிகள் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர். அவற்றுள், தமிழிசைப் பாடல்களையன்றி இசையிலக்கணம், இசையின் அடிப்படையான கீதவர்ணங்கள், சுரசதி, சதிசுரம், சூளாதி, பிரபந்தம் முதலானவை அடங்கிய தொகுதிகளும் உண்டு. இன்னும் பல தொகுதிகள் வெளியிடுதற்கு வேண்டிய தமிழிசைப் பாடல்களும் இருக்கின்றன. இனி, இவ் இசைக் கல்லூரி தோன்றிய காலந் தொட்டு அதில் இசைப் புலமை நடாத்திய தலைமை ஆசிரியர்களையுங் காண்போம்.

1929-ஆம் ஆண்டு முதல் 1937-ஆம் ஆண்டு வரை எட்டு ஆண்டுகள், "சங்கீத கலாநிதி" எஸ். சபேசையர் அவர்கள் இசைக் கல்லூரித் தலைவராக வும் விரிவுரையாளராகவும் இருந்து பணியாற்றினர்; முதலாண்டில் கல்லூரித் தலைவராகவும், பின்னர், பல் கலைக் கழகத்துடன் இசைக் கல்லூரி இணைக்கப்பட்ட பின் தலைமை விரிவுரையாளராகவும் இருந்தார். இவர், திருவையாறு சாம்பசிவ ஐயர் என்னும் இசையறிஞருடைய புதல்வர்; வையைச்சேரி மகா வைத்தியநாத சிவன் அவர்களுடைய மாணவர்; மகா வைத்தியநாத சிவன் இயற்றிய "72-மேள ராக மாலிகை" என்னும் நூலை இவர் பதிப்பித்திருக்கிறார். இசைப் பெரும் புலவராக விளங்கிய "காயகசிகாமணி" அரிகேசவ நல்லூர் முத்தைய பாகவதர், இவர் தந்தையார் சாம்ப சிவ ஐயரிடம் இசை பயின்றவராயினும், பெரும் பாலும் இச்சபேசையரிடமே கற்றுவந்தார் என்று கூறுகின்றனர். சென்னையில் நிறுவப் பெற்றிருக்கும் இந்திய அரசாங்கக் கருநாடக இசைக் கல்லூரியில் இப்போது தலைவராயிருக்கும் திருவாளர் முசிரி சுப்பிரமணிய ஐயரவர்கள் இவருடைய மாணவராவர். மற்றும், இசையுலகில் இப்போது விளக்கம் பெற்று வரும் வேறு சிலரும் இவரிடம் பயின்றவர்களே.

2. சென்னையிலுள்ள, சங்கீத அக்காடமியின் தலைவராகவும், பல்கலைக் கழகத்தில் இசைத் தலைவராகவும் இருந்து பல ஆண்டுகள் இசைப்பணி புரிந்த "சங்கீத கலாநிதி" டைகர் வரதாச்சாரியார் அவர்கள் 1937-முதல் 5 ஆண்டுகள் தலைமை விரிவுரையாளராகவும், ஓராண்டு தமிழிசைக்குழு ஆலோசகராகவும் இங்கு ஆறு ஆண்டுகள் இருந்து தமிழிசைக்குச் சிறந்த தொண்டு செய்துள்ளார். இவர் பட்டணம்

சுப்பிரமணிய ஐயர் என்னும் இசைக் கலை வல்லுந ரிடம் புலமை பெற்றவர் என்பர். இவருடைய இசை நுணுக்க அறிவை இசைவாணர் யாவரும் பாராட்டு வர். கீத வர்ணங்கள் பல இயற்றியும், யோகி சுத்தா னந்த பாரதியாருடைய பாடல்கள் சிலவற்றிற்குப் புதிய இசை யமைப்புக்கள் வகுத்தும் தமிழிசை வளர்ச்சிக்கு இவர் உதவி புரிந்தார்.

3. இசைக் கல்லூரியின் தொடக்க முதல் எட்டு ஆண்டுகள் சபேசையருடன் துணையாசிரியரா யிருந்து இசை கற்பித்தவரும், பின்னர், சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆறு ஆண்டுகள் இசைப் பகுதித் தலைவராக இருந்தவரும், இசைக்கலைச் செல்வத்தை வழிவழியாக வளர்த்துவரும் மரபிற் பிறந்தவரும் ஆகிய தஞ்சை "சங்கீத கலாநிதி" க. பொன்னையா பிள்ளை அவர்கள், மீண்டும் இங்கு வந்து ஓராண்டு (1944) இசைப் பேராசிரியராயிருந்து தமிழிசைக்கு அருந்தொண்டாற்றினர். தம் முன்னோர்கள் இயற் றிய வர்ணங்கள் கீர்த்தனங்களுடன், தாம் இயற்றிய இசை உருப்படிகள் பலவற்றையும் சேர்த்து "பெரு வுடையான் பேரிசை" என்ற நூல் இவராற் பதிப் பிக்கப்பட்டுள்ளது. மேலும், இவர் இயற்றிய "இசை யியல்" என்ற நூலும், "அண்ணுமலை இசைக் கருவூலம்" என்ற நூலும், பல்கலைக் கழகத்தாரால் வெளியிடப் பெற்றுள்ளன.

4. வேய்ங்குழல் என்னும் இன்னிசைக் கருவி யில் வல்லுநரும், இசை நுணுக்க அறிவிற் சிறந்த வரும், தமிழிசை வளர்ச்சியில் ஆர்வ மிக்குடைய வரும் ஆகிய திருப்பாம்புரம் திருவாளர் டி. என். சாமிநாத பிள்ளை அவர்கள் 1945 முதல் இரண் டாண்டுகள் தலைமை விரிவுரையாளராயிருந்து பல

மாணவர்களுக்கு ஊக்கத்துடன் தமிழிசை கற்பித்து வந்தார். முத்துத்தாண்டவர், தேவகோட்டை "பால கவி" வயிநாகரம் இராமநாதன் செட்டியார் ஆகிய இவர்களுடைய பாடல்களுக்குப் புதிய இசையமைப் புக்கள் வகுத்துத் தமிழிசை வளர்ச்சிக்கு உதவி புரிந்தார். இவை, பல்கலைக்கழக வெளியீடுகளாக வெளிவந்துள்ளன. இவர் இயற்றிய தமிழ்க் கீத வர்ணங்களும் பல உண்டு. இவர், இப்போது சென்னை, இந்திய அரசாங்கக் கருநாடக இசைக் கல்லூரியில் வாய்ப்பாட்டுப் பேராசிரியராயமர்ந்து பணியாற்றுகின்றார்.

5. 1947-முதல் "இசை மன்னர்" சித்தூர்ச் சுப்பிரமணிய பிள்ளையவர்கள் பேராசிரியராயிருந்து இசை வளர்த்துவருகிறார். இவர், காஞ்சிபுரம் நாயனாப்பிள்ளை யென்ற இசைநிபுணராகிய சுப்பிர மணியபிள்ளை அவர்களுடைய மாணாக்கர்; இவர் இனிய சாரீர வளமும் இசையரங்கு நடத்தும் திறமை யும் உடையவர். இங்குக் குறிக்கப் பெற்ற இவர்களே யன்றி, வாய்ப்பாட்டு ஆசிரியர்களாகவும், வீணை பிடில் மிருதங்கம் ஆகிய இசைக் கருவிகள் கற்பிக்கும் ஆசிரியர்களாகவும், தேவார ஆசிரியராகவும் இருந்து, முன்பு பணி யாற்றியவர்களும், இப்போது பணி புரிந்து வருபவர்களும் அவ்வத்துறையில் சிறந்த அறி வும் அநுபவமும் உடையவர்களே யாவார்கள். இவ் இசைக் கல்லூரியில், தமிழ் நாட்டு மாணவ மாணவி யர்களே யன்றி, யாழ்ப்பாணம் மலையாளம் ஆந்திரா ஆகிய பிறநாட்டு மாணவ மாணவியரும் பெரும் பான்மையராய் வந்து சேர்ந்து ஒவ்வொரு துறையி லும் பயிற்சி பெற்றனர்; இப்போதும் பயின்று வரு கின்றனர்.

இவ்வாருக, அண்ணுமலைப் பல்கலைக் கழக இசைக்கல்லூரியானது, தமிழிசை நூல்கள் பல வெளியிட்டும், இசையில் வல்ல புலவர்களையே தெரிந்தெடுத்து ஆசிரியர்களாயமைத்தும், உயர்ந்த மதிப்பு எண்கள் பெறும் மாணவர்களுக்கு உதவிச் சம்பளம் வழங்கியும், பல பரிசுத் திட்டங்கள் வகுத்தும் இசைக்கலையின் பல துறைகளையும் நன்கு வளர்த்து வருகின்றது. தமிழ் இலக்கிய இலக்கண அறிவுடன், இசையறிவும், தேவாரம் முதலான பன்னிரு திருமுறைப் பயிற்சியும் உடையவராய், முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர் ஒருவர்க்கு, திருப்பனந்தாள் காசி மடத்துத் தலைவர் அவர்களுடைய நன்கொடை நிதியிலிருந்து 500 ரூபாய் பரிசாக வழங்கிவருதல் சிறப்பாக ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

நாளுளும் நலிவுற்றுக் குற்றுயிராய்ச் சிதைந்து போகும் நிலையிலிருந்த தமிழிசைக்கு நல்லுயிர் கொடுத்துப் பேணி வளர்த்து நம் நாட்டில் அதனை நிலைநாட்டிய செட்டிநாட்டு அரசர் அண்ணுமலைச் செட்டியாரைத் தமிழிசைத் தந்தையென்றே கூறலாம். அவருக்குத் தமிழ்நாடு என்றும் நன்றி செலுத்துங் கடப்பாடுடையதாகும். தமிழிசைக்காக அவர் ஒன்றரை லட்சம் ரூபாய் செலவு செய்திருக்கிருர். புதுக்கோட்டை, திருச்சி, தேவகோட்டை, சென்னை ஆகிய தலைநகரங்களில் நடைபெற்ற தமிழிசை மாநாடுகளைத் திறந்து வைத்து அவர் செய்த சொற்பொழிவுகளைப் படித்துப் பார்க்கின், தமிழிசை வளர்ச்சியில் அவர் கொண்டிருந்த ஆர்வமும் நேர்மையும் நன்கு புலனுகும். தஞ்சை, கும்பகோணம், மதுரை ஆகிய நகரங்களிலும் தமிழிசை மாநாடுகள் சிறந்த முறையில் நடத்தப் பெற்றன.

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞான சம்பந்தரைப் பின்பற்றி, அண்ணுமலையரசர் தமிழிசை பரப்பிய செய்தியை ஒருவாருக அறிந்தோம். இனி, அவர் தமிழ் பரப்பிய முறையினை அறிவோம்.

## 10. தமிழ்ப் பற்று

அண்ணுமலையரசர், முத்தமிழ் முழங்கிய பாண்டி வளநாட்டில் உத்தமப் பெருங்குடியிற் பிறந்தவர்; பிற்காலத்துப் பாண்டிய மன்னர்களைப் போன்றிருந்து தமிழ்மொழியையும் தமிழ்ப் புலவர்களையும் ஆதரித்து வரும் சேதுபதி மரபினர் ஆட்சிக்குட்பட்ட இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்தவர்; மதுரையில் நான்காம் சங்கம் நிறுவியவரும், தமிழ்ப் புலமை நிரம்பிய சான்ருேரும் ஆகிய பாலவனத்தம் சமீன்தார் பாண்டித்துரைத் தேவர் அவர்களுக்கு உற்ற நண்பர்; நாட்டரசன்கோட்டைப் பஞ்சாட்சர ஐயா என்னும் தனிவணிகப் பெரியாரோடு இளம் பருவந் தொட்டே நன்கு பழகி வந்தமையால், அவரைப் போலவே தேவார திருவாசகங்களிலும் திருக்குறளிலும் அழுத்தமான பற்றுக் கொண்டவர்; உள்ளத்தையும் உயிரையும் புனிதப்படுத்தி வாழ்க்கையைப் பயனுறச் செய்வன அத்திருமுறைகளும் திருக்குறள் என்னும் தமிழ் மறையுமே என்ற நம்பிக்கை யுடையவர். இவற்ருல், அண்ணுமலையரசர்க்கு இயல்பாகவே தமிழில் மிகுந்த பற்றுண்டாதற்கேற்ற சூழ்நிலைகள் அமைந்திருந்தன என்பது சொல்லாமலே விளங்கும்.

இவர், எப்போதும் தமது கைப்பெட்டியில் திருக்குறட் கையடக்கப் பிரதி யொன்றை வைத்

திருப்பார். நாளொன்றுக்குப் பதினேழு மணி நேரம் அயராது உழைக்கும் இத்தொழிற் செல்வருக்கு ஓய்வு கிடைப்பது அருமையே. சிறிது ஓய்வு நேரம் கிடைக்குமாயின் உடனே திருக்குறளை எடுத்து உரையுடன் ஊன்றிப் படிப்பார். அவற்றில், தம் வாழ்க்கைக்குப் பயன் தரும் கருத்துக்களடங்கிய குறட்பாக்களைக் கோடிட்டுக் குறித்துக்கொண்டு அவற்றைத் தம் உள்ளத்தில் பதிய வைத்துக் கொள்ளுவார். அது மாத்திரமன்று; அவைகாட்டும் நெறியில் தாம் ஒழுகி வரவும் முயல்வார். "கற்றபின் நிற்க அதற்குத் தக" என்பது கருத்தில் இருத்தத் தக்கதன்றோ? இவ்வாறு மேற்கொண்டமையால் இவர் வாழ்க்கை திருக்குறட் கருத்துக்களோடு நெருங்கிய தொடர்புடையதாயிற்று. "செயற்கரிய செய்வார் பெரியர்", "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்", "இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த, வகுத்த லும் வல்ல தரசு", "முயற்சி திருவினையாக்கும்" என்னும் பொய்யா மொழிகள், அண்ணமலையாரைக் குறித்தே எழுந்தனவோ, அம்மறைமொழிகளைக் கடைப்பிடித்து ஒழுகிக் காட்டுவதற்காகவே இவர் தோன்றினரோ என எண்ணுதற்கு இடனுண்டா கின்றது. இங்ஙனம் எடுத்துக் காட்டத் தகுவன பல உள.

சில நேரங்களில் உழைப்பின் அயர்ச்சியைப் போக்குவதற்காக இவர் வானொலிப் பெட்டியைத் திருப்பிவைத்து, செவ்விய தீந்தமிழ் இசைப்பாடல் களைக் கேட்டு இசையின்பத்திலும் பொருளுணர்ச்சி யிலும் ஈடுபடுவார்; பண்முறை பிறழாமல் தேவார திருவாசகங்களைப் பாடும் ஓதுவார்களை அழைத்துப் பாடச் செய்து அப்பாடல்களின் வயப்பட்டு உள்ளம்

உருகுவார். இங்ஙனம் தமிழ்ப்பற்று வாய்க்கப்பெற்ற அண்ணுமலையரசர் தமிழ்மொழி வளர்ச்சிக்குச் சிறப்பாகச் செய்தன யாவையென இனிக்காண்போம்.

இவர் பல்கலைக் கழகம் தொடங்குவதற்கு முன்பே மீனுட்சி தமிழ்க் கல்லூரி நிறுவி, தமிழ்ப் பெரும் பேராசிரியர் உ. வே. சாமிநாதையர் அவர்களை அதற்குத் தலைவராக்கினுர்; அவருக்குப் பின், திருவாளர் - பொன்னுேதுவார் அவர்களைத் தலைமைப் பதவியில் அமர்த்தினுர்; பல மாணவர்களுக்கு உண்டியும் உறையுளும் உதவி, அக்கல்லூரியில் தமிழ் வித்துவான் வகுப்பிற் பயிலச் செய்தார். அக்காலத்தில், மதுரைத் தமிழ்ச் சங்கம், திருவையாற்று அரசினர் கல்லூரி, மேலைச்சிவபுரிக் கணேசர் செந்தமிழ்க் கலாசாலை ஆகிய இடங்கள் தவிர, பண்டித வகுப்பு, தமிழ் வித்துவான் வகுப்புக்கள் வைத்து நடத்தும் கல்லூரி வேறெங்கும் இல்லை. அவ்விடங்களிலும் ஒரு சிலரே பயின்றுவந்தனர். ஆகவே, தமிழ்ப் புலவர்களை உண்டாக்குதற்கு உயரிய முறையில் கல்லூரி அமைத்தவர் அண்ணுமலையரசரேயாவர். இப்போது திருப்பதி, மயிலம், தருமபுரம், திருப்பனந்தாள், கரந்தை ஆகிய பல இடங்களில் தமிழ்க் கல்லூரிகள் நிறுவப் பெற்றுள்ளன.

பல்கலைக் கழகந் தொடங்கிய பின்னரும், அதில், தமிழுக்கு முதன்மையிடங் கொடுக்க வேண்டுமென்னும் நோக்கத்தால், இவர் தமிழ்ச் சிறப்பு வகுப்புக்கள் (பி. ஏ. ஹானர்ஸ்) நடைபெறச் செய்தார். அச்சிறப்பு வகுப்புக்களும், தமிழ்ப் புலவர் வகுப்புக்களும் நாளுக்குநாள் வளர்ச்சி யடைந்துவருகின்றன. அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பி. எஸ். சி. வகுப்பிற் பயிலும்

மாணவர்களும் இரண்டாவது பிரிவாகத் தமிழைப் படிக்க வேண்டும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

அன்றியும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி நிறுவி, அதிற் பயிற்சி பெறுவோர்க்குக் கரும்பு தின்னக் கூலி தந்தாற்போல உதவித் தொகையுங் கொடுத்துப் போதனு முறைப் பயிற்சி கற்பிக்கவும் ஏற்பாடு செய் தார். பண்டிதர் போதனு முறைக் கல்லூரி அப் போது வேறெங்கும் இல்லை. இப்போது சைதாப் பேட்டையில் நடைபெறுகிறது.

மேலும், செட்டிநாட்டரசர், தமிழ் நாட்டில் தமிழ்ப் பேரறிஞராய்ச் சிறந்தவர்களையே தமிழ்ப் பேராசிரியர்களாகவும் விரிவுரையாளர்களாகவும் தேர்ந் தெடுத்துத் தமிழ்ப் பணியாற்றச் செய்தார். அவர் களுள், பேராசிரியராயிருந்தவர்களையும் விரிவுரை யாளர்களிற் குறிப்பிடத் தக்கவர்களையும் இங்கே காண்போம்.

1. பல்கலைக் கழகத்தில் 1930-ஆம் ஆண்டு முதல் 3 ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராக இருந்து பணியாற்றியவர், தவத்திரு - விபுலானந்த அடிகள் ஆவார்கள். தமிழ் நாட்டுக் கலைக்கோயில்களில் தமிழ்ப்பேராசிரியர் என்னும் பதவியை முதலிற் பெற்றவர் இவ்வடிகளேயாவர். தமிழுக்கு அப்பதவியை முதலாவதாக வழங்கிய இடமும் அண்ணுமலைப் பல்கலைக் கழகமேயாம். இஃது, அண்ணுமலை யரசர்க்குத் தமிழின் மீதுள்ள பற்றினைப் புலப் படுத்துவதாகும். இவ்வடிகள் யாழ்ப்பாணத்திற் பிறந்தவர்; பி. எஸ். சி. (லண்டன்) வகுப்பிலும், மதுரைச் தமிழ்ச்சங்கத் தனித்தமிழ்ப் பண்டித வகுப்பிலும் தேர்ச்சி பெற்றவர். 'மதங்க சூளாமணி' என்னும் நாடக நூலும், 'யாழ்நூல்' என்னும் அரிய

ஆராய்ச்சியுடன் கூடிய இசைத்தமிழ் நூலும் இவர் இயற்றியுள்ளார். விவேகானந்தர் இயற்றிய "விவேகானந்த ஞானதீபம்" என்னும் நூலும் இவரால் தமிழில் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளது.

2. நாவலர் - எஸ். சோமசுந்தர பாரதியார் (எம். ஏ. பி. எல்.) அவர்கள் 1933-ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுகள் பேராசிரியராயிருந்து தமிழ்ப் பணி புரிந்தார்கள். இவர் தூத்துக்குடி, மதுரை ஆகிய நகரங்களில் உயர் நீதி மன்ற வழக்கறிஞராய்ப் பல ஆண்டுகள் செயலாற்றியவர்; நாவாற்றல் படைத்தவர். 'மாரி வாயில்', 'மங்கலக் குறிச்சிப் பொங்கல் விழா' என்னும் செய்யுள் நூல்களும், திருவள்ளுவர் முதலிய ஆராய்ச்சி உரைநடை நூல்களும் இயற்றியுள்ளார். தொல்காப்பியப் பொருளதிகாரத்திற் பல இயல்களுக்குப் புதிய உரையும் இவர் எழுதியிருக்கிருர்.

3. மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள், 1938-ஆம் ஆண்டு முதல் இரண்டு ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராயிருந்து தமிழ்த் தொண்டாற்றினுர்கள். விரிவுரையாளராகவும், தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவராகவும், தமிழிசைக்குழுத் தலைவராகவும் இருந்து பல ஆண்டுகள் இவர்கள் பணியாற்றியதும் உண்டு. இவர் தென்மொழி, வடமொழி இரண்டிலும் சிறந்த புலமை வாய்ந்தவர்; சொற்பெருக்காற்றுந் திறம் மிகப் படைத்தவர். மண்ணியல் சிறுதேர், சுக்கிர நீதி, கௌடில்லிய அர்த்த சாஸ்திரம் முதலான வடமொழி நூல்களை மொழி பெயர்த்திருக்கிருர். திருவாசகத்தில் திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம் என்ற இரு பகுதிகளுக்கு அரிய உரையெழுதி

யுள்ளார். இவர் இயற்றிய உரை நடை நூல்களும் சில உள்ளன.

4. திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை (எம். ஏ., எம். எல்.) அவர்கள், 1940-ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகள் பேராசிரியராயமர்ந்து தமிழ்ப் பணி புரிந்தார்கள். இவர் தமிழ் ஆங்கிலம் இரண்டிலும் எம்! ஏ. பட்டம் பெற்றவர்; சட்டக் கலையில் வல்லுநர்; சென்னைச் சட்டக் கல்லூரியில் விரிவுரையாளராகச் சில ஆண்டுகள் செயலாற்றியவர்; ஆண்டில் இளைஞராயிருக்கும்பொழுதே தாகூர் சட்ட விரிவுரையாளராய்ச் சொற்பெருக்காற்றிய அறிவாற்றல் படைத்தவர். திருக்குறள் திருவாசகம் என்னும் இருபெரு நூல்களுக்கும் தெளிபொருள் விளக்கவுரை எழுதியுள்ளார். தொல்காப்பியக் கருப்பொருள், மெய்கண்டாரும் சிவஞான போதமும் என்பன முதலாக இவர் எழுதிய ஆராய்ச்சி உரை நடை நூல்கள் பல. சிவப்பிரகாசம் என்னும் சைவ சித்தாந்த நூல் இவரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தெழுதப் பட்டுள்ளது.

5. வித்துவான் தெ. பொ. மீனுட்சி சுந்தரம் பிள்ளை (எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல்.) அவர்கள், 1943-ஆம் ஆண்டு முதல் மூன்றுண்டுகள் பேராசிரியராயிருந்து தமிழுக்குப் பெருந் தொண்டு செய்தார்கள். இவர் பன்மொழிப் புலவரெனப் பாராட்டப் பெறுந் தகுதி வாய்க்கப் பெற்றுர்; "திருவள்ளுவரும் மகளிரும்" என்னும் சிறந்த ஆராய்ச்சி நூல் இவரால் எழுதப்பட்டுள்ளது. சென்னையில், உயர் நீதி மன்ற வழக்கறிஞராயும், நாட்டின் நலங்கருதும் பல துறைகளில் நன்மதிப்பிற்குரிய இடம் பெற்றும் இவர் இப்போது பணியாற்றுகின்றுர்.

6. திரு. ஆர். பி. சேதுப்பிள்ளை (பி.ஏ., பி.எல்.) அவர்கள், பல ஆண்டுகள் தலைமை விரிவுரையாளரா யிருந்து தமிழ்ப்பணி புரிந்தார்கள். இவர், தமது சொல்லின் செல்வத்தால் எல்லோரையும் மகிழ் விக்கும் இயல்பு வாய்ந்தவர். திருவள்ளுவர் நூல் நயம், சிலப்பதிகார ஆராய்ச்சி, வீரமாநகர், ஊரும் பேரும் முதலான ஆராய்ச்சி உரைநடை நூல்கள் பல எழுதியுள்ளார். இவர், இப்போது சென்னைப் பல் கலைக் கழகத்தில் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவ ராக விளங்குகிறார்.

7. சேது சமஸ்தான மகாவித்துவான், பாஷா கவி சேகரர், ஆர். இராகவையங்கார் அவர்கள், தமிழ் ஆராய்ச்சிப் பகுதியில் பல ஆண்டுகள் விரி வுரையாளராகவிருந்து ஆராய்ச்சி நூல்கள் பல எழுதி வெளியிட்டனர். தமிழ் வரலாறு, பாரி காதை உரை, குறுந்தொகை உரை முதலிய ஆராய்ச்சி நூல்கள் குறிப்பிடத்தக்கன. இவர், சாகுந்தல நாடகத்தைச் செய்யுள் வடிவில் தமிழில் மொழிபெயர்த்திருக் கிறார்.

8. நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், பல ஆண்டுகள் விரிவுரையாளராயிருந்து பணி செய்தார்கள். இவர், திருச்சி பிஷப் ஈபர் கல் லூரியில் பல ஆண்டுகள் தலைமைத் தமிழாசிரியரா யிருந்து தொண்டாற்றியவர்; கற்பிக்கும் திறமை நன்கு வாய்ந்தவர்; ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம் முதலான பிற்கால நூல்களுக்கும், இன்னாநாற்பது, இனியவைநாற்பது, சிலப்பதிகாரம், மணிமேகலை, அகநானூறு முதலான பழந்தமிழ் நூல்களுக்கும் புதிய உரை எழுதியுள்ளார். நக்கீரர், கபிலர்

முதலான ஆராய்ச்சி உரைநடை நூல்களும் இவரால் எழுதி வெளியிடப்பட்டுள்ளன.

9. சர்க்கரை இராமசாமிப் புலவரவர்கள், மீனாட்சி கல்லூரியிலிருந்தே பல ஆண்டுகள் பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்தார்கள். சேது சமஸ்தானப் புலவரான சர்க்கரைப் புலவருடைய மரபிற் பிறந்தவர்; அச்சில் வராத பல தனிப் பாடல்கள் இவருக்குத் தெரியும். செய்யுள் இயற்றுவதில் இவர் வல்லவர்; யாவரிடத்தும் இனிமையாகவும் நகைச் சுவை தோன்றவும் பேசும் இயல்புடையவர்.

1946-ஆம் ஆண்டு முதல் தமிழ்த் துறைத் தலைவராக இருந்து பணியாற்றுகின்றவர் டாக்டர். அ. சிதம்பரநாதன் செட்டியார் (எம். ஏ.) அவர்கள் ஆவர். இவர் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டிலும் நல்ல புலமை வாய்ந்தவர்; ஆட்சித் திறமை மிக்கவர்; யாவரிடத்தும் அன்புடன் அளவளாவும் உயர்ந்த பண்பாடு உடையவர். தமிழ் மொழியிலுள்ள செய்யுளிலக்கண நூல்களை ஆராய்ந்து "தமிழ்ச் செய்யுள் வரலாறு" என ஆங்கிலத்தில் ஓர் ஆராய்ச்சி நூல் எழுதியுள்ளார். "மன்ரோ", "உழைப்பால் உயர்ந்த ஒருவர்", "முன்பனிக்காலம்" என்ற உரைநடை நூல்களும் இவரால் எழுதி வெளியிடப் பெற்றுள்ளன. இவர், 1948-ஆம் ஆண்டில் இடைக்காலத் துணை வேந்தராய்த் தேர்ந்தெடுக்கப் பெற்று ஐந்து மாதங்கள் பல்கலைக் கழக நிர்வாகத்தைப் பண்புடன் பார்த்தது குறிப்பிடத்தக்கது. இங்கே குறிக்கப் பெற்றவர்களே யன்றி, இதற்கு முன்னரும் இப்போதும் இருந்து தமிழ்ப்பணி செய்தவர்களும் செய்கின்றவர்களும் சிறந்த புலமை வாய்ந்தவர்களே யாவர். எனவே, அவ்வப் பதவிக்குத் தகுதியுள்ளவர்களைத் தேர்ந்தே இப்

பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பணியாற்றும்படி அண்ணு மலையரசர் செய்துவந்தார் என்பது அறியத்தக்கது.

இப்பல்கலைக் கழகத்தில் தமிழாராய்ச்சிக் கழகம் ஒன்று உள்ளது. அதில், சிறந்த தமிழறிஞர்கள் பல ரிருந்து தமிழாராய்ந்து ஆராய்ச்சி நூல்கள் பல வெளியிட்டு வருகின்றனர். தமிழ்ச்சிறப்பு வகுப்பிலும் புலவர் வகுப்பிலும் முதன்மையாகத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கள் ஆராய்ச்சி செய்வதற்கும் அங்கு இடமளிக்கப் பட்டிருக்கிறது. தமிழ் வரலாறு, குறுந் தொகை உரை, சோழர் சரித்திரம் இரண்டு பாகங்கள், ஞாணுமிருதம், கௌடில்லிய அர்த்த சாஸ்திரம் மூன்று பாகங்கள், பத்துப்பாட்டில் சில பாட்டுக் களுக்கு ஆராய்ச்சி உரைகள் முதலியன தமிழில் வெளிவந்துள்ளன. தமிழ்ச் செய்யுள் வரலாறு, மர வழிபாடும் நாகவழிபாடும், தொல்காப்பியப் பொருளதி காரத்தில் சில இயல்கள் ஆகிய நூல்கள் ஆங்கிலத் தில் வெளிவந்துள்ளன. இன்னும் பல நூல்கள் அச்சாகி வெளிவரும் நிலையில் இருக்கின்றன. இவை யெல்லாம் வள்ளல் அண்ணுமலையாருடைய தமிழார் வத்தின் விளைவென்றே கூறலாம்.

1933-ஆம் ஆண்டு, சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழன்பர் மாநாடு நடந்தது. அம் மாநாட்டைத் திறந்து வைத்து அண்ணுமலையரசர் செய்த சொற்பொழிவில், தமிழ் வளர்ச்சி பற்றிச் சில கருத்துக்களை வெளியிட்டார். அவற்றுள், "தமிழ்மொழி காலத்திற்கேற்றவாறு முன்னேற வேண்டுமாளுல், தமிழில் சிறந்தநூல்கள் உண்டாதல் வேண்டும்; மேல்நாட்டுக் கலைகளெல்லாம் தமிழில் வரவேண்டும்; உண்மையான தமிழறிஞரை ஆத ரிக்கவேண்டும்" என்பன குறிப்பிடத் தகுந்தன.

உண்மையான தமிழறிஞரை ஆதரிக்கவேண்டும் என்று தாம் கூறியதனைத் தாமே செய்து காட்டவும் முன்வந்தார் தமிழ்ப் பெருவள்ளல் அண்ணுமலையார். சேது சமஸ்தான மகாவித்துவான் ஆர். இராகவையங்கார் அவர்கள் "பாரிகாதை" என்ற நூலொன்று இயற்றினர். அது, பண்டைத் தமிழகத்தில், அறத்தாலும் மறத்தாலும் அரும்பெரும் பண்புகளாலும் சிறந்து விளங்கிய பாரி என்னும் வள்ளலின் வரலாற்றை விரித்து விளக்கும் செந்தமிழ் நூலாகும். அந்நூலை அவர், அண்ணுமலையரசருக்கு உரிமையாக்க விரும்பியபோது, தமிழ்ப்புலவரை ஆதரிக்க வேண்டுமென்ற கருத்தால் அண்ணுமலையரசர் அதற்கு உடன்பட்டார். 14-2-1934-இல் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பெரும் புலவர்கள் பலர் குழுமிய நல்லவையில் அப்பாரிகாதை அரங்கேறிற்று. அப்போது, அண்ணுமலையரசர் தம் மூத்த புதல்வராகிய குமாரராசா சர். முத்தையாச் செட்டியார் அவர்களை அங்கு அனுப்பி, மகாவித்துவானுக்குப் பெரும்பொன் பரிசாக வழங்கும்படி செய்தார். மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதையர், பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் முதலான பெரும் புலவர்கள், அரசரையும் மகா வித்துவானையும் புகழ்ந்து பாராட்டினர். அப்போது, மகா வித்துவான் இராகவையங்கார் அவர்கள், அண்ணுமலை வள்ளலைக் குறித்துப் பாராட்டிய பாட்டுக்களில்,

"படையானே அரசெய்தல் பழியென்று பழிப்பில்பெருங்
கொடையானே அரசெய்தல் குறித்ததுநின் மதிப்பெருக்கே"

"நிதிபெய்த தந்தையினும் நீள்புனல்பெய் தமையனினும்
மதிபெய்த நின்கொடையால் வளர்ந்ததுசிற் றம்பலமே"

என்னும் பகுதிகள் அறிந்து மகிழத் தக்கன.

கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்களும், மகா மகோபாத்தியாய, பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்களும் தமிழ் நாட்டின் இரு கண் மணிபோல் விளங்குபவராதலின், இப்புலவர் மணிகள் இருவருக்கும் பொன்னுடை போர்த்துப் பெருமைப் படுத்த வேண்டுமென்று தனவணிகப் பெருமக்கள் விரும்பினர். ஆத்தங்குடியில் கவிமணிக்கும், காரைக் குடியில் பண்டிதமணிக்கும் வெவ்வேறு காலங்களில் அவ்விழாக்கள் சிறப்பாக நடைபெற்றன. புலவர் பாடும் புகழுடையோராகிய அண்ணாமலையரசர் அவ் விரண்டிடங்களுக்கும் சென்று அப்புலவர் பெரு மக்கள் இருவர்க்கும் தமது கையால் பொன்னுடை போர்த்துப் பெருமைப்படுத்தினர். அப்போது பண்டிதமணி,

“ பொன்னுடை யொன்றோ புகழாடை யும்புனையும்
எந்நாளுங் கல்வி இனிதோங்கப்—பொன்னாயும்
அண்ணா மலைப்பே ரரசன், அருந்திறல், என்
கண்ணார் மணியனையான் கை ”

என்று பாடி வள்ளல் அண்ணாமலையாரைப் பாராட்டினர்.

## 11. பட்டம், பதவி, பாராட்டு

இவ்வாறு, கல்விக் கழகங்கள், மருத்துவ நிலையங் கள், மகளிர் மன்றங்கள், கோயில் திருப்பணிகள் முத லான பொதுநலத் தொண்டிற்காகத் தமது பெரும் பொருளை வாரி வழங்கிவரும் அண்ணாமலையாருடைய அருங் குணங்களையும் பெருங் கொடையினையும் பாராட்டாதவர் இல்லை. பொது மக்களுடைய அன்

பும், பெரியோர் பலருடைய நட்பும், அரசாங்கத்தார் நன்மதிப்பும் அவரைத் தேடிவந்தன. 1910-ஆம் ஆண்டு முதலே பதவிகளும் பட்டங்களும் அவரிடம் தாமே வந்து குவிந்தன. அந்தப் பட்டம் பதவிகளால் அண்ணுமலையார் பெருமை பெற்ருரா, அவரைச் சார்ந்து அவை பெருமை யடைந்தனவா என்பது ஆராய்தற்குரியது. அறிவு திரு ஆற்றல்களில் மிக்கா ரொருவர் தந்நிலையில் தாழாமல் நின்று 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என ஒப்புரவு செய்ய முற் படுவாராளுல், உலகம் அவருக்குக் கைம்மாறு செய்யக் காத்திருக்கும் என்பதனை இப்பகுதியால் அறியலாம். இவருக்குப் பதவிகள் பட்டங்கள் வெவ் வேறு காலங்களிற் கிடைத்தனவாயினும் இத்தலைப் பின்கீழ் அவை தொகுத்துத் தரப்படுகின்றன.

காரைக்குடி நகராண்மைக் கழகத் தலைவரா யிருந்து மூன்ருண்டுகள் (1910—'13) பணியாற்றிய போது அரசாங்கத்தார் அவருக்கு "ராவ் பகதூர்" என்ற பட்டம் வழங்கிப் பெருமைப்படுத்தினர் என்பது முன்னே கூறப்பட்டது. 1912-ஆம் ஆண்டில் டில்லியில் நடைபெற்ற ஐந்தாம் ஜார்ஜ் மன்னர்பிரானுடைய முடிசூட்டு விழாவிற் கலந்து மகிழும் பெருமை அண்ணுமலையார்க்குக் கிடைத்தது. சென்னை மாகாணத்திற்குக் கவர்னர்களாய் வந்தவ ரனைவரும் இப்பெருந்தகையாளரிடம் பெருமதிப்புக் காட்டிவந்தார்கள். அவர்கள் தென்னுட்டிற்கு வரும்போதெல்லாம், இவருடைய கானடுகாத்தான் மாளிகையில் விருந்தினராய்த் தங்கி யிருப்பது உண்டு. கவர்னர் பெண்ட்லண்டு என்பவரும், அவருக்குப் பின்வந்த கவர்னர்களான வெல்லிங்டன், கோஷன், ஸ்டான்லி, எர்ஸ்கைன், ஆர்தர் ஹோப்

ஆகிய அனைவரும் இவரிடம் பெருநட்புக் கொண்டவர்கள். 1916-ஆம் ஆண்டு முதல் 1919-ஆம் ஆண்டு வரை மூன்று ஆண்டுகள் சென்னைச் சட்டசபை உறுப்பினராகவும், 1921-ஆம் ஆண்டு முதல் 1935-ஆம் ஆண்டு வரை பதினைந்தாண்டுகள் தொடர்ச்சியாக டில்லி அரசாங்க சபை (Council of State) உறுப்பினராகவும் இவர் இருந்தார். இவையும் மேலே குறிக்கப் பெற்றுள்ளன.

1920-ஆம் ஆண்டு, சென்னை, பம்பாய், வங்காளம் ஆகிய மூன்று மாகாணங்களுக்கும் பொதுவாக, இம்பீரியல் பாங்கு (Bank) ஒன்று நிறுவப்பெற்றது. "இம்பீரியல் பாங்கு ஆப் இந்தியா" என்பது அதன் பெயர். அதற்கு ஆட்சியாளராக இந்திய அரசப்பிரதிநிதி நால்வரைத் தேர்ந்தெடுத்தார். அந்நால்வருள் நம் அண்ணாமலையார் ஒருவர். சென்னை மாகாணத்தின் சார்பில் இவருக்கே அவ்வாட்சியாளர் உரிமை கிடைத்தது. பத்து ஆண்டுகள் இவர் இம்பீரியல் பாங்கு கவர்னராக இருந்தார். மேலும், இந்தியன் பாங்கிலும் (Bank), சென்னை வர்த்தக சங்கத்திலும் இவர் உறுப்பினராயிருந்தார். சுருங்கக் கூறின், இப்பெரு நிதிக் கிழவரை வரவேற்காத பொருள் நிலையங்கள் இல்லையென்றே கூறலாம்.

1922-ஆம் ஆண்டில் மீனாட்சி கல்லூரி நிறுவிய பின் இராவ் பகதூர் அண்ணாமலைச் செட்டியாருக்கு "திவான் பகதூர்" பட்டம் கிடைத்தது. அடுத்த ஆண்டாகிய 1923-இல் திவான்பகதூர் அண்ணாமலையார் "சர்" அண்ணாமலையார் ஆனார்.

அரசாங்க சபையிலும் வெளியிலும் இருந்து கல்விக்கும் பொது நலத்திற்கும் தொண்டுகள் செய்த

RAJAH
SIR ANNAMALAI CHETTIAR.
OF CHETTINAD

THE PALACE
CHETTINAD.

25. 3. 1944

உ

சிவமயம்

தேவாரப் பெரியவர்க்
தினந்தோறும் வண
ங்குகின்றேன். அவர்களுக்கு
தங்கள் பாலசுப்ரமணியன் வளர்ச்
சியை வேண்டி நானும்
சிந்திப்பேன். தமிழ்நா
ட்டுக்கு தமிழிசை
[illegible] தொண்டு செய்வது
என்று அவர். [illegible] திட்டமே;
[illegible], வருத்தம்
என் வாழ்க்கையான
கொள்கை.

உ அண்ணாமலை [illegible]

"சர்" அண்ணுமலையாருக்கு 4—3—1929-இல், தகுதியான பட்டம் ஒன்று கிடைத்தது. அதுவே "பரம்பரை ராசா" என்னும் பட்டமாகும். சர். அண்ணுமலையாருக்குப் பரம்பரை அரசர் பட்டம் கிடைத்த நற்செய்தியைச் செய்தித் தாள்களின் வாயிலாக அறிந்து பொதுவாகத் தமிழ்நாட்டாரும், சிறப்பாக நகரத்தார் மரபினரும் தத்தமக்குற்ற அரசெனத் தழைக்கின்ற மனத்தாராயினர்.

> " இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
> வகுத்தலும் வல்லது அரசு "

என்ற திருவள்ளுவரின் அருளாணைப்படி, ஈட்டல் காத்தல் வகுத்தல் என்ற மூன்றனையும் தமது வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்ட திவான் பகதூர் சர். அண்ணுமலையார், அரசர் என்னும் பட்டம் எய்தியது இயல்பேயன்றி வியப்புறத் தக்க தில்லை. முடிசூடா மன்னராகிய இவர், இம்மூன் றனையுமே தம் கொள்கையென வகுத்துக்கொண்டார் என்பதனை, இவர் கையால் எழுதிவைத்திருக்கும் கடிதத்தாற் காணலாம். இவருக்கு இப்பட்டம் 'தகும் தகும்' என்று நாடுகள் பலவும் புகழ்ந்து போற்றின ; உள்நாட்டினும் வெளிநாடுகளிலும் நடைபெற்ற உபசாரங்களும் பாராட்டுக்களும் வரவேற்புக்களும் மிகப்பலவாகும். அவற்றுட் சில குறிப்பிடத் தக்கன.

சர். அண்ணுமலைச் செட்டியார் அரசர் பட்டம் பெற்றபின் முதல் முதலாகக் காருடுகாத்தான் நகரத்தார் (5—4—1929-இல்) அவருக்குச் சிறந்த தொரு வரவேற்பு அளித்தார்கள். நகர முழுதும் நன்கு அழகு செய்யப்பெற்றது. ஆயிரக்கணக்கான பெருஞ்செல்வர்கள் குழுமியிருந்தனர். சிறந்த விருந்துகள் நடந்தபின் தமிழிலும் ஆங்கிலத்திலும்

உள்ள இரண்டு வரவேற்பிதழ்களை, முறையே நகரத்தார் சார்பாகவும், காரைக்குடி காத்தான் நகர சபையார் சார்பாகவும் படித்து இரண்டு வெள்ளிப் பேழைகளில் வைத்து அண்ணாமலையரசர்க்கு அளித்தார்கள். "தென்னாட்டு வள்ளல், இராசா சர். அண்ணாமலைச் செட்டியார் வாழ்க" என்று அன்பு முழக்கம் செய்தனர். அண்ணாமலையரசர் தமிழிலும் ஆங்கிலத்திலும் தமது அன்பு கனிந்த சொற்களால் உள்ளூர் நகரத்தாருக்கும் நகரசபையாருக்கும் நன்றி தெரிவித்தார். அதன்பின்னர், யானை குடை கொடி முதலிய விருதுகள் உடன்வர, அண்ணாமலையரசரை நகர் வலம் செய்வித்து அவருடைய அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கே குமாரராசா அவர்கள் இருந்து நகரத்தரர் எல்லோரையும் அன்புடன் வரவேற்று உபசரித்தார்.

அடுத்த நாளாகிய 6—4—1929-இல் கோவிலூரில் திருவிழாப் போன்றதொரு வரவேற்பு அண்ணாமலையரசர்க்கு அளிக்கப்பட்டது. கோவிலூர் என்பது, செல்வமும் கல்வியும் சிவமணமும் கமழ்வதொரு சிறு நகரமாகும். நாட்டுக் கோட்டை நகரத்தாரனைவரும் தம் குல நலம் பற்றிய செய்திகளை அவ்வூரிற் கூடிப் பேசித் திட்டஞ் செய்வது வழக்கம். அவர்கள் எல்லோரும் ஒருங்கு கூடிப் பொதுவானதொரு வரவேற்பளிக்க விரும்பினர். முந்நூறுபேர் வரவேற்புக் குழுவினரா யிருந்து இருபத்தையாயிரம் ரூபாய் செலவு செய்து, கொட்டகைகள் விதானங்கள் வரவேற்பு வளைவுகள் கன்னல் கதலி கமுகு கதிரொளி விளக்குகள் முதலியவற்றால் ஒப்பனை செய்தார்கள். இது கோவிலூரா! குபேரன் நகரமா! என்று கண்டோர் வியக்கும் வண்ணம் கவின் செயப்பெற்

திருந்தது. எழுபத்தாறூர் நகரத்தாரும் அன்று அங்கே கூடியிருந்தது கண்கொள்ளாக் காட்சியா யிருந்தது; அன்று பிற்பகல் 4-30 மணியளவில் மாண்புமிக்க, சீநிவாசசாஸ்திரியார் அவர்களுடன் அண்ணுமலையரசர் கானாடு காத்தானிலிருந்து காரில் வந்து சேர்ந்தனர். வழியின் இருமருங்கும் மக்கள் திரண்டுநின்று கண்டுகளித்தனர். வாழ்க, வெல்க, என்னும் வாழ்த்தொலிகள் வானை முட்டின. பாலிற் பெய்தனவும் பாகிற் செய்தனவும் முதலியனவாய், நனிபல கலங்களிற் பரப்பப்பட்டிருந்த இன்சுவைச் சிற்றுண்டி விருந்துகள் இனிது நடந்தபின், அரசரும் சாஸ்திரியாரும் மேடைக்கு அழைத்துச் செல்லப் பெற்றனர். இராமநாதபுரம் சேதுபதியரசர், புதுக் கோட்டைத் திவான், நீதிபதிகள், சென்னை மேயர், சர். ஏ. இராமசாமி முதலியார், சர். பி. டி. ராசன், தனவணிகப் பெருமக்களில் தலைசிறந்தார் சிலர் ஆகிய இவர்களும், அவ்விருவரை அடுத்தடுத்து மேடையில் அமர்ந்திருந்தார்கள். பொன்னரி மாலை கள் பூமண மாலைகளுக்கிடையே அண்ணுமலையரசர் காட்சி யளித்தனர். மகாகனம் சீநிவாச சாஸ்திரியார் அவர்கள் அக்கூட்டத்திற்குத் தலைமை வகித்து "அரிய செயலுக்கு அரிய பரிசு" என்று அரசரைப் பாராட்டினுர். வரவேற்புக் கழகத்தார், சிறந்ததொரு வரவேற்புப் பத்திரம் படித்து இருநூறு பவுனுற் செய்யப்பெற்ற தங்கப் பேழையில் வைத்து அகமும் முகமும் மலர்ந்து எழுந்த ஆரவாரத்திற்கு இடையே அரசர்பாற் கொடுத்தனர். சர். ஏ. இராமசாமி முதலியார் ஆங்கிலத்திலும், பண்டிதமணி. மு. கதி ரேசச் செட்டியார் தமிழிலும் அண்ணுமலையரச ருடைய அரிய குணஞ் செயல்களைப் பாராட்டி

வாழ்த்தினர். அரசர், அவர்கள் எல்லோருக்கும் நன்றி தெரிவித்தனர். கூட்டம் இனிது நிறை வேறிற்று.

பின்னர்த் தொடர்ச்சியாகப் பல இடங்களில் வரவேற்புக்கள் நடைபெற்றன. இலங்கையில் பெரு நிலக் கிழாரும், அறிவாற்றல்களிற் சிறந்தவரும், பொதுநல ஊழியருமான சர். பொன்னம்பலம் இராம நாதன் அவர்கள் தலைமை தாங்க, கொழும்பு நகர மண்டபத்தில், நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் அண்ணுமலையரசருக்கு அரியதொரு வரவேற்பு நடத்தினர். "இந்த அழகான தீவிற்கு இராசா. சர். அண்ணுமலையை நாம் மனமார வரவேற்கிறோம். அண்ணுமலை என்ற ஒப்பற்ற பெயருக்கேற்ப இவர் வாழ்க்கை மலைபோன்ற தோற்றமுடையதாய், ஒப்பற்றதாய், உயர்ந்த சிந்தனையும் செயலும் நிரம்பியதாய் விளங்குகிறது" என்று தலைவர் பாராட்டினுர். அழகிய வரவேற்பிதழ் வாசித்தளிக்கப் பெற்றது.

அப்பால், காரைக்குடி, சிதம்பரம், மலேயா, பிஞங்கு, கோலாலம்பூர், இரங்கூன் பல்கலைக் கழகம், செய்கோன், சிங்கப்பூர் முதலான பல இடங்களில் இவருக்கு வரவேற்புக்களும் பாராட்டுக் கூட்டங்களும் நடைபெற்றன. ஆங்காங்கு உள்ள அன்பர்களின் வேண்டுகோளை மறுக்க இயலாமல் அவ்விடங்களுக் கெல்லாம் சென்று, அவர்கள் அன்போடளித்த உபசாரங்களைப் பெற்று மகிழ்ந்தார். 1929-ஆம் ஆண்டு ஏப்பிரல் முதல் 1930,ஆம் ஆண்டு சனவரி வரை நடந்த வரவேற்புக்களும் வாழ்த்துக்களும் பல வாகும். இங்ஙனம், வெளிநாடுகள் பலவற்றிற்கும் சென்று சென்னைவந்து சேர்ந்தபோது, சர். ஏ. இராம

சாமி முதலியார், சர். ஏ. பி. பாத்ரோ முதலான பெருந்தகையாளர் பலர் கப்பற்றுறைமுகத்திற்குச் சென்று மலர்மாலே சூட்டி வரவேற்றுத் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். அண்ணுமலையரசர் அவர்களோடு அளவளாவித் தமது அடையாற்று அரண்மனைக்குச் சென்ருர்.

தனவணிக மரபிற் பிறந்த மு. அண்ணுமலைச் செட்டியார் வாணிகத்தாற் பெரும்பொருள் ஈட்டினுர்; அப்பொருளை அறநெறியிற் செலவு செய்தார்; அவ்வறத்தின் பயனுக அரசரானுர். அது மாத்திரம் அன்று; தம் வழித்தோன்றும் மக்களும் கருவிலே திருவுடையராய் அரசுரிமை பெறும் வழியும் வகுத்து வழங்கினுர். இத்தகைய பேரும் புகழும் பெற்ற அண்ணுமலையரசருடைய நகரத்தை (அண்ணுமலை நகரம்) முன்னே கண்டோம். இனி, அவருடைய அரண்மனையையும், நாட்டையும் காண்போம்.

அடையாற்று அரண்மனையானது, அடையாறு கடலோடு கலக்கும் இடத்திற்கு அணிமையில், நூற்றுப் பத்து ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப் பெற்றுள்ளது; ஏறக்குறைய இருபது லட்சம் ரூபாய் அவ்வரண்மனைக் கட்டிடத்திற்குச் செலவாகியிருக்கிறது. அண்ணுமலையார் உலகயாத்திரை செய்து ஆங்காங்குக் கண்ட சிற்பச் சிறப்புக்களை யெல்லாம் அவ்வரண்மனையில் பிறருங் கண்டுகளிக்கும்படி செய்திருக்கின்ருர். கடலும் ஆறும் அருகில் அமைந்திருப்பது அதற்கு அணிகலம் போலத் திகழ்வதாகும். அரண்மனையின் சுற்றுப்புறங்களிலுள்ள பசும் புற்றரையும் பன்னிறப் பூஞ்செடி கொடிகளும் பார்க்கப் பார்க்கத் தெவிட்டாதனவாகும். இவர், காலே மாலே நேரங்களில் அப்புற்றரையில் உலாவி வருவார். வெளி

வளைவைக் கடந்து உள்ளே சென்றால், நன்றாகச் செப்பஞ் செய்யப்பட்ட நடைவழியின் இரு மருங்கும் நிழல்தரு மரங்கள் காணப்படும். அப்பாற் சிறிது தூரத்தில் விருந்தினர் விடுதியும் அரச குமாரர்கள் தங்குதற்கு அமைக்கப் பெற்ற மாளிகைகளும் காட்சி யளிக்கும். அவற்றிற்கு எதிரில், வைரக் குன்று போல் பல அடுக்கு மாடமாளிகைகளையுடைய அரண் மனை வானளாவிய தோற்றத்துடன் நிமிர்ந்து நிற்கும். நிலைக் கண்ணாடிகளாலும், சுதைகளாலும், உலோ கங்களாலும், யானை மருப்புக்களாலும், மரத்தாலும், சலவைக் கற்களாலும் செய்யப்பெற்றுள்ள நுண் ணிய வேலைப்பாடுகள் கண்கவர் வனப்பினவாயிருக் கும். ஐரோப்பியர்க்கும் இந்தியருக்கும் விருந்துகள் நடத்துதற்கேற்ற தனித்தனி யிடங்களும் உள்ளன. அரண்மனையின் அகமும் புறமும் சிறிதும் மாசு மறுக்களின்றி எப்பொழுதும் தூய்மையாகவேயிருக் கும். வானொலிப் பெட்டி டெலிபோன் முதலான வசதிகளும் உண்டு ; அங்கிருந்தே தம்முடைய வெளிநாட்டு வாணிகத் தலங்களுக்கெல்லாம் பேசு தற்கு ஏற்ற வாய்ப்பும் உள்ளது. ஓர் அரசருடைய அரண்மனைக்கு வேண்டும் அங்கங்களெல்லாம் அதன் கண் அமைந்துள்ளன. கானாடுகாத்தான் அரண் மனையும், திருக்குற்றாலம், உதகமண்டலம் முதலான இடங்களிலிருக்கும் மாளிகைகளும் இதுபோலவே சிறந்து விளங்குவனவாம். அண்ணாமலையாருடைய மாளிகைகள் எல்லாம் திருமகள் குடியிருக்கும் செல்வ மாளிகைகளாகவே திகழும். சென்னைக்குச் செல் வோர் கண்டு களிக்க வேண்டிய சிறந்த காட்சிப் பொருள்களிற் செட்டிநாட்டரசருடைய அடையாற்று அரண்மனை ஒன்றாகும்.

செட்டிநாடு என்பது, திருச்சியிலிருந்து மாறு மதுரை செல்லும் புகைவண்டித் தொடர்வழியில் இருக்கிறது. இது வள்ளல் அண்ணுமலையாருடைய முயற்சியால் நிறுவப் பெற்றதோர் புகைவண்டி நிலைய மாகும். இந்நிலையத்திற்கு அருகில் ஆயிரம் ஏக்க ருக்கு மேல் நிலம் வாங்கிப் பண்படுத்தி நீர்நிலைகள் உண்டாக்கினர் ; சாலைகளும் சோலைகளும் அமைத் தார் ; பல வீடுகள் கட்டிக்கொடுத்து அவற்றிற் பல குடும்பங்கள் குடியேறி வாழ்வதற்கு வேண்டிய வசதி களெல்லாம் செய்து வைத்தார். இந்நிலையத்திற்கு அணித்தாக இரண்டு மாளிகைகள் உள்ளன. ஒன்று அரசர் தங்கும் மாளிகை. அதன் எதிரில் அமைந் திருக்கும் மற்ருென்று விருந்தினர் மாளிகை. திருச்சி மாறுமதுரைப் புகைவண்டிகளிற் போக்கு வரவு புரிப வருடைய கண்ணையும் கருத்தையும் இம்மாளிகைகள் கவர்ந்து நிற்கின்றன. புகைவண்டி நிலையத்தை யடுத்து வரிசையாகக் கட்டப் பெற்றிருக்கும் அழகிய வீடுகள், மூத்த பிள்ளையார் கோவில், தொடக்க நிலைப் பள்ளி முதலியன காட்சிக்கு இன்பந் தருவன. இரண்டு பர்லாங்கு தூரம் கிழக்கே சென்ருல் எழில் மிக்க மாளிகையொன்று எடுப்பாகக் காணப்படும். அது, செட்டிநாட்டரசர் ஓய்வு நேரங்களில் வந்து தங்குவதற்கு அமைக்கப் பெற்றது. அங்கிருந்து வடக்கு நோக்கினுல் வனப்புமிக்க சிறு குன்று போல் ஓங்கி நிற்கும் மாளிகை யொன்றைக் காணலாம். பளிங்கு போலத் தெளிந்த நீர் நிரம்பிய அகழி அதனைச் சூழ்ந்திருக்கிறது. மாலை நேரங்களில் தோணியைச் செலுத்திக்கொண்டு மாளிகையைச் சுற்றி இயற்கையழகைக் கண்டுகளித்தற்கு அது பயன்படுவது. இரண்டு லட்சம் ரூபாய் செலவு

செய்து கட்டி முடிக்கப்பெற்ற சிவபிரான் கோயிலும் அங்கு உள்ளது. மேலும் காணவேண்டும் காட்சிகள் பல அங்கே இருக்கின்றன.

இவ்வாறு நாடு, நகர், அரண்மனை ஆகிய அங்கங்களும் மக்கள் பாராட்டும் உடைய அண்ணுமலையாருக்கு அரசாங்கத்தார் பிறிதொரு சிறப்பும் வழங்கினர். அஃதாவது:—“அண்ணுமலையரசரும், அவர் வழித்தோன்றல்களாக வரும் அரச குமாரர்களும், தம்மைக் காத்துக்கொள்ளும் பொருட்டுக் கைத் துப்பாக்கி ஒன்றும், துப்பாக்கி ஈட்டி தாங்கிய பன்னிரண்டு வில்லைச் சேவகர்களும் வைத்துக் கொள்ளலாம்” என்பதாகும். அரசருக்கு இன்றியமையாத தான படைமதிப்பையும் இவர் பெற்றது பாராட்டற்குரியதே. “ஆண்மூலம் அரசாளும்” என முன்னேர் கூறிய முதுமொழி, நம் அண்ணுமலையார் திறத்தில் முற்றும் உண்மையாயிற்று என்பதனை இதுவரை கண்டோம். இனி, அவர் பெற்ற கலைத் துறைப் பட்டங்களையும் பாராட்டுக்களையும் காண்போம்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் சட்டமன்றத்தில் அண்ணுமலையார் வாழ்நாள் உறுப்பினராக இருந்தார். இவர் செய்துள்ள கல்விப் பணியைப் பாராட்டி அப்பல்கலைக் கழகம் 3—8—1932-இல், எல். எல். டி., என்ற சட்ட டாக்டர் பட்டம் வழங்கியது.

9-2-1942-இல் நடைபெற்ற அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் பன்னிரண்டாவது பட்டமளிப்பு விழாவில், அப்பல்கலைக் கழகச் சட்ட மன்றத்தார் அண்ணுமலையரசருக்கு டி. லிட் என்ற இலக்கிய டாக்டர் பட்டம் அளித்துப் பாராட்டினர்.

அண்ணுமலையரசர்க்கு 28-9-1941-இல், அறுபது

ஆண்டுகள் நிறைந்து அறுபத்தோராம் ஆண்டு பிறந்தது. ஆண்டின் வரையறையெல்லாம் மக்கள் உடலைப் பற்றி நிகழ்வதே. இவர் உள்ளம் என்றும் பதினாறாகவே எழுச்சியும் கிளர்ச்சியும் உடையதா யிருந்தது. வழக்கப்படி தாம் செய்து வரும் அலுவல் களிற் சிறிதுந் தளர்ச்சி கொண்டாரல்லர். இந்திய நாட்டில் அறுபதாண்டுகள் வரை உடல் நலமும், பொருள் வளமும், அறச்செயலும், பெரும் புகழும் பெற்று வாழ்பவர் மிகச் சிலரேயாவர். அண்ணாமலை யாருடைய அறுபத்தோராம் ஆண்டு பிறந்த நாளைக் கொண்டாடக் கானாடுகாத்தானிலுள்ள அரண்மனை யும், அந்நகர முழுவதும் பொன்னுலகமோ எனப் புகழ்ந்து பேசும் வண்ணம் அழகினுக்கு அழகு செய் தாற்போல் அணி செய்யப் பெற்றன. தென்னாட் டிலுள்ள அரசர்கள், அமைச்சர்கள், அரசியல் அதி காரிகள், பெருஞ்செல்வர்கள், தமிழ்ப் புலவர்கள், இசைவாணர்கள், இன்னிசைக் கருவிகள் இயம்பு வோர், மங்கல நீராட்டு நடத்தும் மறையவர் முத லான பல திறத்தாரும் அங்கே குழுமினர். விழா நிகழ்ச்சிக்கு வேண்டுவன அனைத்தும் குறைவின்றி இருந்தன. அரண்மனையின் நடுமுற்றத்தில், இந்திர விமானம் போல் எழில்பெற அமைத்திருந்த பீடத்தில் அண்ணாமலையரசரும் அவர் வாழ்க்கைத் துணைவி யாரும் வந்து அமர்ந்தார்கள். கங்கை யமுனை காவேரி வையை தாமிரவன்னி முதலான ஆற்று நன்னீர்களால் முறைப்படி நீராட்டு நடைபெற்றது. குறித்த நல்ல வேளையில் செட்டிநாட்டரசர் தம் அரசி யார்க்குத் திருமங்கல நாண் பூட்டினார். தில்லைத்திருக் கோயில் முதலான பல கோயில்களிலிருந்து வந்த திருநீறு மலர்மாலை முதலியன அவ்விருவர்க்கும்

வழங்கப் பெற்றன. அச் சாந்திவிழா நிகழ்ச்சிகள் மூன்று நாட்கள் தொடர்ந்து நடந்தன. முப்பதினாயிரவர்க்கு மேற்பட்ட மக்கள் ஒருங்கே கூடியிருந்தனர். அரசர் முதல் ஏழை ஈருக அங்கு வந்திருந்தோர் அனைவருக்கும் அவரவர் தகுதிக்கேற்ற உபசாரங்கள் குறைவின்றிச் செய்யப்பட்டன. அம் மூன்று நாட்களில் நடைபெற்ற ஆடலரங்குகளும், பாடலரங்குகளும், புலவர்கள் பாடிய வாழ்த்துப்பாக்களும், வாழ்த்துக் கடிதங்களும், தந்திகளும், அன்புக் கையுறைகளும், விருந்து வகைகளும், மக்களுடைய கண்ணுக்கும் செவிக்கும் கருத்திற்கும் நாவிற்கும் களிப்பூட்டின. அண்ணாமலையார் செய்த அறச் செயல்களுக்கு அளவில்லை. அச் சாந்திவிழாவில், கல்விக் கழகங்களுக்கும் கல்லூரிகளுக்கும் பல வகையான அறநிலையங்களுக்கும் நன்கொடையாக மூன்றரை லட்சம் ரூபாய் அவரால் மனமுவந்து வழங்கப்பட்டன. இவ்வாறு அண்ணாமலையாருடைய அறுபதாம் ஆண்டு நிறைவு விழா கானாடுகாத்தானில் இனிது நடைபெற்றது.

அப் புண்ணிய நன்னாளன்று, அவ்விழாவினை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் மிக்க சிறப்புடன் கொண்டாடினர். இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள அறிஞர்களும், அரசியல் தலைவர்களும், அன்பர்களும், வாழ்த்துரைகளும் கட்டுரைகளும் அனுப்பினர். அவற்றைத் தொகுத்துப் பதினாயிரம் ரூபாய் செலவு செய்து, ஆயிரத்திருநூறு பக்க அளவில், அண்ணாமலையரசருடைய அறுபதாம் ஆண்டு நிறைவு விழா நினைவு மலரென அச்சிட்டுப் பல்கலைக் கழகத்தார் வெளியிட்டனர். அந்நினைவு மலரை, அறுநூறு ரூபாய் மதிப்புள்ள அரிய வேலைப்

பாடுகளடங்கிய வெள்ளிப் பேழையுடன் அரசருக்கு அனுப்பினர். அவர் அந்நினைவு மலரை அன்புடன் ஏற்றுக்கொண்டு பல்கலைக் கழகத்திற்கு முப்பதினாயிரம் ரூபாய் பரிசிலாக வழங்கினார். அந்நினைவு மலரிற் சேர்க்கப் பெற்றுள்ள வாழ்த்துக் கடிதங்களிற் சிலவற்றை இங்கே காணலாம்.

காந்தியடிகள் :—"செட்டிநாட்டரசர் பயனுள்ள பணி நிரம்பிய பல்லாண்டுகள் வாழவேண்டுகிறேன்."

லார்டு எர்ஸ்கைன் (Lord Erskine) :—"அரசர் கலை வளர்ச்சியில் ஆர்வங் கொண்டவர். அதன் வடிவாகவே அண்ணாமலைப் பல்கலைக் கழகம் விளங்குகிறது. தமிழ் நாடு அண்ணாமலையரசருக்கு என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது."

டாக்டர் சி. இராசகோபாலாச்சாரியார் :—"அரசியற் கொள்கையிலும், அதைப் பின்பற்றி யொழுகும் நடை முறையிலும், செட்டிநாட்டரசர்க்கும் எனக்கும் கருத்து வேற்றுமைகள் இருந்தாலும், அதற்காக அவருடைய அளவிடற்கரிய திறமையையும் உயரிய குணங்களையும் நான் பாராட்டாமல் இருப்பவன் அல்லன். நமது தேசிய வாழ்வு முரண்பட்டதாக இல்லாமலும், நம் விருப்பத்திற்கு மாறாக நம்மீது போராட்டங்கள் சுமத்தப்படாமலும் இருந்தால், நமது பொது வாழ்வில் அரசர் அண்ணாமலைச் செட்டியார் அரிய வகையில் நமக்குத் தலைவராகி இருந்திருப்பாரென்பதில் யார் ஐயுற முடியும்?"

டில்லி பல்கலைக் கழகத் துணை வேந்தர் சர். மாரிஸ் குவயர் (Sir Maurice Gwyer) :—"அரசர் அண்ணாமலைச் செட்டியாரின் சிறந்த அறச்செயல்களை இந்தியா முழுதுமே அறியும். அவருடைய வள்ளன்மையும், அறநிலையங்கள் பலவற்றிற்கு அவர்

தந்துள்ள ஆதரவுகளும் சொல்லுக்கு அடங்காதவை. எதைப் புகழ்வதென்று தோன்றவில்லை. கல்வியுலகம் இவருக்கு நன்றி உரைக்கும் கடப்பாடுடையது,''

சர். எஸ். இராதாகிருஷ்ணன் :—'' தனி ஒருவரால் நாட்டப்பெற்ற பல்கலைக் கழகம் தங்களதே. அது பல்லாண்டுகளாக நற்பணியாற்றி வருகிறது.''

சர். சி. ஆர். ரெட்டி :—'' சிகாக்கோ ராக்பெல்லர் பல்கலைக் கழகத்தைத் தவிர, நம் செட்டிநாட்டரசர் தம் முயற்சியால் நிறுவிய பல்கலைக் கழகத்திற்கு நிகரே கிடையாது. இந்தியாவில் தனி ஒருவர் நிறுவிய கல்விக் கழகங்களில் இதுவே சிறந்தது. இவர், மற்றைய கோடீசுரர்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகிறார்? இந்நாட்டிற் சிறந்த பெரியார்களில் ஒருவராகச் சேர்த்து மதிக்கத் தக்கவர்.''

சர். டேஜ் பகதூர் சாப்ரு (Sir Tej Bahadur Sapru) :—'' இராசா. சர். அண்ணாமலையைப்போல் பிறருக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய செல்வர் மிகச் சிலரேயாவர்.''

சர். அலெக்ஸாண்டர் டாட்டன்ஹாம் (Sir Alexander Tottenham) :—'' கோயில் திருப் பணிகளே முதன்மையாகச் செய்துவந்த செட்டிமார் களுக்கு இவரும் இவர் தமையனாரும் கல்வி நிலையங் கண்டு புதிய அறவழி காட்டினார்கள். இவர் செய்துள்ள அறங்களில் மிகச் சிறந்தது அண்ணா மலைப் பல்கலைக் கழகமே. அதைத் தவிர, சென்னை மாகாணத்திலும் பர்மாவிலும் இலங்கையிலும் உள்ள பல கல்லூரிகளுக்கும் பள்ளிகளுக்கும் இவர் மிகுதி யாக நன்கொடையளித்திருக்கிறார்.''

சர். மீர்ஸா இஸ்மேல் (Sir Mirza Ismail) :—

"இராசா சர். அண்ணுமலைச் செட்டியார், சிறந்த அறச்செயல் புரிந்தவர். இவரைப்பற்றி எவரும் பெருமைகொள்ளலாம். இவர் காலம் அறிந்து உதவி செய்யும் நண்பர். இந்த மாகாணத்தின் சமுதாய வாழ்க்கையில், இவரே தலைசிறந்த உலகறிந்த பெருந்தகையாளர் ஆவர்."

இங்ஙனம் வந்த நூற்றுக்கணக்கான பெரியவர்களுடைய பாராட்டுரைகளை அந்நினைவு மலரிற் காணலாம்.

பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற அக் கொண்டாட்டத்திற்குத் தலைமை தாங்கிய மகா கனம் டாக்டர் எம். ஆர். ஜெயகர் (Rt. Hon'ble Dr. M. R. Jayakar) அவர்களும், சிறப்புச் சொற்பொழி வாளராக வந்திருந்த திரு. எம். இரத்தினசாமி (பப்ளிக் சர்விஸ் கமிஷன் உறுப்பினர்) அவர்களும் பேசிய பேச்சுக்களிற் சில பகுதிகள் அடியிற் குறிக்கப்படுகின்றன :

மகாகனம் டாக்டர். எம். ஆர். ஜெயகர் அவர்களுரைத்தது :—"இப்பல்கலைக் கழகத்தின் அழகிய கட்டிடங்களையும், நூல் நிலையத்தையும், படகு நிலையத்தையும், பந்தாடு மேடைகளையும், மாணவர் விடுதிகளையும் இன்று கண்டேன். கண்டவுடன், இப்பல்கலைக் கழக மாணவர்களாகிய உங்களைப் பார்த்து நான் முதலிற் பொருமைப்படுகிறேன்.

ஆடவரும் மகளிரும் ஒரே இடத்திற் கல்வி கற்பதற்கு இப்பல்கலைக் கழகம் வசதி அளிக்கிறது என்பதனைக் கண்டு மகிழ்கிறேன். பந்தாட்டங்கள் முதலியவற்றில் மாணவியரும் கலந்துகொள்கிருர்கள் என்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. இருபாலினரிடையேயும் ஒருவர்க்கொருவர் மதிப்பையும் அன்பை

யும் இது வளரச் செய்யும். ஒரு கல்லூரியில் மகளிர் பயில்கிருர்கள் என்ருல் அதன் காரணமாக விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் மனக் கோட்ட மின்மையும் வளரவேண்டும். இவ்வாறு இருபா லினரும் ஒருவரிடம் மற்றவர் மதிப்போடு பழகக் கற்றுக்கொள்வதன் விளைவாக, ஈண்டுநின்று வெளி யேறும் மாணவர்கள் பொது வாழ்க்கையில் கட்டாயம் வேண்டப்படுவதாகிய பொறையுடைமை யுணர்ச்சி யோடு வருங்காலத்தில் நம் நாட்டின் புறவாழ்க்கை யில் செயலாற்றுவர் என்று நம்புகிறேன். * * * இந்தப் பல்கலைக் கழகத்தில் சிறப்பாக வளர்க்கப் பெறும் தமிழ், வடமொழி, இசை ஆகிய கீழைத் திசைக் கலைத்துறைகளைப்பற்றி அறிந்துகொள்ள எனக்கு நிரம்ப ஆவல் உண்டு'' என்பதாம்.

திரு. எம். இரத்தினசாமி அவர்கள் "இராசா. சர். அண்ணுமலைச் செட்டியார் இந்தியா தேசத்தின் உயர்தரக் கல்விபற்றிய வரலாற்றிலன்றி உலக வரலாற்றிலேயே மதிப்புள்ள இடம் பெற்றுவிட்டார். அவருக்கு ஈடுசொல்ல அமெரிக்க தேசத்துப் பெருஞ் செல்வரையே கருதவேண்டிய நிலையில் உள்ளோம். ஜான் ஹாப்கின்ஸ் (John Hopkins), யோசெப் டெயிலர் (Dr. Joseph W. Taylor), ராக்பெல்லர் (Rockfeller), ஸ்டேன்போர்டு (Leeland T. Stanford) முதலிய பெருஞ்செல்வர்கள் கொடுத்த கல்வி வளர்ச்சிபற்றிய கொடைக்கு அவர்களுடைய நாட்டில், அவர்களுக்கு முன்னும் பின்னும் இணை சொல்லக்கூடும். ஆனல், செட்டிநாட்டரசரோ இதுவரை நம் நாட்டில் இல்லாததொரு புதுவகையில் இக்கொடையை அளித்துள்ளார். அவரைப் பின்

பற்றிக் கல்விக்கெனப் பெருநிதியம் அளிப்பாரையும் கண்டிலோம்" என நன்கு விளக்கிக் கூறினர்.

பல்கலைக் கழகம் நிறுவிய காரணத்தால் அண்ணுமலை யரசருடைய பிறந்தநாட் கொண்டாட்டம் பல்கலைக் கழகத்தில் ஆண்டுதோறும் நடைபெறுவது வழக்கம். அக்காலங்களில் தலைமை வகித்த தக்கார் பலராவர். அவருட் சிலருடைய பேச்சுக்களிற் சில பகுதிகளைக் காணலாம். கல்வியமைச்சராயிருந்த திவான்பகதூர் குமாரசாமி ரெட்டியார் அவர்கள், "விவிலிய நூல் 'நாம் புகழுடை மனிதரையும் நம்மைப் பெற்ற தந்தையரையும் பாராட்டுவோம்' எனக் கூறுகிறது. இந்தப் பல்கலைக் கழகத்தை நிறுவியவரும் இதன் தந்தையும் ஆகிய செட்டி நாட்டரசர் இராசா சர். மு. அண்ணுமலைச் செட்டியார் அவர்கட்குச் செலுத்த வேண்டிய கடமையைப் புரிதற்கு நாம் இவண் கூடியிருக்கிருேம். நாம் வாழும் நாளில் நம் மாகாணத்தின்கண் ஒரு பல்கலைக் கழகம் நிறுவப்பட்டுளது என்பது ஒரு சிறந்த செய்தி. செட்டிநாட்டரசரோடு இணைத்து எண்ணத்தக்க இந்தியப் பெரியார் பெயர் ஒன்றைக் காண்டல் அரிது. தொன்மைய ஆகிய ஆக்ஸ் போர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களின் கல்லூரிகள் விடுதிகள் நூல் நிலையங்கள் இவற்றை நிறுவுதற்கு உதவிய வள்ளல்களும், அமெரிக்க உயர்தர ஆராய்ச்சிக் கழகங்களை நிறுவ உதவிய வள்ளல்களும் ஆகிய சர். ஆல்பிரடு யாரோ (Sir Alfred Yarrow), பேரன்டிரெண்டு (Baron Trent), யேல் (Yale), கார்னிஜி (Carnegie), ராக்பெல்லர் (Rockfeller) ஆகியவர்களிடையே நம் அண்ணுமலை வள்ளலுக்குத் தனிப் பேர் இடம் உண்டு

என்பதை அறிஞர் ஒப்புக்கொள்வர்" என்று பாராட்டினர்.

டாக்டர். சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார் அவர்கள் "என்னுடைய மிக்க மதிப்பிற்கு உரிய நண்பர் இராசா. சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களுடைய நற்செயல்களுக்கு எனது வணக்க மான பாராட்டுதலைத் தெரிவிக்க விரும்புகிறேன். செட்டிநாட்டரசர் செய்துள்ள பெருந் தொண்டுகளைக் குறித்துத் தென்னிந்திய மேடையில் விரித்துப் பேசுதல் மிகையாகும். ஒரு பல்கலைக் கழகத்தைத் தனிப்பட்ட ஒருவர் நிறுவுதல் என்பது நாடோறும் நடைபெறும் செய்தியன்று. இந் நல்லறத்தின் பொருட்டுத் தென்னிந்தியராகிய நாம் அனைவரும் அவருக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். ஈட்டிய பெருஞ் செல்வத்தைப் பொதுமக்களின் நன்மைக்காகச் செலவிடுவதைக் காணும்பொழுது, ஒருவர் பெருஞ் செல்வம் ஈட்டுதல் தகும் எனச் சொல்லும்படி எண்ணம் உண்டாகிறது. கடவுள் அருளிய பெருநிதியத்தைப் பேணி வளர்ப்பவராகவே அவர் தம்மைக் கருதியுள்ளார். இந்தக் கலைக் கோயிலைக் கண்ட இப்பெரியாரின் நினைவினை நாம் மாத்திரம் அல்லாமல் நமக்குப் பின்வரும் பல தலை முறை மக்களும் கொண்டாடுவார்கள் என்பதில் ஐயம் இல்லை" என்று உள்ளங் கனிந்து கூறினர்.

திவான்பகதூர் டி. எம். நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் (சென்னை செர்விஸ் கமிஷன் தலைவர்) "அறிவு பெறுதற்கும், அவ்வறிவை மேன்மேலும் பெருக்குதற்கும், பெற்ற அறிவினைப் பரப்புதற்கும் உரிய வசதிகளை அளிப்பதென்பது தனிப்பட்ட ஒருவர் செய்யக்கூடிய அறங்களில் தலையாயது. இச்

சீரிய அறத்தைச் செய்யும் ஒருவர் கடவுள் ஆற்றும் பணிக்குத் துணைபுரிகின்றார்........பண்டை நாட்களில் கோயில்களுக்கு விளக்கென்றும், நிலமென்றும், பசுவென்றும் சிறு கொடை கொடுத்தார் பெயர்களையும் சிலைகளிலும் செப்பேடுகளிலும் பொறித்து நம்முன்னோர் பாராட்டியுள்ளனர். இப்பல்கலைக்கழகம் நிறுவுதற்கு உரிய பெருநிதி வழங்குதலைப்போன்ற பேரறச் செயலைக் குறித்து அவர்கள் எவ்வாறு எண்ணியிருப்பர் என்றும், எவ்வாறு எழுதியிருப்பர் என்றும் என் மனத்தாற் கருதிப்பார்க்க இயலவில்லை. இதுபோன்ற வண்கொடைகள் அரசர்க்கும் பேரரசர்க்குமே பொருந்திய உரிமைகள்..........தென்னிந்திய மக்கள் அனைவருடைய நன்றியும் செட்டிநாட்டரசர் அண்ணாமலைச் செட்டியாருக்கு உரியது" என உள்ளங் கனிந்து புகழ்ந்தார்கள்.

யோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் "உலகில் எத்தனையோ பெருங் கழகங்கள் உண்டு. சங்க காலத்திலும் இருந்தன. மாஸ்கோ முதல் சிகாகோ வரையில் உள்ள பல்கலைக் கழகங்கள் பலப்பல. அவை யெல்லாம் ஐரோப்பியக் கலைகளைத் தத்தம் நாட்டுக்காக வளர்க்கின்றன. தமிழ்க் கலையை வளர்க்கும் தாயகம் எது? நமக்கும் ஒருவர் உண்டு, ஒரு கழகம் உண்டு என்று தமிழர் பெருமை பேசச் செய்தது எது? உலக மொழிகளிடையே சிறுமை யுற்றுச் சோர்ந்த தமிழ்க் கொடிக்குக் கொழு கொம்பு தந்து வள மூட்டி வளர்த்த புண்ணியத்தாய் யார்? மூவேந்தர் வளர்த்த சங்கத்தமிழை இன்று வளர்க்கும் நான்காவது சங்கம் எது? இப்போது நாம் வீற்றிருக்கும் இந்த அண்ணாமலைப் பெருங்கழகமே. அன்பர்காள், கரிகால் வளவனும், நெடுஞ் செழியனும்

அன்று செய்த தமிழ்ப் பணியை நம் இராசா. சர். அண்ணுமலைச் செட்டியார் அவர்கள் இன்று செய்து சென்ருர்'' என்று எடுத்துரைத்தார்கள்.

## 12. பெரும்பிரிவும் அருங்குணமும்

இவ்வுலக வாழ்க்கையில் நன் மக்களால் எய்துதற்கு உரிய பட்டம் பதவி பாராட்டுக்களெல்லாம் பெற்று நல்வாழ்வு வாழ்ந்த செட்டிநாட்டரசர் அண்ணுமலைச் செட்டியார் அவர்கள் தமது அறுபத்தேழாம் வயதில் 15-6-1948-இல் இறையடி சேர்ந்தார்கள். அவரது பெரும்பிரிவு பொதுவாக இந்திய மக்களுக்கும், சிறப்பாகத் தமிழ் நாட்டவர்க்கும் ஈடு செய்ய முடியாததொரு பேரிழப்பாயிற்று. நாடு முழுதும் மக்கள் இரங்கற் கூட்டங்கள் நடத்தி வருத்தந் தெரிவித்தனர் ; அவரது நல்லுயிர் ஆரா இன்பந் துய்த்து அமைதி யுறுவதாக என வேண்டினர். அண்ணுமலையாருடைய பருவுடல் மறைந்ததாயினும் புகழுடல் என்றும் நின்று நிலவும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

அண்ணுமலையரசர் பருவுடல் மறைவு குறித்து அறிஞர் பலர் வெளியிட்ட கருத்துக்களிற் சில பகுதிகளை ஈண்டுக் காண்போம்.

திரு. டி. எஸ். கச்சாபகேச முதலியார் அவர்கள் :—'' செட்டி நாட்டரசர் அண்ணுமலைச் செட்டியார் அவர்களுடைய மறைவைக் கேட்டு, அமிழ்தினும் இனிய தமிழ்மொழி பேசும் நல்லுலகம் முழுவதும் ஆருத்துயரத்தில் ஆழ்ந்தது. அவரது பிரிவு தமிழ்நாட்டவர்க்கு ஈடு செய்ய முடியாத

பேரிழப்பாகும். இந்த நூற்றுண்டில் இணையற்ற வள்ளல் என்ற ஒரு தனிச் சிறப்பு எய்திய பெருந் தகையாவார் நமது செட்டி நாட்டு மன்னர். அவர் தமது தளரா முயற்சியாலும் சீரிய வாழ்க்கையாலும் மக்கட் பிறப்பால் எய்த வேண்டிய எல்லா நலன்களை யும் பெற்றிருந்தார். அவர், தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரானபடியால் அந்த நலன்களையெல் லாம் தமிழ் மக்களுக்கே அள்ளிக் கொடுத்து ஈத்துவக் கும் பேரின்பத்தைத் துய்த்துவந்தார். 'ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம், பேரறிவாளன் திரு' என்ற செந்தமிழ் மறைமொழி முற்றிலும் உண்மை யென் னும்படி நாடோறும் தமது வாழ்க்கையில் கண்கூடா கக் காட்டினர்."

டாக்டர். சர். ரா. க. சண்முகம் செட்டியார் அவர்கள் :—"இராசா. சர் அண்ணுமலைச் செட்டியார் அவர்கள் தமிழ் நாட்டின் தலைசிறந்த வள்ளலாய் விளங்கினர்கள். "ஊக்கமது கைவிடேல்", "திரை கடல் ஓடியுந் திரவியந் தேடு", "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற மூன்று கொள்கைகளை யும் தம் வாழ்க்கையின் சிறந்த நோக்கங்களாகக் கொண்டார்கள்; அந்நோக்கங்களை நாடோறும் வாழ்க்கையில் கடைப்பிடித்து நடந்தார்கள். வாழ்க் கையின் ஒவ்வொரு சிறிய செய்கையிலும் பெரிய நோக்கங்கள் கையாளப்படல் வேண்டும். எவ்வளவு சிறிய காரியமா யிருந்தாலும் அதனை முற்றிலுந் திருந்தச் செய்வதில் அவர்களுக்கு இணையாக எவரையும் சொல்ல முடியாது. இந்த நுட்பமான குணத்தின் பெருமையை அவரிடம் நாடோறும் காணலாம். நீதிநெறி விளக்கத்திலுள்ள பல செய் யுட்களுக்கு அண்ணுமலையரசரை மேற்கோளாக

எடுத்துக் கூறலாம். அவருடைய பண்பாடும் மிகவும் பாராட்டத் தகுந்தது. செல்வர்முதல் எளியவர் வரை எல்லோரையும் வேற்றுமை பாராட்டாமல் ஒரே தரமாய் அன்பு ததும்ப மரியாதை செய்வது அவருடைய தனிப்பட்ட குணங்களில் ஒன்ருகும். தமிழ் நாட்டுக்கு அவர் செய்த தொண்டினைத் தமிழ் மக்கள் எந்நாளும் மறக்க முடியாது. தமிழ்க் கலை களைப் போற்றி வளர்த்த வள்ளல்களுக்கிடையே அவர் முதன்மை யிடத்தைப் பெற்றுவிட்டார்.''

மகாமகோபாத்தியாய, பண்டிதமணி மு. கதி ரேசச் செட்டியார் அவர்கள் :—''செட்டி நாட்டரசர் அவர்கள் ஊக்கம், உறுதி, உணர்ச்சி, அருஞ் செயலின் ஆக்கம், அறிவு, அருள், அன்பு, ஆண்மை முதலிய உயர்ந்த குணஞ் செயல்களுக் கெல்லாம் நிலையமாக விளங்கிஞர்கள். அவர்கள் மேற் கொண்டது எத்தகைய அருஞ் செயலாயினும் அதனைப் பல்லாற்ருனும் சூழ்ந்து தெளிதலும் விரைந்து முடித்தலும் அவர்கள் இயல்பு. ஒரு நல்ல காரியத்தை முடிக்க வேண்டு மென்று எண்ணிஞல் 'செய்தொழில் பயஞல் உரைப்பரே யன்றித் தெளி குநர் உரையிஞல் உரையார்' என்றபடி அதனைப் பற்றி நாவிஞல் விரிவாகப் பேசிய அளவில் ஒழியாது பயன் விளைக்கும் முகமாகச் செயலில் முடித்துக் காட்டும் திறமையுடையவர்கள். பெருஞ் செல்வ ராகவும் இடையருமற் பணியாற்றும் இயல்பின ராகவும் இருந்தும், காட்சிக்கு எளியராகவும், கடுஞ்சொல் இல்லாதவராகவும் விளங்கிய அருமை பாராட்டத்தக்கது. அவர் வாழ்நாளில் ஒவ்வொரு நாளிலும் செய்யத்தக்க காரியங்களுள் இன்ன இன்ன காரியத்தை இன்ன இன்ன நேரத்திற் செய்வ

தென்று வரையறுத்துக்கொண்டு செய்து வந்தார். இராசா சர். அவர்கள் பிறரோடு உரையாடுதலிலும், பிறர் எழுதிய கடிதங்களுக்கு அவ்வப்போது மறுமொழி எழுதுவதிலும், தம்பால் வந்தோரைச் சிறந்த முறையில் உணவூட்டி உபசரித்தலிலும் நிகரற்ற பெருமை வாய்ந்தவர்கள். இத்துறைகளில் அவர்கள் நாகரிகம், அறிவுடைப் பெருமக்கள் எல்லோராலும் பாராட்டப்பெற்றுவந்தது. மக்களுக்குச் செய்யும் ஒப்புரவறங்களுள், கலைக் கண்ணைத் திறந்து வைத்தலே சிறந்ததாகும் எனக் கொண்டு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவி அதனை உயிர்போலப் பேணி வந்தார்கள்; தமிழ் இசையின் சுவையை உலகம் உணர அரும்பாடு பட்டார்கள். மேலும் அவர்கள் அறங்கள் எல்லையில்லாதன. பொருளால் அறத்தை வளர்த்துப் புகழ்பெற்ற பெரியார் தென்னாட்டில் அண்ணாமலை அரசர் அவர்களே.''

நாவலர் திரு. சோமசுந்தர பாரதியார் அவர்கள் :—'' அருந்திறற் பெருந்தகை அண்ணாமலை அரசர் அவர்கள் பெரும்பிரிவுற்றதற்கு வருந்தார் இருந்திரார். பிறப்பவர் இறப்பது இவ்வுலகத்தியல்பு. மாண்ட பிறப்பெய்தி மறைவது மாந்தருட் சான்றோர் சிறப்பு. அவ் வரும்பெறற் பரிசுக்குரிய பெரியார் அண்ணாமலை அண்ணல் ஆவர். பெருங்குடி வணிகர் அருங்குல விளக்காய்த் தோன்றிய இவர், பழைய தமிழ்ச் சான்றோர் சால்புகளை நெகிழாமல் ஓம்பி, முன்னேறும் மேனாட்டார் புதுமுறைகளில் தீதகற்றி நல்லனகொண்டு, கையாண்டு, ஒல்லும்வாயெல்லாம் ஓவாது அறவினை செல்லும்வாய் நோக்கிச் செய்துயர்ந்த செம்மல் ஆவார்.''

" கல்கி " ஆசிரியர், ஆர். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் :—" ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அண்ணாமலை யரசர் அவர்கள் பிறந்திருந்தால், அரிய வீரச் செயல்கள் பல புரிந்து அரசியல் அறிவிற் சிறந்து விளங்கிப் பல அரசர்களுடைய நன்மதிப்பைப் பெற்றுத் தமக்கென ஒரு பெரிய அரசாங்கத்தையே அமைத்துக் கொண்டிருப்பார்கள் ; நான்கு திசைகளிலும் கடல் கடந்த நாடுகளிலும் தம்முடைய வெற்றிக்கொடி வீறுகொண்டு பறக்கும்படி செய்திருப்பார்கள்."

கொழும்பு நகர மண்டபத்தில் 30-10-48-இல் நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில், இலங்கை உதவிக் கல்வி அமைச்சர் திரு. க. கனகரத்தினம் அவர்கள் பேசிய பேச்சின் ஒரு பகுதி :—

" செட்டிநாட்டரசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தமக்கு வாய்த்த வாழ்வென்னும் சிற்றெல்லைக்குள்ளே அரிய பெரிய காரியங்கள் பலவற்றைச் செய்து முடித்துவிட்டார்கள். பொது நலத் தொண்டு செய்ய விரும்பும் நம்மவர்கட் கெல்லாம், அவருடைய திறமை வாய்ந்த வாழ்க்கையினின்றும் கற்றுக்கொள்ளவேண்டும் சிறந்த பாடங்கள் பல இருக்கின்றன. அவர் இளமைப் பருவ முதலே அறச்செயல் புரிந்து அதிலே ஒரு சுவையைப் பழகிக் கொண்டார். ஈத்துவக்கும் இன்பம் எல்லோர்க்கும் வாய்க்குமா ? முன்னைத் தவத்தின் பயனன்றோ அது ; ஆண்டு முதிர முதிர அவர் செய்யும் அறங்களும் பெருகின. அவருடைய ஒப்பற்ற வண்மைச் செயல்களையும் அழியாப் புகழையும் புலவர்கள் பாராட்டிப் பாட்டிற் பொதிந்து கமழ வைத்திருக்கிறார்கள். அவருடைய பெயராய் எத்துணையோ அற

நிலயங்கள் செழித்து நிற்கின்றன. அண்ணுமலை நகரில் உயர்ந்தோங்கி நிற்கும் கலைக் கோயிலும், தமிழ்நாட்டெல்லையெல்லாம் பரந்து பெருகி நிற்கும் தமிழிசை இயக்கமுமே நம் உள்ளத்தில் அவரை ஒருபோதும் மறக்க முடியாமல் நன்றி யுணர்ச்சி என்னும் பேரன்பினுல் பிணித்து நிற்பன. ஒன்றரைக் கோடிக்கு மேற்பட்ட பொருளை நன்னீராகப் பாய்ச்சிக் கலைக்கோயில் முதலான அறப்பயிர்கள் வளர்த்த அம் மாபெரும் வள்ளலின் வான்புகழ் என்றும் வாழ்வதாக'' என்பதாகும்.

சென்னை மாநகரத்தில் கவர்னர் நை அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்ற மாபெருங் கூட்டத்திலும், அண்ணுமலை நகரில் துணைவேந்தர் இரத்தின சாமி அவர்கள் தலைமையில் நடந்த பெருங் கூட்டத்திலும், வேறு பல இடங்களில் நடந்த கூட்டங்களிலும் வள்ளல் அண்ணுமலையரசருடைய மாண்பு மிக்க குணஞ் செயல்களைத் தக்கார் பலர் விரித்துப் பேசி அவரது பிரிவு குறித்து வருத்தம் தெரிவித்தனர்.

பொதுமக்கள் நலத்தின் பொருட்டு ஒன்றரைக் கோடிக்கு மேற்பட்ட பொருளை உவப்புடன் உதவிய தமிழ்ப்பெரு வள்ளல் அண்ணுமலையரசருக்குத் தமிழ் மக்களாகிய நாம் செய்யுங் கைம்மாறு ஒன்றுமில்லை யாயினும், ‘‘நன்றி மறப்பது நன்றன்று'' என்ற தெய்வப்புலவர் ஆணையை நினைவிற் கொண்டு, நம் நாட்டுத் தலைநகரங்களிலும் பிற இடங்களிலும், அவர் பெயரால் பொது மன்றங்கள் அமைக்கலாம்; பூங்காக்கள் வளர்க்கலாம்; கல்விக் கழகங்கள் காணலாம்; கலைபயில் மாணவர்களுக்கு உதவிச் சம்பளங்கள் உதவலாம்; பரிசுகள் வழங்கலாம்; ஒப்பற்ற அவருடைய உருவச் சிலைகள் நாட்டலாம்; உருவப்

படங்கள் திறக்கலாம். இவைபோன்ற நினைவுச் சின்னங்களால் நம்முடைய நன்றியறிவைப் புலப் படுத்துவோமாக.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்நாட்டு வரலாற்றில், தன்னேரில்லாத் தலைவரெனப் பொன்னெழுத்துக்களாற் பொறித்து வைக்கத் தகுந்த அண்ணுமலையரசர்பால் அமைந்திருந்த அருங்குணங்களில் முன்னே குறிக்கப் பெருதன பலவுள்ளன. அவற்றுட் சிலவற்றை இனிக் காணலாம். இவருடைய பேரறச் செயல்களெல்லாம் குலம் மதம் கொள்கை நாடு என்னும் வேறுபாட்டினைக்கடந்து நின்றன. மதுரையிலுள்ள இந்துக் கல்லூரியாகிய மதுரைக் கல்லூரிக்கு ஐம்பதினுயிரம் ரூபாய்க்கு மேல் இடம் வாங்கிக் கொடுத்து, அதிற் கட்டிடங் கட்டுதற்கும் பொருள் உதவி செய்தார். மதுரை அமெரிக்கன் கல்லூரிக்கு மாணவர் விடுதியொன்று கட்டிக் கொடுத்தார் ; அது "ராவ் பகதூர் ஹாஸ்டல்" என இன்றும் வழங்குகிறது. பசுமலையிலுள்ள அமெரிக்க மிஷன் உயர்நிலைப்பள்ளிக்கு இவர் அவ்வப்போது செய்த உதவிகள் பல. திருச்சிராப்பள்ளியிலுள்ள தேசீய உயர்நிலைப் பள்ளி, சென்னையிலுள்ள பின்னத்தூர்ச் சுப்பிரமணிய ஐயர் உயர்நிலைப்பள்ளி, இராமகிருஷ்ண கல்வி நிலையம், சேவாசதனம், இந்தியன் செஞ்சிலுவைச் சங்கம், கிறித்தவ வாலிபர் சங்கம், டில்லியிலுள்ள இர்வின் பாடசாலை, மகளிர் கல்விக் கழகங்கள், கொழும்பு பர்மா இவற்றிலுள்ள கல்வி நிலையங்கள் ஆகிய இவற்றிற்குப் போதிய பொருளுதவி செய்துள்ளார். டோராடூனிலுள்ள இந்தியப் பொதுமக்கள் கல்விச்சாலைக்குச் சற்றேறக்குறைய அரை லட்சம் ரூபாய் நன்கொடையாக வழங்கினர். சாந்தி

நிகேதனத்திற்கு இரண்டாயிரம் புத்தம் புதிய தமிழ் நூல்களைப் பரிசாகக் கொடுத்துதவினர்; அதனல் தமிழ்மணம் அங்கே கமழ்கின்றது. கலைக்களஞ்சிய வெளியீட்டிற்கு ஐயாயிரம் அளித்தார். இன்னும் எத்துணையோ வாசக சாலைகள், பாட சாலைகள், சங்கங்கள், சபைகள் முதலியவற்றிற்கு வழங்கிய தொகைகள் வரம்பிலவாகும். உலகப் பெரும் போர் இரண்டிற்கும் உதவியாக இவர் பெரும்பொருள் நல்கியதும் உண்டு. சிவன் கோயில் திருப்பணிகளேயன்றித் திருமால் கோயில் திருப்பணிகளும் செய்துள்ளார். இவையெல்லாம் இவருடைய பொது நோக்கைப் புலப்படுத்துதற்குப் போதிய சான்றுகளாகும்.

இவர் "எண்ணித் துணிக கருமம்" என்றபடி எதனையும் நன்கு ஆராய்ந்த பின்னரே செய்யத் தொடங்குவார். தொடங்குதற்குமுன், இதனல் நமக்கு விளையும் நலன்கள் யாவை? நம் இனத்தார்க்கு உண்டாகும் பயன்கள் என்ன? இது நாட்டிற்கு எவ்வாறு நன்மை பயக்கும்? எனப் பலவுஞ் சூழ்ந்து செய்தலன்றித் தந்நலம் ஒன்றையே கருதி எதனையும் இவர் செய்வதில்லை. "நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை" என்ற நுட்பத்தை நன்கறிந்தமையும், விரிந்த மனப்பான்மையுமே இவ்வாறு எண்ணுதற்கு ஏதுவாயின.

சிலர் தம்முடைய ஆற்றலுக்கு மேற்பட்ட செயலையும் செய்வோமென எளிதாகச் சொல்லுவர்; சொல்லிய வண்ணஞ் செய்துகாட்டல் மிக மிக அரிதாகவே இருக்கும். இதற்கு மாறுன நிலையில் அரசர் அண்ணுமலையார் விளங்கினர். இவர் ஒன்றனைச் செய்வதாக யாவரிடத்தும் எளிதிற் சொல்லுவதில்லை; சொன்னல், அஃது எத்துணை

அரியதாயினும் அதனைச் செய்து முடிக்காமல் விடுவதில்லை. ஆகவே, சொல்லுதல் அரிது, செய்தல் எளிது என்பது இவர்பாற் காணப்பட்டதோர் சிறந்த பண்பாகும்.

ஒருவர் பதினாயிரம் ரூபாய்ச் செலவில் ஒரு மருத்துவசாலை அமைக்க விரும்புகிறேன் என்று இவரிடம் அறிவிப்பாராயின், அவருக்கு இவர் கூறும் அறிவுரைகள் யாவருக்கும் பயன் விளைப்பனவாய், எல்லோரும் அறிந்து மேற்கொள்ளத் தக்கனவாயிருக்கும். " ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற அறஞ் செய்தல் வேண்டும்; அறத்தைக் காட்டினும் உயிர்க்கு உறுதுணையாவது பிறிதொன்றில்லை. தாங்கள் ஒப்புரவு செய்ய முற்பட்டிருப்பது நல்லதே. ஆயினும் ரூபாய் பதினாயிரத்தையும் கட்டிடங் கட்டுதலிற் செலவிட வேண்டாம். மூவாயிரத்திற் கட்டிடத்தை முடியுங்கள். எஞ்சிய ஏழாயிரத்தை அம்மருத்துவ நிலையத்திற்கு வைப்பு நிதியாகச் சேமித்து வையுங்கள் " என்று அறிவுரை கூறுவார். இதனால் எவ்வித மான நற்செயல் செய்தாலும் அது நீடித்து நடைபெறுமாறு திட்டம் வகுக்க வேண்டும் என்பதே இவர் கருத்தாகும் என அறியலாம்.

இனி, இவரிடம் சிறப்பாக அமைந்திருந்ததொரு பண்பு நினைவாற்றலாகும். ஒருவரை ஓரிடத்தில் ஒரு முறை கண்டு உரையாடியிருந்தால், அவரை எத்துணையாண்டுகள் கழிந்தபின்னர்க் காண நேர்ந்தாலும், முன்னர்க் கண்டு பேசிய காலம் இடம் கருத்து முதலியவற்றைத் தெளிவாக எடுத்துரைக்கும் நினைவுத் திட்பம் உடையவராக விளங்கினர். இஃது எல்லோருக்கும் வாய்த்தல் இயலாது.

சிலர் பழமை யொழுக்கங்களில் அழுந்திய பற்று

வைத்துப் புதுமையை அறவே வெறுத்தொதுக்குவர். வேறு சிலர் புதிய நாகரிகங்களில் மோகங் கொண்டு பழமையை அறவே கைவிட்டிருப்பர். வள்ளல் அண்ணுமலையார் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ற வாறு பழமை நலமும் புதுமையெழிலும் தழுவியொழு கும் பண்பாடு உடையவராக இருந்தார்.

''அண்ணுமலையரசர் அவர்கள் கிழக்கும் மேற் குங் கலந்த கரும வீரர். அவருக்கு முற்கால வழக்கங் களுந் தெரியும். இக்கால நாகரிகமுந் தெரியும். ஓலையிலும் விரைவாக எழுத்தாணி ஓட்டத் தெரியும். காகிதத்திலும் ஊற்றுக்கோல் நடத்தத் தெரியும். அவர் தில்லை அம்பலவாணர் திருமுன்னரும் வரன் முறை பிறழாமல் வழிபடுவார். டில்லி அரசாங்க சபையிலும் நவ நாகரிகப் பொலிவுடன் விளங்குவார். அவர் தேவாரத் திருமுறைகளைக் கேட்டு உருகுவார்; கோயில் திருப்பணியிலும் முதன்மை பெறுவார். தமது குலத்தொழிலாகிய வாணிகத் துறையிலும் விட்டுக் கொடுக்காமல் சீமை வரையில் எட்டிப் பிடித் துக் காரியத்தைச் சாதித்தே தீர்ப்பார். அவர் குறிப்புப் பேரேட்டிற் குறிப்பாயிருப்பார்; இம்மி விடாமற் கணக்குப் போடுவார். அள்ளியள்ளிக் கொடுப்பதிலும் மகிழ்ச்சியடைவார். அவர் வீட்டிலுந் தலைவர்; நாட்டிலுந் தலைவர்.'' என, யோகி சுத்தா னந்த பாரதியார் அவர்கள் பாராட்டியிருத்தலால் இவர் காலம் இடம் அறிந்தொழுகுந் திருந்திய நிலை யுடையர் என்பதை நன்குணரலாம். இதுகாறுங் கண்ட அண்ணுமலையாருடைய அருங்குணங்களில், வேந்தர்க்கு இயல்பு என விதந்து கூறப்பட்ட அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் என்னும் நான்கு பண்புகளும் விஞ்சிநின்று விளங்குதல் காணலாம்.

யாண்டு பலவாக நரையிலவாகுதல் நுமக்கு எற்றினுன் ஆயிற்று எனப் பிசிராந்தையார் என்னும் தமிழ்ப்பெருஞ் சான்றோரை வினவியபோது, அவர் தமது நரையின்மைக்குக் காரணமாகக் கூறிய நலங்கள் பலவற்றுள் முதன்மையாக எடுத்தோதியது " மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர் " என்பதேயாகும். எனவே, ஒருவருடைய இல்வாழ்வு நல்வாழ்வாதற்கு மனைமாட்சியும் நன்மக்கட்பேறும் இன்றியமையாது வேண்டற்பாலன என்பது சொல்லாமலே விளங்கும். அண்ணுமலையரசருடைய அருங்குணங்களையும் பெருஞ் செயல்களையும் அறிந்த நாம், இனி அவருடைய குடும்பச் சிறப்பினையும் ஒருவாறு தெரிந்துகொள்ளுவோம்.

குடும்ப வாழ்விலே கண்ணுங் கருத்துமாயிருப்பார் சிலர் பொதுவாழ்விற் சிறிதும் ஈடுபட மாட்டார்கள். பொதுவாழ்வில் ஈடுபட்டுப் புகழ் பெற்றிருப்பார் சிலர்க்குக் குடும்ப வாழ்க்கை வெறுங் கசப்புத் தருவதாகவே இருக்கும். ஆனல், அண்ணுமலையார் அவ்விருதிறத்தார்க்கும் மாருக, தனி வாழ்விற் சீரும் சிறப்பும் பெற்றுப் பொது வாழ்விலும் பேரும் புகழும் பெற்று விளங்கிஞர். இந்நிலை எல்லோர்க்கும் வாய்ப்பது அரிது. அவருடைய மனைமாட்சி முன்னர்க் (முதற்பகுதியில்) கூறப்பட்டுள்ளது. மக்கட் செல்வம் ஈண்டுக் கூறப் பெறுகின்றது. இதுவும் அவருடைய பெருமையை விளக்குவதேயாம்.

அண்ணுமலையரசர்க்குப் பெண்மக்கள் நால்வர், ஆண்மக்கள் மூவர் ஆக மக்கள் எழுவர் உள்ளனர். பெண்மக்கள் நால்வரும் பெருஞ் செல்வக் குடும்பங்களில் மணஞ்செய்து கொடுக்கப்பெற்று

நல்வாழ்வு வாழ்ந்து வருகின்றனர். ஆண்மக்கள் மூவரில் மூத்த புதல்வர் இப்பொழுதைய செட்டி நாட்டரசர் இராசா. சர். முத்தைய செட்டியார் அவர்கள்; இரண்டாவது புதல்வர் முன்னர்ச் சென்னை ஷெரிப்பாக இருந்தவரும் பின்னர் மேயராயிருந்தவரும் ஆகிய திரு. இராமநாதன் செட்டியார் அவர்கள்; மூன்ருவது புதல்வர் சிறந்த வாணிகத் திறமையுடையவரும் சென்னைத் தமிழிசைச் சங்கச் செயலாளரும் ஆகிய திரு. சிதம்பரம் செட்டியார் அவர்கள்.

இராசா. சர். அண்ணுமலைச் செட்டியார் அவர்களுடைய முதல் மகனுர் இராசா. சர். முத்தைய செட்டியார் அவர்களே இப்பொழுது பல்கலைக் கழகத்தின் புரவலர். இவர் சிறந்த தமிழ்த் தலைவர்; இளமையிலேயே கல்வியில் ஆர்வங்கொண்டு தமது பத்தொன்பதாம் வயதில் (1924-இல்) பி. ஏ. பட்டம் பெற்ருர்; அதுமுதல் வாணிகத் தொழிலிலும் பொதுநலப் பணிகளிலும் ஈடுபட்டுத் தம் கடமைகளைச் சோர்வின்றிச் செய்து வருகின்றனர்.

இவர், 1929-ஆம் ஆண்டு முதல் ஆருண்டுகள் சென்னை மாநகர மன்ற ஆட்சிக் குழுவில் உறுப்பினராயிருந்தார்; உறுப்பினர் பதவி பெற்ற மூன்ருண்டுகளுக்குள் அந்நகரின் முதல் மேயராகத் தேர்ந்தெடுக்கப் பெற்ருர். இருபத்துநான்கு ஆண்டுகள் நிரம்பிய ஓர் இளைஞர் சென்னை நகர மன்றத்தின் உறுப்பினரானதும், தமது இருபத்தேழாம் வயதில் (1932-33-இல்) முதல் மேயர் பதவி பெற்றுச் சிறப்புற்றதும் குறிப்பிடத்தக்கன. இராசா. சர். அண்ணுமலைச் செட்டியாருடைய தலைமகனுர், சென்னை மாகாணத்தின் தலைநகருக்கு இளம்

பருவத்திலேயே தலைவராய் அமர்ந்தது பாராட்டத் தகுந்த செய்தியாகும். இவர் மேயர் பதவியில் இருந்த காலத்தில் சென்னை நகரிற் செய்த திருத்தங்களும், நகர மக்களுக்குச் செய்த நலங்களும் பல ஆதலின், இரண்டாவது முறையும் (1934-35) மேயராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். இவர் முதல் மேயராக விளங்கிய காரணத்தால் இவருடைய முழு உருவப் படம் நகரசபை மண்டபத்தில் திறந்து வைக்கப் பெற்றுள்ளது: இந்தப் பெருமை சிலருக்குத்தான் உண்டு.

1930-ஆம் ஆண்டுமுதல் இவர் சென்னைச் சட்ட சபையின் உறுப்பினராக இருந்துவருகிறார். 1936-37-இல் சென்னை மாகாணக் கல்வி, சுகாதார அமைச்சராக வீற்றிருந்து செயலாற்றினர்; கல்வி அமைச்சர் என்ற முறைபற்றிச் சென்னைப் பல்கலைக் கழகத்தின் புரவலர் ஆனார். ஒரே காலத்தில் தந்தையார் அண்ணமலைப் பல்கலைக் கழகத்திற்குப் புரவலராகவும், மைந்தர் சென்னைப் பல்கலைக் கழகத்திற்குப் புரவலராகவும் விளங்கியது வியந்து பாராட்டத்தக்கது.

பச்சையப்பர் அறநிலையங்களை ஆட்சி செய்யும் உறுப்பினர் ஒன்பதின்மர் அடங்கிய குழுவில் 1928-ஆம் ஆண்டுமுதல் இவர் உறுப்பினராயிருக்கின்றார். இவர் சில ஆண்டுகள் அவ்வறநிலையப் பாதுகாப்புக் குழுவிற்குத் தலைவராகவும் இருந்தார். அக்காலத்தில், கவர்னர் ஹோப் என்பார் தலைமையிற் பச்சையப்பர் கல்லூரியின் நூற்றாண்டுவிழா மிகச் சிறப்பாக நடை பெற்றது.

1929-ஆம் ஆண்டில் இவருடைய தந்தையார் அகில, இந்திய பாங்கின் விசாரணைக் கமிட்டியில் ஒரு



புரவலர்

இராஜா சர். மு. அ. முத்தைய செட்டியார் அவர்கள், B.A., M.L.A.,

வராயிருந்தபோது, இவர் சென்னை மாகாண பாங்கின் விசாரணைக் குழுவின் உறுப்பினரா யிருந்தார். இவர் அறிவாற்றல்களிற் சிறந்தவராதலின் தமது இருபத்தெட்டாம் வயதிலேயே இம்பீரியல் பாங்கின் டைரக்டர் பதவி பெற்று, பல ஆண்டுகளாக அப்பதவி யிலிருந்து நற்றொண்டு ஆற்றி வருகின்றார்; இந்தியன் பாங்கிலும் சில காலம் சிறந்த பணியாற்றி யுள்ளார். இவர், 1941–'42-இல் தென் இந்திய வாணிக சங்கத்தின் தலைவராக இருந்து ஊக்கத்துடன் உழைத்தார்; 1943–'44-ஆம் ஆண்டில் அகில இந்திய வர்த்தக சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். இதுவும் மிகச் சிறந்ததொரு பதவியென்றே கூறலாம். இவர் அப்பதவியைச் சிறப்புற நடத்தி அச்சங்கத்தின் ஆண்டு நிறைவுவிழாக் கூட்டத்தில் டில்லியில் ஓர் அருமையான சொற்பொழிவு நிகழ்த்தினார். பொருளாதார நுட்பங்களும் அரசியல் நுணுக்கங்களும் அதில் நிரம்பியிருந்தனஆதலின் இந்திய நாடேயன்றி ஏனைய நாடுகளும் அதனைப் புகழ்ந்து பாராட்டின. இவருடைய தொடர்பில்லாத பாங்குகளோ வர்த்தக சங்கங்களோ தென்னாட்டில் இல்லை. தம் தந்தையாரால் நிறுவப்பெற்ற வாணிக நிலையங்களெல்லாம் இவரது மேற்பார்வையில் இருக்கின்றன.

இவருடைய அறிவாற்றல்களையும் பொதுநலப் பணிகளையும் புகழ்ந்து அரசாங்கத்தார் 12-6-1941-இல் இவருக்கு "சர்" பட்டம் அளித்துப் பெருமைப் படுத்தினார்கள். தந்தையாரும் மைந்தரும் ஒரு காலத்தில் 'சர்' பட்டம் பெற்று விளங்கியதும் குறிப்பிடத் தக்கதாகும். இன்னும் இவர் சென்னைப் பல்கலைக் கழகச் சட்ட மன்றத்தினர் குழுவிலும் ஆட்சி

யாளர் குழுவிலும் உறுப்பினராய் அமர்ந்து பணி யாற்றினர். அரசப் பிரதிநிதியின் தேசீயப் பாது காப்புக் குழுவின் உறுப்பினராகவும் நியமிக்கப் பெற்றிருந்தார். இரண்டாவது உலகப்போர் முடிந்த பிறகு தேச முன்னேற்றத் திட்டத்தை வகுக்கும் தலை மைச் செயற்குழுவிலும் இவர் இடம் பெற்றிருந்தார்.

இராசா. சர். அண்ணுமலைச் செட்டியார், தந்தை மகற்காற்றும் நன்றியாகிய அவையத்து முந்தி யிருத்தும் செயலைச் செய்தார். அவருடைய மைந்தர்கள் இந் நன்மக்களைப் பெறுதற்கு இவர் தந்தையார் என்ன தவம் செய்தாரோ என்று பலரும் பாராட்டும்படி வாழ்ந்து வருகின்ருர்கள்.

இங்ஙனம், அறிவறிந்த நன்மக்களைப் பெற்று மகச் செல்வத்தாலும் பெருஞ்சிறப்புற்று விளங்கிய இராசா. சர். அண்ணுமலைச் செட்டியார் அவர் களுடைய அழியாப் புகழும், அப்புகழுக்குக் காரண மாகிய அற நிலையங்களும், அவற்றைப் போற்றிப் புரந்துவரும் நன்மக்களும், வழித்தோன்றல்களும் நீடு வாழ்க என வேண்டுவோமாக.

---

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# பிற்சேர்க்கை

## குறிப்பிடத்தக்க ஆண்டுகள்

30-9-1881—அண்ணுமலையரசர் பிறந்தார்.

1895—திருமணம் நடைபெற்றது.

1910-'13—காரைக்குடி நகராண்மைக் கழகத் தலைவராயிருந்தார்.

1911—முதல் முறை இங்கிலாந்து சென்ருர்.

1912—ராவ்பகதூர் பட்டம் பெற்ருர்.

1916-'19—சென்னைச் சட்டசபை உறுப்பினராயிருந்தார்.

1920—மீனுட்சி ஆங்கிலக்கல்லூரி தொடங்கப்பெற்றது.

1920-'30—அனைத்து இந்திய இம்பீரியல் பாங்கு கவர்னராயிருந்தார்.

1922—திருவேட்களத்தில் மீனுட்சி ஆங்கிலக்கல்லூரிக் கட்டிடம் தொடங்கப் பெற்றது.

,, திவான் பகதூர் பட்டம் பெற்ருர்.

1923—சர் பட்டம் பெற்ருர்.

1927—மீனுட்சி தமிழ்க்கல்லூரி, மீனுட்சி வடமொழிக்கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி—இவைகள் நிறுவப் பெற்றன.

1928—பல்கலைக் கழகச் சட்டம் நிறைவேறியது.

1929—அண்ணுமலைப் பல்கலைக் கழகம் தோன்றியது.

,, பரம்பரை இராசா பட்டம் பெற்ருர்.

,, இசைக் கல்லூரி அமைத்தார்.

1932—சென்னைப் பல்கலைக் கழகம் எல். எல். என்ற டாக்டர் பட்டம் வழங்கியது.

1935—இரண்டாம் முறை இங்கிலாந்து முதலிய ப நாடுகளுக்குச் சென்று திரும்பினர்.

1941—60-ம் ஆண்டுத் திருமணம் நடைபெற்றது

,, தமிழிசை இயக்கம், தமிழிசை மாநாடுக நடந்தன.

1942—அண்ணுமலைப் பல்கலைக் கழகம் டி. லிட் என்ற டாக்டர் பட்டம் வழங்கியது.

1943—சென்னைத் தமிழிசைச் சங்கம் நிறுவ பெற்றது.

15-6-1948—அண்ணுமலையரசர் இவ்வுலக வாழ் நீத்தார்.

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

Univ Grants Commission.

...ITY EXTENSION LIBR...